பக்கங்கள்: இருபத்துநான்கு + A,B

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 04 வியாழக்கிழமை (21.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 329

# போர் முடிவடைந்து விட்டாலும்

# மக்கள் மகிழ்ச்சியாக இல்லை

## ஐரோப்பிய பிரதிநிதிகள் யாழ். நகரில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21

தாம் நேரடியாகப் பார்த்தும் கேட்டும் அறிந்து கொண்ட வகையில், போர் முடிவடைந்த போதும் பொதுமக்கள் மகிழ்ச்சியாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என்று நேற்று யாழ்ப்பாணம் வந்த ஐரோப்பியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அரச அதிபர் உள்ளிட்ட யாழ். சிவில் நிர்வாகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

பொதுநலவாய நாடாளுமன்ற சம்மேளனம்மற்றும் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். பிரிட்டிஷ்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப் போரின்போது கைப்பற்றப்பட்ட 110 கிலோ தங்கம் மத்திய வங்கியிடம்

கொழும்பு, ஒக்ரோபர் 21

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவப் படையணியின் 58ஆவது துணைப் பிரிவினரும் இலங்கை தரைப்படையின் பொலிஸ் பிரிவினரும் 110 கிலோ தங்கத்தைக் கைப்பற்றினர். இவை அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டு மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

-இப்படி ஆளும் கட்சிக் கொரடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

ஐ.தே.க. உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தின் போது அப்பிரதேசங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் எவ்வளவு? அதன் பெறுமதி என்ன? இந்தத் தங்கத்தைக் கைப்பற்றியவர்கள் யார்? அவை எந்த நீதிமன்றின் முன் ஒப்படைக்கப்பட்டன? - இப்படி தா்மசிறி ஜயசேகர பிரதமரிடம் கேள்வி எழுப்பினார். பிரதமரிடம் எழுப்பப்பட்ட இந்தக் கேள்விக்கு வழமைபோல் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார். அப்போதே அவர் மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

(உ-சி)

உள்ளே

**போரால் பாதிக்கப்பட்டோருக்கு 2½ கோடி உதவி**
போரால் பாதிக்கப்பட்ட 600 குடும்பங்களுக்கு 2½ கோடி ரூபா உதவியை அமைச்சர் டியூ.குணசேகரா வழங்குகிறார் — பக்கம் 07

**யாழ். ஆஸ்பாத்திரியில் இதயநோய் சிகிச்சை செயலிழக்கும் நிலை**
யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கும் இதய நோய் சிகிச்சை நிலையம் மூடப்படும் அபாய நிலை — பக்கம் 02

**கே.பி.க்கு எதிராக வழக்குத் தொடருங்கள்**
கே.பி.க்கு எதிராக வழக்குத் தொடருமாறு ஜனநாயக தேசிய கூட்டமைப்பு கோருகிறது. — பக்கம் 03

### விசுவமடு பாலியல் வல்லுறவு வழக்கு

## 4 சிப்பாய்களுக்கும் நிபந்தனையுடன் நேற்று கிளிநொச்சி நீதிமன்று பிணை

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி, விசுவமடுவில் வீட்டில் தனியாக இருந்த இரண்டு பெண்கள் மீது கடந்த ஜூன் மாதம் 6ஆம் திகதி பாலியல் வல்லுறவு புரிந்தனர் எனக் குற்றம்சாட்டப்பட்ட நான்கு இராணுவச் சிப்பாய்களும் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு இராணுவச் சிப்பாய்களையும் பிணையில் விடுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திருமதி கொஸ்வத்த பிணை மனு ஒன்றை கடந்த 10ஆம் திகதி சமர்ப்பித்திருந்தார். இந்த மனுவை ஆட்சேபித்து பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் (24 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் மூலம் கனடா செல்வோரை கட்டுப்படுத்தப் புதிய சட்டமூலம்

### நாடாளுமன்றுக்கு இன்று வருகிறது

ஒட்டாவா, ஒக். 21

அரசியல் தஞ்சம் கோரி கடல் வழியாக கனடா வருபவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் புதியசட்டமூலமொன்றை கனடா அரசு இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் என்று அந்நாட்டுப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் தெரிவித்தார்.

ஒட்டாவாவில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சன் சீ கப்பலில் ஈழத் தமிழர்கள் 492 பேர் கடந்த ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி சென்றடைந்தனர். (24 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் பெண் போராளிகள் 500 பேர் மாத இறுதியில் விடுவிப்பு

கொழும்பு, ஒக்.21

புனர்வாழ்வளிக்கப்பட்ட 500 முன்னாள் பெண் போராளிகள் இம்மாத இறுதிக்குள் விடுவிக்கப்படுவரென புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:- யுத்தம் முடிவடைந்தவுடன் 11,696 புலிப் போராளிகள் அரச படையினரிடம் சரணடைந்தனர். கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றது. ஓகஸ்ட் முதலாம் திகதி வரை 4,485 பேர் பெற்றோர், பாதுகாவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். 2,881 ஆண்களும் 1,604 பெண்களும் இவ் வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 594 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டம் சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும்

### ஜே.வி.பி. எதிர்க்கும் என்கிறார் அநுர எம்.பி.

கொழும்பு, ஒக்.21

உத்தேச உள்ளூராட்சி திருத்தச்சட்டமூலம் சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்துவதாகவும் சிறுபான்மையினக் கட்சிகளை ஓரங்கட்டுவதாகவும் அமைந்துள்ளது. இது நாட்டுக்காக அல்ல ஒரு குடும்பத்தின் நலனைப் பேணும் வகையிலேயே அமைந்துள்ளது. இத் திருத்தச் சட்டமூலத்தை ஜே.வி.பி. ஒருபோதும் ஆதரிக்காது என ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை பத்ரமுல்லை, பெலவத்தயிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. (24 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடர்
ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வரலாறு I,II, இல் பகுதி I, II, III வினாத்தாள்கள், தமிழ் - I, இற்கான விடைகள்
உள்ளே









# யாழ். வைத்தியசாலை இதய சிகிச்சை விடுதி செயலிழக்கும் அபாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அமைந்துள்ள இதய சிகிச்சை விடுதி (Cardio -logy Ward) தற்காலிகமாகச் செயலிழக்கும் நிலை தோன்றியுள்ளதாக மிக நம்பகமாக அறியப்படுகிறது. இதனை அறிந்து இதய நோயாளர் மிகுந்த மனக்கிலேசமும் கவலையும் அடைந்துள்ளனர்.

ஆனால் இதய சிகிச்சை விடுதியை மூடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார். உதயனுக்குக் கிடைத்திருக்கும் தகவல் பிழையானது என்று உறுதிபடத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட விடுதியை இயக்குவதற்குத் தேவையான வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறையாக உள்ளதாகவும் அதனால் விடுதியை மூடுமாறு கோரிக்கை விடுப்பட்டிருப்பதாகவும் உதயனுக்கு நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சிகிச்சை விடுதி 2008 ஆம் ஆண்டு பல மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த விடுதி கடந்த இரண்டு வருடங்களாக இயங்கி வந்தது. இந்த விடுதிக்கென வைத்திய அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இங்கு கடமையாற்றிய இரு வைத்திய அதிகாரிகள் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர். இதனையடுத்து வைத்திய அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த இதய சிகிச்சை விடுதியைத் தொடர்ந்து இயங்கவைப்பதற்கு போதிய வைத்தியர்களை நியமனம் செய்யுமாறு போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

வைத்திசாலையிலுள்ள இதய அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் 24 மணிநேரமும் வைத்தியர்கள் கடமையில் இருக்கவேண்டும். தற்போது உள்ள வைத்தியர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சுழற்சி முறையில் கடமையாற்ற வேண்டியுள்ள தாலும், கிளினிக்குகளில் நோயாளர்களைப் பார்வையிட வேண்டி உள்ளமையினாலும் இதய சிகிச்சை விடுதியில் பணியாற்ற முடியாத நிலை காணப்படுகிறது.

இதய சிகிச்சை விடுதி தற்காலிகமாக மூடப்படுமானால் அதனால் தாமே பெரிதும் பாதிக்கப்படுவர் என இதய நோய்களுக்கு ஆளானவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

(அ-த)

# வடக்கில் நடக்கும் நிகழ்வுகளில் அமைச்சர் லொக்குகே பங்கேற்பு

## எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், ஒக்.21

மனிதவள தொழில் உறவுகள் மற்றும் உற்பத்திதிறன் அமைச்சர் காமினி லொக்குகே எதிர்வரும் 24 ஆம், 25ஆம் திகதிகளில் வட பகுதிக்கு விஜயம் செய்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி வவுனியாவுக்கு விஜயம் செய்யும் அமைச்சர் அங்கு பல நிகழ்வுகளிலும் பங்கேற்பார். மறுநாள் 25 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

அமைச்சருடன் பிரதி அமைச்சர் ஜெகத் பாலசூரிய வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரும் வருகைதரவுள்ளனர். இந் நிகழ்வுகளில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் பங்கேற்கவுள்ளார்.

அமைச்சர் காமினி லொக்குகே நாவலர் வீதியில் பிரதித் தொழில் ஆணையர் அலுவலகத்தில் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்க புதிதாக அமைக்கப்பட்ட தொழில் இல்லத்தை காலை 9.30 மணிக்கு திறந்துவைப்பார்.

தொடர்ந்து மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கைப் பிரிவும் இணைந்து மாவட்ட தொழில் திணைக்களத்தின் அலுவலகத்தில் நடத்தும் நடமாடும் சேவையை அமைச்சர் ஆரம்பித்துவைப்பார். இந்த நடமாடும் சேவையில் நம்பிக்கை நிதியத்துக்கு விண்ணப்பித்து கொடுப்பனவுகள் வழங்கப்படாதவர்கள், ஆவணங்களை புதுப்பித்தல் போன்ற விடயங்களுக்குத் தீர்வு காணப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் ஊழியர் சேமலாப நிதியைப் பிணையாகவைத்து வீட்டுக் கடன பெற்ற ஊழியர் சேமலாப நிதிப் பிரிவின் உறுப்பினர்கள் 15 பேருக்கு நம்பிக்கை நிதியப் பிரிவு உறுப்பினர்கள் 6 பேருக்கும் அமைச்சரால் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

தொழில் திணைக்களத்தின் பெண்கள், சிறுவர் விவகாரப் பிரிவு 50 பெண்களுக்கு ஒருநாள் பயிற்சி நெறியை அன்றைய தினம் வழங்கவுள்ளது. இதில் கேக், பற்றீஸ், கட்லட் என்பவற்றை செய்ய பயிற்சியளிக்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் அவர்களுக்கான தொழில் உபகரணங்களும் அமைச்சரால் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து உற்பத்தித் திறன் பிரிவினர் பல்கலைக்கழகம், வடகடல், யாழ்.பல.நோ.கூ.சங்கம் என்பவற்றின் உற்பத்தித் திறனைப் பெருக்குவது தொடர்பான கலந்துரையாடலை ஆரம்பித்து வைக்கும் அமைச்சர் மாந்தை உப்பு கூட்டுறவுச் சங்கத்தில் வேலை இழந்தவர்களுக்கான நட்ட ஈட்டையும் வழங்குவார். அத்துடன் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்திசெய்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு மனிதவளத்தின் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளார்.

(ஒ-6)



இலங்கையில் இடம்பெற்றதாகக் குற்றம்சாட்டப்படும் நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பில் கடைசியாக வெளியிடப்பட்ட ஒளிப்பட ஆதாரம் இது. பிரிட்டனில் வெளியிடப்பட்ட இந்தப் படம் உண்மையானது அல்ல என அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

# கர்தினால்கள் சபைக்கு பேராயர் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஒக்.21

புனித பாப்பரசரைத் தெரிவு செய்யும் கர்தினால்கள் சபைக்கு இருபது வருடங்களுக்குப் பின்னர் இலங்கையரான பேராயர் கலாநிதி மல்கம் ரஞ்ஜித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



கர்தினால்கள் சபைக்கு 20 புதியவர்களின் பெயர்கள் நேற்று வெளியிடப்பட்டன. பாப்பரசர் 16ஆவது பெனடிக்ட் இந்தக் கர்தினால்களின் பெயர்களை வத்திக்கானிலிருந்து வெளியிட்டுள்ளார். இவர்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கர்தினாலாக பேராயர் கலாநிதி மல்கம் ரஞ்சித் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இலங்கையிலிருந்து தோமஸ் பெஞ்ஜமின் குரே இருபது வருடங்களுக்கு முன்னர் கர்தினாலாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இத்தாலி, ஜேர்மனி, போலந்து, சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா மற்றும் கொங்கோ குடியரசு ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இந்த 20 கர்தினால் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தின்படி கர்தினலாகத் தெரிவு செய்யப்படுபவர் 80 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். முன்னர் 102 கர்தினால்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் மேலும் 20 பேர் நேற்றுத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (சி)

# மன்னார் தமிழ்ச் செம்மொழி விழாவில் 15 பேருக்கு விருது வழங்கி கௌரவிப்பு

மன்னார்,ஒக்.21

மன்னாரில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள தமிழ்ச் செம்மொழி விழாவில் தமிழியல் துறையில் அரும்பணியாற்றிய பெரியோர்களின் பெயரில் ஞாபகார்த்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

விருது பெறுவோரின் 15 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

- ✱தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் - ஜின்னா சரிபுதீன்
- ✱ஆறுமுகநாவலர் - பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
- ✱சுவாமி விபுலானந்தர் - பேராசிரியர் அ.சண்முகதாஸ்
- ✱சோமசுந்தரப்புலவர் - மேமன் கவி
- ✱வித்துவான் றஹ்மான் - திருமதி ந.ஸ்ரீதேவி
- ✱சுவாமி ஞனப்பிரகாசர் - பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்
- ✱கலாயோகி ஆனந்த குமாரசாமி - வை.சிவசுப்பிரமணியம் (றமணி)
- ✱சின்னத்தம்பி புலவர் - வே.இறைபிள்ளை
- ✱முதுதமிழ் புலவர் நல்லதம்பி - அகளங்கன்
- ✱அறிஞர் சித்திலெப்பை - நா.யோகேந்திரநாதன்
- ✱தாவீது அடிகள் - டொமினிக் ஜீவா
- ✱பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி - திருமதி லீலாம்பிகை செல்வராஜா
- ✱ஈழகேசரி பொன்னையா - ம.வ.கானமயில்நாதன்
- ✱இசைப்புலவர் ந.சண்முகரட்ணம் - திருமதி விஜயகுமாரி தவசிலிங்கம்
- ✱சிரித்திரன் சிவஞானசுந்தரம் - ச.யோகரத்தினம்

(ஒ-6)

# கிளிநொச்சியில் குண்டுவெடித்து மூவர் காயம்

## இடிபாடுகளை அகற்றியவேளை சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.21

கிளிநொச்சி பாரதிபுரத்தில் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் மூவர் காயமடைந்துள்ளனர் என்று யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம்தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

பாரதிபுரத்தில் சிலர் கட்டடம் ஒன்றின் இடிபாடுகளை அகற்றிக் கொண்டிருந்தனர். அவ்வேளை வெடிக்காமல் இருந்த மர்மப் பொருளின் மீது கற்கள் விழுந்த போது அது வெடித்துச் சிதறியது. இந்த வெடிப்புச் சம்பவத்தில்:-

முத்துசாமி பிரகாஷ் (வயது-18), பழனியாண்டி சந்திரசேகர் (வயது -45), சுப்பிரமணியம் சுரேஸ் (வயது-21) ஆகியோரே இடுப்பு மற்றும் கால் பகுதிகளில் காயமடைந்த நிலையில் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் சுப்பிரமணியம் சுரேஸ் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். முத்துசாமி பிரகாஷ் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஒ-15)

# காசநோய் மீளாய்வுக் கூட்டம் வவுனியாவில் தேசிய பணிப்பாளர் தலைமையில் இன்று

2009 ஆம் ஆண்டுக்கான காசநோய் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கான இக்கட்டடத்தில் காசநோய், சுவாச நோய் கட்டுப்பாடு தொடர்பான தேசிய பணிப்பாளர் டாக்கடர் சுனில் அல்விஸ் தலைமையில் பலர் கலந்து கொள்கின்றனர். இக்கூட்டத்தில் வடமாகாணத்தின் காசநோய்க் கட்டுப்பாட்டில் குறிப்பாக மீள்குடியமர்ந்தவர்களின் மத்தியில் காசநோயைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் காசநோயின் தாக்கம் தொடர்பாகவும் அங்கு மேற்கொள்ளவேண்டிய காசநோய்க்கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் பற்றியும் யாழ். மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரியும், கிளிநொச்சியில் ஆதாரவைத்தியசாலையில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் காசநோய் சிகிச்சைமேற்கொண்டு வருபவருமான வைத்தியக் கலாநிதி டாக்டர் சி.யமுனாநந்தா விசேட அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

(ஒ-16)

# யாழ். நகருள் நடக்கும் நிகழ்வுகளில் மத்திய வங்கியின் ஆளுநர் கப்ரால்

## கிளிநொச்சிக்கும் செல்வார்

யாழ்ப்பாணம், ஒக்.21

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார்.

இவர் இன்று முற்பகல் 10.05 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைக்கப்படவுள்ள எல்.ஓ.எல்.சி. கோபுரத்துக்கு அடிக்கல் நடுவார். தொடர்ந்து முற்பகல் 10.45 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் எல்.பி.பினான்ஸ்நிறுவன புதிய கிளையைத் திறந்துவைக்கவுள்ளார்.

முற்பகல் 11.30 மணிக்கு சுப்பிரமணியம் பூங்காவில் தண்ணீர்த் தாங்கியைத் திறந்துவைக்கவுள்ளதோடு பி.ப.2.45 மணிக்கு கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் ஆளுநர் அங்கு ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையைத் திறந்து வைப்பார்.

(ஒ-16)

## தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையின்

# திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தை திறக்க நாளை யாழ்.வருகிறார் அமைச்சர் தினேஷ்

தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் திட்டப் பணிப்பாளர் பணிமனை நாளை வெள்ளிக்கிழமை யாழ்.நகரில் திறந்துவைக்கப்படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின்பேரில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தை திறந்துவைப்பார்.

கிளிநொச்சி - யாழ். குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை துரி தப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்தப் பணிமனை யாழ்.நகரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இரணைமடு குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் எந்திரி தி.பாரதிதாசன் திட்டப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ஒ-302)

# ஓய்வூதிய வசதியற்றோருக்கு விசேட ஓய்வூதியத் திட்டம்

கொழும்பு, ஒக். 21

பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளபோதிலும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படாதவர்களை இலக்காகக் கொண்டு விசேட ஓய்வூதியத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இலங் கைச் சமூகப் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

தற்போது 3 லட்சத்து 75 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் அதன் உறுப்புரிமையைப் பெற்றுள்ளனர் எனச் சபையின் தலைவர் நிமல் அமரசிங்க தெரிவித்துள்ளார். (சி)

# சட்டம் எல்லோருக்கும் சமன் என்றால் கே.பிக்கு எதிராக வழக்குத் தொடருங்கள்

## சபையில் விஜித ஹேரத் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக். 21

சட்டம் எல்லோருக்கும் சமம் என்றால், பயங்கரவாதத்துக்குத் தலைமை வகித்த கே.பிக்கு எதிராக வழக்குத் தொடருங்கள். - இப்படி ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. விஜித ஹேரத் நேற்று அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நீதிபதிகளின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கே.பியின் வயிற்றில் மாணிக்கம் உள்ளதால் அதை எடுப்பதற்காக இந்த அரசு கே.பியை வணங்குகின்றது. அவருக்கு எதிராக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பயங்கரவாதத்துக்குத் தலைமை வகித்த கே.பிக்கு இராணுவ மரியாதை. பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிய பொன்சேகாவுக்கு சிறைத்தண்டனை. சட்டம் அனைவருக்கும் சமம் என்றால் கே.பிக்கு எதிராக வழக்குத் தொடருங்கள்.

நீதிமன்றங்கள் சட்டத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கின்றபோதிலும் அரசின் நடவடிக்கை அதற்கு இடமளிப்பதாக இல்லை.

சட்டம் பற்றி எதுவும் தெரியாத இராணுவ அதிகாரிகளை நீதிபதிகளாக நியமித்து பொன்சேகாவுக்கு அரசு சிறைத்தண்டனை வழங்கியது. இப்போது தன்னிடம் மன்னிப்புக் கோருமாறு அரசு சரத் பொன்சேகாவிடம் கேட்கின்றது.

பொன்சேகா மன்னிப்புக் கோரவேண்டிய தேவையில்லை. அவர் எதுவித குற்றமும் செய்யவில்லை. அரசுக்கு எதிராகக் கிளம்பியிருக்கும் கடும் எதிர்ப்புக் காரணமாக அரசு பொன்சேகாவை மன்னிப்புக் கோரச் செய்கின்றது. - என்றார். (சி)

## வல்லிபுர ஆழ்வார் நாளை 'நேத்ரா'வில்

யாழ்ப்பாணம், ஒக்.21

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழா நிகழ்ச்சிகளின் தொகுப்பு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை 'நேத்ரா' தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படவிருக்கிறது. ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் உட்பட ஆலய வரலாறு என்பன இத்தொகுப்பில் இடம்பெற உள்ளன.

## கடல்சார் பல்கலைக் கிளை

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்ப்பாணத்தில் சி.ஐ.என்.ஈ.சி. கடல்சார் பல்கலைக்கழகத்தின் கிளை இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருதனார் மடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. இத்துறை சார்ந்தவர்களை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த பொதுநலவாய நாடாளுமன்றச் சம்மேளனம் மற்றும் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஆகியவற்றின் பிரதிநிதி கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் செயலக அதிகாரிகள் மற்றும் யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம். *(படம்: டிலீப்)*

## இந்திய அமைதிப்படையினரால்

# யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் 21 பேர் படுகொலையுண்ட நினைவு நாள்

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ்.போதனா வைத்தியசாலையில் 1987 ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் இந்திய அமைதிப்படையினரால் கொல்லப்பட்ட 21 பணியாளர்களின் 23 ஆம் ஆண்டு நினைவு தினம் நாளை வெள்ளிக்கிழமை வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடமை நேரத்தில் பலியான இந்த 21 பணியாளர்களினதும் நினைவாக வைத்தியசாலையில் உள்ள அவர்களுடைய உருவப் படங்களுக்கு சுடர் ஏற்றி மலரஞ்சலி செய்யும் நிகழ்வு இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

கொல்லப்பட்ட பணியாளர் களின் உறவினர்கள், வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலைப் பணியாளர்கள் எனப் பலர் இந்த நினைவு நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தப் படுகொலைச் சம்பவத்தில் யாழ். போதனா வைத்திய சாலையில் பணிபுரிந்த வைத்திய அதிகாரிகளான அ.சிவபாதசுந்தரம், கே.பரிமேலழகர், கே.கணேசரத்தினம் ஆகியோர் உட்பட 21 பணியாளர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-26)

# மாகாண சபையின் சில திணைக்களங்களை கைதடியில் தற்காலிகமாக இயக்க முடிவு

## அதிகாரிகள் குழு நேரில் ஆராய்ந்தது

யாழ்ப்பாணம், ஒக். 21

வடமாகாண சபையின் திணைக்களங்கள் சிலவற்றைத் தற்காலிகமாக கைதடிப் பகுதியில் இயங்க வைப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்த அலுவலகங்களைக் கிளிநொச்சியில் இயங்க வைப்பதற்குப் போதிய கட்டடவசதிகள் இல் லாமையால் அவற்றைத் தற்காலிகமாக இங்கு இயக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக வடமாகாண சபையின் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, மாகாண ஆளுநரின் செயலாளர் ஆர்.ரங்கராஜன், மாகாணக் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி ஆகியோர் அடங்கிய அதிகாரிகள் குழு கடந்த வாரம் யாழ்.வந்தது.

இந்தக் குழுவினர் கைதடிக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள இடவசதிகள், நிலைமைகள் பற்றி ஆராய்ந்துள்ளனர். கைதடி அரச முதியோர் இல்ல வளாகத்தில் உள்ள பாவனையற்ற கட்டடங்கள், இல்லத்தை அண்டியுள்ள பழுதடைந்த அரச கட்டடங்கள் ஆகியவற்றையும் இந்தக் குழுவினர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

வடமாகாண சபையின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி, கூட்டுறவு, சமூக சேவைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆகிய திணைக்களங் களையே இப்பகுதியில் இயங்க வைப்பதற்கு இந்தக் குழுவினர் ஆலோசனை நடத்தியதாகத் தெரி விக்கப்பட்டது. (த-26,302)

# இலங்கைக்கான வத்திக்கான் தூதர் ஸ்பிற்றெறி நாளை யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஒக்.21

இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு ஆயர் அருட்கலாநிதி ஜோசப் ஸ்பிற்றெறி ஆண்டகை நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார். திரு மறைக் கலாமன்றத்தின் கலைத் தூது அழகியல் கல்லூரியினால் நடத்தப்படும் பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் அவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி இந்தியாவின் பாரதிதாசன் பல் கலைக்கழகத்துடன் இணைக் கப்பட்டுள்ள கலைக்காவிரி நுண் கலைக் கல்லூரியுடன் இணைந்து 2007 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டுவரும் பரதநாட்டிய பட்டப் படிப்பு கற்கை நெறிகளில் முது நுண்கலைமாணி பட்டப் படிப்பை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை மு. ப. 10மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலை யகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இந்தியாவின் திருச்சி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி கலாநிதி மார்கறெற் பஸ்ரின் கலந்து கொள்வார். இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதலாவது அமர்வில் முக்கிய அம்சமாக பரதநாட்டியத்தில் முதுநுண்கலை மாணி பட்டம் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வத்திக்கான் தூதுவரின் சிறப்புரையும், தொடர்ந்து சர்வமதத் தலைவர்களின் அருளுரைகளும் இடம்பெறும். அதன் பின்னர் திருமறைக் கலாமன்ற இயக்குநர் நி.மரியசேவியர் அடிகள் உரையாற்றுவார். தொடர்ந்து பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

இரண்டாவது அமர்வில் முது நுண்கலைமாணி கற்கை நெறியை கலைத்தூது அழகியல் கல்லூரியில் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கான கௌரவிப்பும் சிறப்புரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.(த)

## கசிப்பு வைத்திருந்த இருவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஒக்.21

கசிப்பு வைத்திருந்த இரு நபர்களுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று தலா 7,500 ரூபா அபராதம் செலுத்துமாறும் அத்தொகையை செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டது.

சுன்னாகத்தில் 4 பரல்களில் கசிப்பு வைத்திருந்த நபர் ஒருவரையும் திருநெல்வேலியில் கசிப்பு வைத்திருந்த நபர் ஒருவரையும் கைது செய்த பொலிஸார் அவர்கள் இருவரையும் நேற்று நீதிவான் அ.அ.ஆனந்தராஜாவிடம் முன்னிலைப்படுத்தினர்.

குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்கள் இருவருக்கும் தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார் நீதிவான். (ஒ-6)

# செயற்திறனற்ற இயக்குநர் சபையால் யாழ். ப.நோ.கூ.ச செயற்பாடு பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை செயற்திறனற்றுள்ளதால் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சங்கத்தின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர் சபையின் பதவிக்காலம் கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. எனினும் கிளைக் குழுத் தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இயக்குநர் சபையின் பதவிக்காலம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய மேலும் மூன்று மாதங்கள் நீடிக்கப்பட்டது.

நீடிக்கப்பட்ட இயக்குநர் சபையின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் எனினும் இயக்குநர் சபைத் தலைவரைத் தவிர ஏனைய இரண்டு உறுப்பினர்களும் கூட்டத்துக்குச் சமுகமளிக்காமையால் அந்தக் கூட்டம் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் சங்கத்தின் செயற்பாடுகளை செயற்திறன் மிக்கதாக முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சங்கத்தின் பணியாளர்கள் இந்தச் செயற்பாடுகளால் விசனமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

# இரணைமடு குடிதண்ணீர் திட்டத்துக்கான அலுவலகம் நாளை யாழ்.நகரில் திறப்பு

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கலந்து கொள்வார்

யாழ்ப்பாணம்,ஒக்.21

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகிறார்.

யாழ்.வரும் அமைச்சர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.அலுவலகத்தில் இரணைமடுக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கான அலுவலகம் ஒன்றைத் திறந்து வைப்பார்.

இதன் பின்னர் கைதடிக்குச் செல்லும் அவர் அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் விநியோகத் தாங்கியையும் திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் யாழ்.மாவட்ட அரச அதிகாரிகளையும் அமைச்சர் சந்தித்துப் பேசுவார். (த-26)

# மீளக்குடியமர்ந்த முஸ்லிம் பெண்கள் நலன் பேணுவதற்கு அபிவிருத்திக் குழு

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ள முஸ்லிம் குடும்பங்களில் உள்ள பெண்கள், சிறுவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 'மீளக்குடியேறிய யாழ். முஸ்லிம் மாதர் அபிவிருத்தி அமைப்பு [illegible] ஒன்று கடந்த வாரம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் நிர்வாகக் குழுத் தலைவராக ஜெ.ஜெசீலா, செயலாளராக ப.பஸீலா, பொருளாளராக முஸமிலா, உபதலைவராக முத்தும்மா, இணைப்பாளராக இ.நிரஞ்சலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த வாரம் மக்கள் பணிமனையில் மாதர்களுக்காக இடம் பெற்ற விசேட கூட்டத்தில் தற்போது மீளக்குடியேறி வரும் குடும்பங்களிலுள்ள பெண்கள், சிறுவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதன் பின்னரே இந்தப் புதிய அமைப்பு உதயமானது.

குடும்பத் தலைவர்கள், யுவதிகள், சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு, அவர்களே தீர்வைக்காணும் வழிமுறையாக உறுதியான குழுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. இதற்குப் பெண்கள் குழுவாக செயற்படுவது அவசியம். அவ்வாறு செயற்பட்டு குடும்ப சமூக முன்னேற்றத்துக்கான தன்னார்வ அமைப்பாக இந்த அமைப்பு செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கை மருத்துவர் சங்கத்தின் வருடாந்த மாநாடு பொது நூலகத்தில்

## நாளை முதல் மூன்று நாள்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக்.21

இலங்கை மருத்துவர் சங்கத் தின் வருடாந்த மாநாடு இம் முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. இந்த மாநாடு நாளை வெள்ளிக்கிழமை காலை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது.

இலங்கை மருத்துவர் சங்க மும் யாழ்ப்பாண மருத்துவர் சங்க மும் இணைந்து இந்த மாநாட்டை நடத்துகின்றன.

முதன்முதலாகக் கொழும்பிற்கு வெளியே நடைபெறுகின்ற இந்த ஸ்தாபித மாநாட்டின் பிரதம அதிதியாக, உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வைத்தியக் கலாநிதி ஃபிட்ரோசி றஸ்ரம் மேற்றா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நாளைய தொடக்க விழாவில் ஈ. எம்.விஜேராமா அறக் கொடை விரிவுரையை வித்யாஜோதி, வாழ் நாள் பேராசிரியர், வைத்திய கலாநிதி கொல்வின் குணரட்ன "தொழில் சார்ந்து பயணிக்கும் மருத்துவப் பேராசிரியர் ஒருவரின் பிரதிபலிப்புக்கள்" எனும் தலைப்பில் உரையாற்றுவார்.

இந்த மாநாட்டில் டெங்குக் காய்ச்சல், பாம்புக்கடி, போஷாக்கு, ஆய்வுகளுக்கான ஒழுக்கக் கோட் பாடுகள், மனிதாபிமான நெருக்கடி நிலைகளில் சுகாதாரப் பராமரிப்பு, தொற்றுக் கட்டுப்பாடு என்னும் தலைப்புக்களில் முன்னணி வைத்திய நிபுணர்கள் இணைந்து குழுநிலை அறிக்கைகளை வழங்கவிருக்கிறார்கள். இவற்றோடு 'வட கிழக்குப் பகுதிகளில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வகிபாகம்' என்ற தலைப்பிலான விருந்தினர் விரிவுரையும், 'ஆய்வுகளை அறிக்கை செய்தல்' என்ற தலைப்பிலான பயிற்சிப் பட்டறையும் இடம்பெறவிருக்கின்றன. இம்மாநாட்டில் கலந்துகொள்ளவென பல வைத்திய நிபுணர்கள் நாட்டின் ஏனைய பாகங்களிலிருந்து வந்திருக்கிறார்கள்.

இந்த மாநாட்டின் சிறப்பு அம் சங்களில் ஒன்றான சேர் மார்க்கஸ் பெனார்ண்டோ உரையை வைத்திய கலாநிதி ஷிகான் வில்வி யம்ஸ் "அறனை நோயை நேர காலத்துக்கே அடையாளங் காணுதல்" என்னும் தலைப்பின் கீழ் நிகழ்த்தவுள்ளார். இம்மாநாட்டின் கலை நிகழ்வுகளை வைத்தியத் துறையினரும் ஏனைய துறைசார் கலைஞர்களும் இணைந்து அறிக்கை செய்கிறார்கள்.

(த)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

**அமரர்**

**தம்பித்துரை சொர்ணம்மா**

மண்ணில் 10.01.1926 விண்ணில் 21.09.2010

கடந்த 21.09.2010 அன்று இறைவனடி எய்திய எமது அன்புத் தெய்வம் அமரர் தம்பித்துரை சொர்ணம்மா அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது சகல விதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் நேரடியாகவும், தொலைபேசி, இணையத்தளம், துண்டுப்பிரசுரம் மூலமும் அஞ்சலிசெலுத்திய அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (21.10.2010) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் வீட்டுக்கிரியைகளில் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

(இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

*'சந்திரவாசம்'*
*சாந்தை*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சிறீஸ்கந்தராசா

*(கிளியக்கா)*



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிறீஸ்கந்தராசா நேற்று (20.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் சிறீஸ்கந்தராசாவின் அன்பு மனைவியும் ராஜகுமாரியின் (சஜிதா - பிரதேச செயலகம், உடுவில்) அன்புத் தாயும் காலஞ்சென்ற நகுலேஸ்வரனின் அன்பு மாமியும் ருத்ரபைரவியின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், கிருஷ்ணன் மற்றும் இராசம்மா, செல்லம்மா (கனடா), அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தெய்வானைப்பிள்ளை, அன்னலட்சுமி, கனகலிங்கம், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் முருகமூர்த்தி, கிருஷ்ணவேணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2Q10) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 12.30 மணியளவில் தகனக் கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.*

தகவல் :
ந.இராஜகுமாரி/ சஜிதா (மகள்)

(104950)

## பாதுகாப்புச் செலவினம் அதிகரிப்பு; சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி

கடந்த வருடத்தை விட இவ்வருடம் இலங்கையின் பாதுகாப்புச் செலவினம் ஆறு வீதத்தால் அதிகரித்துள்ளமை குறித்து சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

தற்போது இலங்கை ஓரளவுக்கு அபிவிருத்திப் பாதையில் சென்று கொண்டிருப்பது திருப்திகரமானதாக இருந்தாலும் வரவு - செலவுத்திட்ட துண்டுவிழும் தொகை மற்றும் பொதுக்கடன்களைக் குறைப்பதற்கும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நிதியம் பரிந்துரைத்துள்ளது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த வேண்டுமாயின் பாதுகாப்புச் செலவினங்களைக் குறைக்க வேண்டும் என்று நிதியத்தின் பணிப்பாளர் சபை தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போர் நிறைவடைந்த சூழலில் பாதுகாப்புச் செலவின அதிகரிப்பிற்கான அவசியம் குறித்தும் நிதியம் கேள்வியெழுப்பியுள்ளது.

அதற்குப் பதிலாக இலங்கையின் மீள் கட்டுமாணப் பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் அவசியம் குறித்தும் நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியமானது இலங்கையின் அபிவிருத்திக்காகத் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது. எனினும், எதிர்பார்க்கப்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் நிதியம் வலியுறுத்தியுள்ளது.

## இந்திய எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் டிசம்பரில் இலங்கைக்கு வருகை

இந்திய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சியின் பிரதிநிதிகள் குழு எதிர் வரும் டிசம்பர் மாதத்தின் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இக்குழுவுக்கு நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமை தாங்கவிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இந்தியச் செய்தியாளர் ஒருவருடனான சந்திப்பின்போது, சுஷ்மா ஸ்வராஜ் மேற் கண்ட தகவலைத் தெரிவித்தார் என இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

டிசம்பர் மாதத்தின் முற்பகுதியில் வருகின்ற இந்தக் குழு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்களைக் கண்காணிக்கும்.

இலங்கை அரசின் அழைப்பின் அடிப்படையிலேயே அவர்கள் இலங்கை வரவுள்ளனர் என்றும், இந்தப் பிரதிநிதிகள் குழுவில் இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவரும் உடன்வருவார் என்றும் அந்த் இணைத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ் நாட்டின் பாரதீய ஜனதா கட்சியின் உறுப்பினர்கள் சிலரையும் இந்தப் பிரதிநிதிகள் குழுவில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கட்சியின் தமிழகத் தலைவர் பொன். ராதாகிருஸ்ணன் மற்றும் செயலாளர் சுரேஷ் நம்பியார் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.


**வாடகைக்குத் தேவை**

'கேற்வே' நிறுவனத்தின் வகுப்புகளை நடத்துவதற்கு பொருத்தமான வீடு அல்லது கட்டடம், சாவகச்சேரி நகரை அண்டிய பகுதிகளில் வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

தொடர்புகளுக்கு: 0755585523, 0215675555


## மரண அறிவித்தல்கள்

### அமரர் அருணாசலம் சோமசுந்தரம்



(கலாபூசணம், சங்கீதபூசணம், பண்ணிசைமணி, இசையரசு-பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, விரிவுரையாளர் முன்னாள் இளைப்பாறிய ஆசிரியர், யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயம்)

சரசாலை மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்புத் துறையை வசிப்பிடமாகவும் தற்போது 365, கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சோமசுந்தரம் அவர்கள் நேற்று (20.10.2010) புதன்கிழமை அதிகாலை 4.15க்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபூரணம் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், யோகராணி (Chemist. அவுஸ்திரேலியா), யோகதாசன் (கணக்காய்வாளர்), யோகேஸ்வரி (முதல்வர், யாழ்.மாநகர சபை), யோகாநந்தன் (பொறியியலாளர் - ஹொலண்ட்), யோக செல்வம் (கணக்காளர் - கனடா), யோகநாதன் (தொழிலதிபர், தனலக்ஷ்மி ஸ்ரோர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா, சாவித்திரி (உப அதிபர்- யா/ஸ்ரீபார்வதி வித்தியாலயம்), பற்குணராசா (செயலாளர்- யாழ். மாநகர சபை முதல்வர் அலுவ லகம்), அற்புதி (லண்டன்), அருணாசலமுதலியார் (கனடா), தனலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமனாரும், வனஜா, சஞ் சீவராஜா, யோகவிநாயகன், கார்த்திகா, உபேந்திரா, சுபேந்திரா, கஜனி, சங்கீதா, கஜானன் ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.365, கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
T.P.071 8015696,
0718334515,0212226917

தகவல்:
திருமதி யோ.பற்குணராஜா
(மகள்-முதல்வர், யாழ்.மாநகரசபை)

### திருமதி பூரணப்பிள்ளை செல்லப்பா



வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூரணப்பிள்ளை செல்லப்பா நேற்று (20.10.2010) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி விஸ்வலிங்கம் - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் நித்தியலட்சுமி, ரவீந்திரன் (அவுஸ்திரேலியா), முரளீதரன் (டோகா), யோகேந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும் திருமதி சின்னம்மா, காலஞ்சென்ற அரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணாகரன், கௌரி, சுமித்திரா, சுசீலா ஆகியோரின் மாமியும் குமரன், கஸ்தூரி, நிசந்தன், வாகித்தியா, சாகித்தியா, விக்கி, ஆரணி, ஆர்த்தி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நிவிசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2010) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம்.*
T.P : 0772868644, 0712056869

தகவல் :
குடும்பத்தினர்.

(104949)

### இளையதம்பி பகவதி



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பகவதி நேற்று (20.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - தங்கமுத்து தம்பதியரின் மகளும், சுப்பிரமணியத்தின் (ஆனைக்கோட்டை) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும், அமரர் றாஜசுலோசனா, பத்மசுலோசனா (கிரிசா - கனடா), ஜெயசுலோசனா (பாமா), அப்பலோசனா(மாயா), குசலகுமாரி (வனஜா, பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கந்தசாமி(சிவம்), பாலசுந்தரம்(கனடா), யோகேந்திரம், அமரர் விநாயகமூர்த்தி, நாகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், சிவாநந்தினி, சிவாகரன், நிரோஜி, ஜீவிதா, தனுசன்(கனடா), றனோஜா (கனடா), கோகுலதீபன், கோகுலவாசன், உதயசங்கர், உதயலோகிதா, பவித்திரா, பிருந்தா (பிரான்ஸ்), பிரேமிகா (பிரான்ஸ்), ஐஸ்வினி(பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.10.2010) வியாழக்கிழமை பி.ப.2.00 மணியளவில் சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கிந்திட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
மருமகன்
நா.கந்தசாமி, சிவம்(வான்)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நெடுநாள் நோய் தீர்வதற்கு மருந்து.... இது தான்

இனப்பிரச்சினைக்கான எந்த ஒரு தீர்வையும் முன்னெடுப்பதற்கு தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் ஒற்றுமை - ஒருமித்த கருத்து - ஏற்பட வேண்டும். இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பொதுநலவாய நாடாளுமன்றச் சம்மேளனம் மற்றும் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி இவ்வாறு மிகவும் திட்டவட்டமாக அறுத்து உறுத்துக் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் சில கட்சிகள் சாதகமாகப் பதில் அளித்துள்ளன. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றன. அவற்றுக்கு இடையே ஒற்றுமை - ஒருமித்த கருத்து - ஏற்படும் வரை நாம் காத்திருக்கிறோம் என்று தனது இன்றைய நிலைப்பாட்டைத் தெரிவித்திருக்கிறார்.

எனினும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்துத் தாம் பேச்சு நடத்த உள்ளதாகவும் அவர் பொதுநலவாய நாடாளுமன்றப் பிரதிநிதிகளிடமும் பிரிட்டிஷ் எம்.பிக்களிடமும் விவரித்திருக்கிறார்.

இந்த நாட்டின் பெரும் விவகாரம், நீண்ட காலப் பிரச்சினை, இனப்பிரச்சனையே. அறுபது வருடங்களாக எந்தச் சிங்கள அரசும் அதனைத் தீர்த்து வைக்க விரும்பவில்லை; உரிய கரிசனையோ அக்கறையோ அதில் காட்டவில்லை. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தனிச் சிங்களச் சட்டத்தை தமிழர்கள் மீது திணித்த தில் இருந்து, தமிழர் பிரதேசங்களைக் கபளீகரம் செய்து அங் கெல்லாம் சிங்கள மக்களைக் குடியேற்றியதிலிருந்து, பிரதான கட்சிகள் இரண்டும் போட்டி போட்டு தமிழர் விவகாரத்தையே தேர்தலில் வெற்றி பெற்று அரசாட்சியைக் கைப்பற்றுவதற்கான பிரதான மூலோபாயமாக, மூலதனமாகப் பயன்படுத்தின. அந்த அரசியல் குட்டையில் ஊறிய மட்டைகளில் ஒன்றுதான் - ஒருவர்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும்.

அதுமட்டுமன்று. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை, அவர்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளை முறையாகவும் நியாயபூர்வமாகவும் வழங்க மறுத்து, தாம் நினைத்த அரைவேக்காட்டு, அர்த்தமற்ற தீர்வுகளைத் திணித்து விட வேண்டும் என்பதே இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்களின்,ஆட்சியாளர்களின் பிரபல வாய்ப்பாடு. அதனையே ஜனாதிபதி மஹிந்தவும் கையில் வைத்திருக்கிறார்.

அந்த வழி நாடியதாகவே அவரது கடந்த ஆறு வருட கால ஆட்சியும் அமைந்திருந்தது. இனியும் அதனையே கைக்கொள்ள அவர் விழைகிறார். அதற்குக் காலம் வாங்குவதற்குக் கைக்கொள்ளும் உத்திகளில் ஒன்றுதான் தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாமையை எடுத்துக் காட்டி, அவற்றிடையே கருத்தொற்றுமை உண்டாகும் வரைக்கும் காத்திருப்பதாகக் கூறும் மந்திரம்; தந்திரோபாயம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென்று கடந்த ஆட்சிக் காலத்தில் அனைத்துக் கட்சி மாநாடு என்ற ஒன்றை உருவாக்கி அது பல வருடங்களாக காலத்தை இழுத்தடித்து வந்ததையும், எட்டப்பட்ட முடிவுகள் தானும் வெளிப்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருப்பதையும்வெளிநாட்டு அவதானிகள் கூட கண்டித்திருக்கிறார்கள்

அது ஒருபுறம் -

இந்தியாவின் பட்டும்படாத நெருக்குதலின் பேரில், பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்துக்கு சில வர்ணப்பூச்சுக்களை சேர்த்து சோடித்து தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்போவதாக சில காலமாகக் கூறப்பட்டது. இப்போது அதுபற்றிய சிந்தனை மறுவளமாகி ஏது ஏதோ எல்லாம் அரச தரப்பில் பேசப்படுகிறது. இதனை சென்னையில் இருந்து வெளிவரும் 'த இந்து' பத்திரிகையும் மணந்து பிடித்து ஓர் ஆசிரியத் தலையங்கத்தை எழுதியிருக்கிறது. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் என்.ராம் மிகப் பெரும்பாலும் ஜனாதிபதியின் கொள்கைகள், செயற் பாடுகளைச் சிலாகித்து எழுதுவதே வழமை.

ஆனால் -

இவ்வார முற்பகுதியில் புதுடில்லியில் நடைபெற்ற மன்மோகன் - மஹிந்த பேச்சுக்களை, அதாவது மஹிந்த அரசின் இப்போதைய நிலைப்பாட்டைக் கருத்தில் கொண்டு -

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எப்போதும் இல்லாதவாறு இப்போது கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதில் இலங்கை அரசு ஆர்வம் காட்டாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது 'த இந்து'.

மொத்தத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இலங்கை அரசாங்கம், மஹிந்த அரசாங்கம் திசைமாறிச் செல்வதாக 'த இந்து' சாடியிருக்கிறது.

அத்தகைய திசைமாறுதல்களில் ஒன்றுதான், தமிழ்க் கட்சிகள் மத்தியில் அரசியல் தீர்வைக் காண்பதில் காணப்படும் ஒற்றுமை இன்மையைத் 'தூக்கிப்பிடிக்கும்' புதிய தந்திரோபாயம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதிய தந்திரோபாயம் ஒரு பக்கத்தில் இருக்கட்டும்.

இருக்கட்டும் -

அதனை எமக்குச் சாதகமாக்கி எங்களை நாங்களே திருத்திக் கொள்வதற்கு வந்துள்ள வாய்ப்பாக, அரிய சந்தர்ப்பமாக மாற்ற வேண்டும். தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய அவர்களது பிறப்புரிமை கள், ஜனநாயக உரிமைகள் கிடைக்காதிருப்பதற்குத் தமிழ் அரசியல்வாதிகளிடம் காலாதிகாலமாக நிலவிவரும் ஒற்றுமைஇன்மையும்பிரதான காரணங்களில் ஒன்று எனத்தொடர்ந்து சரித் திரமாகிக் கொண்டிருப்பதுதான். இதன் மறுபக்கம் டி.எஸ். சேனநாயக்கா காலம் தொடக்கம் மஹிந்த காலம்வரை தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமை இன்மை தொடர்கிறது. இது தமிழ் மக்களைப் பீடித் துள்ள சாபக்கேடுகளில் முதன்மையானது. அதுவே தமிழர் களின் இன்றைய திக்கற்ற நிலைக்கு பிரதான காரணங்களில் முதன்மையானது என்பதிலும் சந்தேகம் இல்லை. இலங்கைத் தமிழ் இனத்தைப் பீடித்துள்ள அந்த நெடுங்கால கொடிய நோயைத் தீர்க்க வேண்டியவர்கள்தமிழ் மக்களே. அவர்களே உரிய வைத்தியர்கள்.

அரசாங்கங்களுடன் காலத்துக்கு காலம் ஒட்டிக்கொள்ளும் எட்டப்பர்களை இனங்காணாமலும், இனங்கண்டு கொண்டாலும் தேர்தல் காலங்களில் பல சலுகைகளுக்காக தமது வாக்குகளைக் கரியாக்குவதும் தமிழர்களிடம் இடைவெளி இன்றி இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சாபக்கேட்டை நீக்குவதற்கு தற்போதுள்ள தமிழ்த் தலைமைத்துவங்கள் முன்வரவேண்டும். தமிழ் மக்களின் அரசியல் இருப்பைக் காப்பாற்ற இப்போதாவது அவை மனங் கொள்ள வேண்டும். எங்கள் எதிர்காலச் சந்ததியினரின் நலன் நாடி வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபட வேண்டும். இல்லை யேல் இந்த நாட்டில் தமிழினம் அடிமை வாழ்வு நடத்தும் நிலை உருவாகும்.

இதனைக் கடைசிச் சந்தர்ப்பமாகக் கொண்டு, தமிழ் அரசியல் கட்சிகள் தமது சுய அரசியல் வேதாந்தங்களைத் தூக்கி எறிந்துவிட்டு ஒன்று படவேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் தமது முந்திய பந்தம் பிடிக்கும் பண்பைத் துறந்து, இப்போதுள்ள அரசியல்வாதிகளைத் தள்ளிவைக்கும் புதிய அத்தியாயத்தை, இப்போதுள்ள எமது இளைய சந்ததியினர் தொடங்க நேரிடும்.

# உள்ளூராட்சி உறுப்பினர் பதவிகளில் 40 வீதம் இளைஞர்கள், பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்

## —ஐ.தே.க.முன்வைத்துள்ள ஆலோசனை—

கொழும்பு,ஒக்.21

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவிகளில் 40 வீதம் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சி ஆலோசனை தெரிவித்துள்ளது.

அரசாங்கம் முன்வைத்துள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான முன்வரைவுக்கு ஐ.தே.கட்சி சமர்ப்பித்துள்ள திருத்தப் பிரேரணையில் மேற்படி ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலித் தொகுதி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக இந்த தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

1989 ஆண்டு இளைஞர் கிளர்ச்சி தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் இந்த ஆலோசனை முன் வைக்கப்பட்டிருப்பதாக கருணாதிலக தெரிவித்தார். இக்குழு ஆர்.பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நியமிக்கப்பட்டது. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இக்குழுவுக்கு தலைமை வகித்தார்.

இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களில் 40 வீத பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் அடிமட்ட தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் அவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதாக இருக்கும் என்று அந்த விசாரணைக் குழு சிபாரிசு செய் திருந்தது என்று அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கென இளைஞர்களிடமிருந்து கிடைத்துள்ள விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், ஐ.தே.க.வின் வேட்பாளர்களாக போட்டியிட விரும்பும் இளைஞர்களுக்கு இன்னமும் கால அவகாசம் இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது இரண்டாவது பதவிக் காலத்துக் கான சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ளும் சமயத்தில் மேலும் பல ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் பக்கம் தாவுவதற்குத் திட்டமிட்டு வருகிறார்கள் என்ற செய்தியை கயந்த கருணாதிலக மறுத்தார். (ப)

# காலை முதல் இரவு வரை வரவு செலவுத்திட்ட விவாதம்

கொழும்பு,ஒக்.21

வரவு செலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் மற்றும் செயற்குழுக்களுக்கு வாய்ப்பளிக்கும் விவாதத்தைக் காலை முதல் இரவு வரை நடத்துவதற்கு நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் மற்றும் செயற்குழுக்களுக்கு வாய்ப்பளிக்கும் விவாதம் காலை 9.30 மணி முதல் இரவு 7.30 மணிவரை இடம்பெறும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வரவு - செலவுத் திட்டம் நவம்பர் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகும்.

மேலும், இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதத்தை நவம்பர் 23ஆம், 24ஆம், 25ஆம், 26ஆம், 27 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு அரசு யோசனை முன்வைத்துள்ளது. மேற்படி விவாதத்தை ஏழு தினங்களுக்கு நீடிக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. ஆனாலும் இது தொடர்பாக இறுதித் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென அரசின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இதற்கிடையே வரவு - செலவுத் திட்டம் தொடர்பான செயற்குழுக்களுக்கு வாய்ப்பளிக்கும் விவாதத்தை நவம்பர் 29 ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் 10 ஆம் திகதி வரை 11நாள்கள் வரை நடத்துவதற்கும் தீர்மானக்கப்பட்டுள்ளது. (த-22)



வடமாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்துக்காக வவுனியாவுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்குக்கான ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகளை ஓமந்தைக்குச் சென்று பார்வையிடும் காட்சி.

# முத்தமிழ் விழா

நாவற்குழி,ஒக்.21

பிரிட்டிஷ் பிஸ்னஸ் பாடசாலையின் வருடாந்த முத்தமிழ் விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வரும் முன்பள்ளிகளின் மாணவர்கள் வழங்கும் பலவிதமான கலை நிகழ்வுகள் இதன்போது நடைபெறவுள்ளன.

மாணவர்களின் பெற்றோர்களைக் கலந்துகொள்ளுமாறு பாடசாலையின் இயக்குநர், ஆசிரியர் ஆகியோர் அழைத்துள்ளனர். (த-121)

# அன்னதான கலாசார மண்டபம் நாளை வவுனியாவில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.21

வவுனியா சித்தங்கேணி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் நிதியுதவியுடன் வவுனியாவில் அமைக்கப்பட்ட அன்னதான கலாசார மண்டபத்தின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வி.எஸ்.தேவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், இந்து மாமன்றத்தின் சார்பாக அதன் தலைவர் வி.கயிலாசபிள்ளை, பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன், உபதலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், மாமன்ற கட்டடக் குழுத் தலைவர் எஸ்.ரி.எஸ். அருளானந்தன், மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் 'விடைக்கொடிச் செல்வர்' சின்னத்துரை தனபாலா, மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

கட்டடத்தை இந்து மாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார். (த-204)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 05 | | 22.10.2010 |
| | | வெள்ளிக்கிழமை |
| திதி: | : | சதுர்த்தசி |
| | | காலை 06.27 வரை |
| நட்சத்திரம் | : | ரேவதி |
| | | மு.இ. 09.42 வரை |
| சுபநேரம் | : | 06.02 - 07.32 வரை |
| ராகுகாலம் | : | 10.32 - 12.02 வரை |

## நீங்காத நினைவலைகள்...

நேற்று நடந்தவை அனுபவமாக
இன்று நடப்பவை நல்லவையாக
நாளை நடப்பவை அறியாதவையாக
நாள்கள் நகர்வதே வாழ்வின் சரித்திரம்
போதனா வைத்தியசாலையின் போதாத காலம்
1987 ஒக்ரோபர் 21, 22 இல்
பொல்லாத சரித்திரம் படைத்தது
இன்னுயிர் காக்கும் இனிய பணியில்
தன்னுயிர் ஈந்து மண்ணின் மடியில்
சிந்திக்க முடியாத சிறிதொரு நொடியில்
இந்திய இராணுவ இம்சையில் இறந்தனர்.
கடமையை நேசிக்க கண்ணியம் காத்து.
ஊதியம் நோக்கா ஊழியம் செய்து
உயிர்காக்கும் பணியில் தன்னிலை மறந்து
உயிர்கொடுத்து இன்று உத்தமமானவர்.
உற்றவர், பெற்றவர், உறவுகள் மறந்து
மற்றவர் பெற்ற துயரங்கள் களைந்து
விட்டிவர் சென்றிடா விடுதிகள் காத்து
விட்டனர் தன்னுயிர் சடுதியாய் அன்று
உம்முடன் சேர்ந்து போனவர் கணக்கு
யாருக்குத் தெரியும் அது ஆண்டவர் அழிப்பு
கடமையில் இருந்ததால் கண்டொமும் கணக்கு
நோய்தனில் வந்தவர் போனதார் பொறுப்பு
உலகினில் உங்கள் உயிரில்லை எனினும்
உருவங்கள் மறையா மனங்களில் உண்டு
உற்றவர், உறவினர் கலங்கிடும் போதும்
உலகினில் உன் புகழ் சரித்திரம் கூறும்

1987.10.21 ஆம், 22 ஆம் திகதிகளில்
யாழ்.போதனா வைத்தியசாலையில்
கடமையின் போது மரணித்தவர்கள் நினைவாக.


- பண்டைநகர் நாயகன் -

எல்.பீ. ஃபினான்ஸ் வடபகுதி மக்களை அன்புடன் வரவேற்கிறது

# யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவுக்கு எழிலான புதிய தோற்றம்

நன்மதிப்பும் வலிமையும் வாய்ந்த எல்.பீ. ஃபினான்ஸ் நிறுவனம் தனது நட்புறவின் அடையாளமான ஒரு நற்சேவையுடன் யாழ்ப்பாணத்தில் அடியெடுத்து வைத்துள்ளது. இந்த மாபெரும் நிதி நிறுவனம் அதன் புதிய யாழ்ப்பாணக் கிளையைத் திறந்துவைத்த அதே சமயத்தில், அதனால் புனருத்தாரணம் செய்யப்பட்ட பிரபல சுப்பிரமணியம் பூங்காவையும் யாழ் மக்களிடம் ஒப்படைத்துள்ளது. விமரிசையாக இடம்பெற்ற இந்த வைபவத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் திரு. அஜித் நிவாட் கப்ரால், யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, எல்.பீ. ஃபினான்ஸ் பிரதித் தலைவர் திரு. தம்மிக்க பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.





**முன்னேற்றச் சக்கரங்களின் அச்சாணி**
ஆளுநர் இலங்கை மத்திய வங்கி
**திரு. அஜித் நிவாட் கப்ரால் விடுத்துள்ள செய்தி**



அடுத்த 5 - 6 ஆண்டுகளில் தனிநபர் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்கும் எமது தேசிய முயற்சியாக, நிதி நிறுவனங்கள் நாட்டின் சகல பகுதிகளுக்கும் கடன் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் முக்கியமான பங்களிப்பைச் செய்ய வேண்டுமென நாம் நம்புகிறோம்.
அதே சமயத்தில், வடக்குக் கிழக்கு மாகாணங்களை தேசிய பொருளாதார அமைப்பில் ஒன்றிணைத்து, நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்குச் சமமானவையாக மாற்றும் சவாலுக்கும் நாம் அடுத்த சில வருடங்களில் முகங்கொடுக்க வேண்டியிருக்கும்.
இக் குறிக்கோளை அடைவதற்கு, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் கிளைகள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் திறக்கப்படுவது முக்கியமாகும். ஆகவே, எல்.பீ. ஃபினான்ஸ் நிறுவனம் அதன் புதிய கிளையை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு எடுத்த நடவடிக்கையை நாம் பெரிதும் வரவேற்கிறோம். நாட்டின் ஒட்டுமொத்தமான பொருளாதார நீரோட்டத்தில் இணைந்துகொள்வதற்கான நிதி சார்ந்த உதவிகளை அப் பிரதேச மக்கள் இதன் மூலம் பெற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.
எல்.பீ. ஃபினான்ஸ் நிறுவனமும் அதன் புதிய யாழ்ப்பாணம் கிளையும் சகல வெற்றிகளையும் பெற நான் வாழ்த்துகிறேன்.

**யாழ்ப்பாணத்தின் வளர்ச்சிக்கு ஒரு முக்கியமான உந்துசக்தி**
யாழ் மாநகர முதல்வர்
**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா விடுத்துள்ள செய்தி**



புனருத்தாரணம் செய்யப்பட்ட சுப்பிரமணியம் பூங்கா இன்று மத்திய வங்கி ஆளுநர் திரு. அஜித் நிவாட் கப்ரால் அவர்களால் மீளத் திறந்து வைக்கப்படுவது குறித்து யாழ் மாநகர முதல்வர் என்ற வகையில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.
இலங்கையிலுள்ள முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. அதன் புதிய கிளையை யாழ்நகரில் திறந்துவைப்பது தக்க தருணத்தில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். இந்த நிறுவனம், யாழ் மாநகர சபையுடன் இணைந்து நகரிலுள்ள பிரசித்தி பெற்ற சுப்பிரமணியம் பூங்காவைப் புனரமைப்புச் செய்துள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்களும் பிள்ளைகளும் தரமான பொழுதுபோக்கு வசதியைப் பெறுவார்கள்.
யாழ்ப்பாணத்தில் எல்.பீ. ஃபினான்ஸ் நிறுவனத்தினரின் சகல வியாபார முயற்சிகளும் வெற்றி பெற வேண்டுமென வாழ்த்தும் அதே சமயத்தில், இது போன்ற சமூகநல வேலைத்திட்டங்களை அவர்கள் எதிர்காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**மக்களின் நன்மைக்காக நாம் இங்கு நிரந்தரமாக வந்துள்ளோம்**
எல்.பீ. ஃபினான்ஸ் பிரதித் தலைவர்
**திரு. தம்மிக்க பெரேரா விடுத்துள்ள செய்தி**



இலங்கைச் சமூகக் கட்டமைப்புடன் பின்னிப் பிணைந்துள்ள எல்.பீ. ஃபினான்ஸ் நிறுவனம், இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ச்சியாக ஊக்கமளித்து வருகிறது. நிதித் துறையில் ஒரு முன்னணித் தீபமாக விளங்கும் நாம், அதிகரித்துவரும் மக்களின் அபிலாசைகளுக்கு உகந்த அதிநவீன நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம் இத் தொழிற்றுறைக்கு வலுவூட்டி வருகிறோம்.
எல்.பீ. ஃபினான்ஸின் 40 ஆண்டுகால வரலாற்றில் இன்றையத் தினம் முக்கியமானதொன்றாகும். இன்றுடன் எமது நிறுவனம் நாட்டின் சகல பிரதேசங்களிலும் தடம் பதிக்கும் வகையில் வலையமைப்பை விரிவுபடுத்தும் பெருமைக்குரிய திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பிரவேசித்திருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். யாழ்ப்பாண மக்களின் கனவுகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றிக்கொள்ள முன்னொருபோதும் அவர்களுக்குக் கிடைத்திராத தரமுயர்ந்த நிதிச் சேவைகளை நாம் வழங்கவிருக்கிறோம். நாட்டின் எதிர்காலம் இளைஞர்களிலேயே தங்கியுள்ளது. ஆகவே, எமது கதவுகளை யாழ்ப்பாணத்திற்குத் திறந்துவிட்டுள்ள நாம், அங்கு வாழும் இளைஞர்களுக்கு உதவியும் வழிகாட்டுதலும் வழங்கி, அவர்களின் எதிர்காலத்தைச் சுபீட்சமாக்குவதற்கு உதவ உறுதிபூண்டுள்ளோம். மக்களின் நன்மைக்காக நாம் இங்கு நிரந்தரமாக வந்துள்ளோம்.


**சுபீட்சத்திற்கு வழிகாட்ட**
**நாம் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளோம்**

யாழ்ப்பாண மக்களின் நிதித் தேவைகளை நிறைவேற்றி, அவர்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு வழிகாட்டுவதற்காக தரமுயர்ந்த நிதிச் சேவைகளுடன் எல்.பீ. ஃபினான்ஸ் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளது.



**எமது புதிய கிளை 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் இன்று திறந்துவைக்கப்படுகிறது.**
**தொலைபேசி: 021 4920310-11**

L B FINANCE
**எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி.** 275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேயசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி: 0114 521000 www.lbfinance.com

• நிலையான வைப்பு • நிதிக் குத்தகை • வாடகைக் கொள்வனவு • நுண் நிதிச் சேவை • அடகுச் சேவை • இஸ்லாமிய நிதிச் சேவை • பணப் பரிமாற்றம்

# வடக்கில் யுத்தத்தால் வீடுகளை இழந்த 600 குடும்பங்களுக்கு 2½ கோடி ரூபா

## அமைச்சர் டியூ குணசேகர காசோலைகளை வழங்குவார்

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் யுத்தத்தால் வீடுகளை இழந்த 600குடும்பங்களுக்கு இரண்டரைக் கோடி ரூபா நிவாரணம் வழங்கப்படும். இதற்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நாளை யாழ்.கச்சேரியிலும் நாளை மறுதினம் கிளிநொச்சி அரச அதிபர் அலுவலகத்திலும் நடைபெறும்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர, பிரதியமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா ஆகியோர் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு காசோலைகளை வழங்குவர்.

மேலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிறுகைத் தொழில்களை ஆரம்பிக்க நான்கு சதவீத வட்டியின் அடிப்படையில் கடனுதவியும் வழங்கப்படுமென அமைச்சர் டியூ குணசேகர நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு சகல உதவிகளையும் செய்து கொடுக்க எமது அமைச்சு திடசங்கற்பம் பூண் டுள்ளது. இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நூறு குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும்.

யுத்தத்தில் சேதமுற்ற வீடுகளைத் திருத்திக் கொள்வதற்காகக் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு இரண்டரைக் கோடி ரூபா வழங்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதிச் செயலாளர் பிரிவில் பளை நகரில் 39குடும்பங்களுக்கும், புலோப்பளை கிழக்கில் 25குடும்பங்களுக்கும், முல்லையடியில் 36 குடும்பங்களுக்கும், தம்பகாமத்தில் 39குடும்பங்களுக்கும், தர்மகேணியில் 19குடும்பங்களுக்கும், மாசாரில் 12 குடும்பங்களுக்கும், சோரன்பற்றில் 10 குடும்பங்களுக்கும், புலோப்பளை, மேற்கில் 19குடும்பங்களுக்கும் காசோலைகள் வழங்கப்படும்.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வட்டக்கச்சியில் 73 குடும்பங்களுக்கும், மாயவனூரில் 81 குடும்பங்களுக்கும், இராமநாதபுரத்தில் ஏழு குடும்பங்களுக்கும், உருத்திரபுரம் கிழக்கில் 55குடும்பங்களுக்கும், உருத்திரபுரம் மேற்கில் 30குடும்பங்களுக்கும், கிருஷ்ணபுரத்தில் 51 குடும்பங்களுக்கும், கணேசபுரத்தில் நான்கு குடும்பங்களுக்கும் காசோலைகள் வழங்கப்படும்.

இதற்கும் மேலதிகமாகத் தமது வீடுகளை மேலும் புதுப்பித்துக் கொள்ள நான்கு சதவீத வட்டியில் இரண்டரை லட்சம் ரூபா வரை கடன் வழங்கும் நடவடிக்கையும் இப்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்ட நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட 200 குடும்பங்களுக்கும் மன்னார் மாவட்ட முசலி, மடு ஆகிய பிரதேச செயலகத்துக்குட்பட்ட 200 குடும்பங்களுக்கும், அநுராதபுரம் வெலிஓய பிரதேச செயலகத்துக்குட்பட்ட 100குடும்பங்களுக்கும் நவம்பர் மாதத்துக்குள் முதற்கட்டமாக 50ஆயிரம் ரூபா வழங்கப்படும். இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் வழங்கப்படும்.

வடக்கில் சிறிய, நடுத்தர கைத் தொழில்களை ஆரம்பிக்க 50 லட்சம் ரூபாவரை ஒன்பது சதவீத வட்டிக்கு கடன் வழங்கவும் வட மாகாணப் புனர்வாழ்வு அதிகார சபை அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சுயதொழில். முயற்சிகளுக்கென நான்கு சத வீத வட்டி யில் இரண்டரை லட்சம் ரூபா வரை வழங்கவும் அதிகார சபை தீர்மானித்துள்ளது. இவ்வாறு அமைச்சர் கூறினார். (த)

## சான்றிதழ், விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.21

கொழும்பு தேசிய உற்பத்தித் திறன் செயலகமும் யாழ். செயலகமும் இணைந்து நடத்திய 'ரிஓரி' பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே மேற்படி விருதுகளைவழங்கிக் கௌரவிப்பார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறும்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களை தவறாது பங்கு பற்றுமாறு தேசிய உற்பத்தியினர் செயலகம் அறிவித்துள்ளது. (201-302)



மக்கள் வங்கியின் 49 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையினர் ஒரு தொகுதி பொருள்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அண்மையில் அன்பளிப்பாக வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் குளிர்சாதனப் பெட்டிகளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மருத்துவர் க.தயாளனிடம் கையளிப்பதையும் அருகில் சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் உட்பட வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: தென்னவன்)

## அமெரிக்கன்- இலங்கை மிஷன் ஆண்டு விழா அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஒக்.21

அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையினால் தாய் சங்கத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா மானிப்பாய் திருச்சபை வளாகத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் அமெரிக்கன் -இலங்கை மிஷன் திருச்சபையின் தலைவர் அ.ஜெயக்குமாரன் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

இந்த நிகழ்வில் 3 ஆயிரம் பிரதிநிதிகள் பங்குபற்ற உள்ளனர். இவர்கள் அமெரிக்கா, இந்தியா மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வருகை தரவுள்ளனர். அன்றைய தினம் குருத்துவ அபிஷேக வழிபாடு, பாரம்பரிய கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளினை முன்னிட்டுசித்திரப் போட்டி, கட்டுரைப் போட்டி என்பன திறந்த போட்டியாக இடம்பெற்று வருகின்றன. இம்மாதம் 31 ஆம் திகதி கண்காட்சி ஒன்றும் மரநடுகைத் திட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கு அமெரிக்க மிஷனின் தொண்டர்கள் 1816 ஆம் ஆண்டு வந்தார்கள். 1823 ஆம் ஆண்டு இலங்கையிலேயே முதலாவது பாடசாலையாக இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. மக்களின் வைத்திய தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக 1848 ஆம் ஆண்டு மானிப்பாயில் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆசியாவில் முதலில் விடுதிகளுடன் கூடிய பெண்கள் பாடசாலையாக உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. உலகின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையான உதயதாரகையையும் அமெரிக்க மிஷனே வெளியிட்டது- என்றார். (த-15)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு 'கடவுளின் குழந் தைகள் நிறுவனம்' புலோலி சிறுவர் கிராமத்தில் நடத்திய சிறுவர் தின நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது.

இந்த நிகழ்வில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி விம்புறுபோம் மற்றும் ஒன்றியத்தின் பிரதிநிதிகளான திருமதி சந்தலி, திருமதி வனேசா ஆகியோரை நிறுவனத் தலைவர் டாக்டர் பி.ஆனந்தகுமார், இயக்குநர் திருமதி கு.ஜசிந்தா ஆகியோர் வரவேற்பதைப் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)




## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக்.21

சித்தன்கேணி- தனுவோடைப்பதி சிவசிதம்பரேஸ்வரப் பெருமான் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை முதல் 29 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை இடம் பெறவுள்ளது.

பிரதிஷ்டா பிரதமகுரு வித்தியாஸாகரம் சிவஸ்ரீ சபா வாஸுதேவக் குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

குடாநாட்டில் உள்ள 35 குருக்கள்மார் பங்கு பற்றி கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கவுள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இராஜகோபுர கலச கும்பாபிஷேகமும் தூபிகலச அபிஷேகமும் இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு மூலாலய மஹா கும்பாபிஷேகமும் இடம் பெறும். (201-302)

## பசுப்பாலை சந்தைப்படுத்த முடியாமல் திணறும் தென்மராட்சி தெற்கு மக்கள்

சாவகச்சேரி, ஒக்.21

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்திலுள்ள மறவன்புலோ, கோயிலாக்கண்டி, தச்சன் தோப்பு உள்ளிட்ட பகுதிகளில் கால்நடை வளர்ப்போர் குறிப்பாக பால் மாடு வளர்ப்போர், பசுப்பாலினை சந்தைப்படுத்த முடியாத நிலைக்கு உட்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதடியில் உள்ள பால் சேகரிப்பு நிலையத்தில் கால்நடை வளர்ப்போரால் வழங்கப்படும் பாலில் ஒருவரிடமிருந்து (ஐந்து) லீற்றர் பால் மட்டுமே கொள்வனவு செய்யப்படுவதாகக் கால்நடை வளர்ப்போர் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே எதிர்காலத்தில் தென்மராட்சி தெற்குப் பகுதியில் பால் அடைக்கும் தொழிற்சாலையொன்றை அமைத்துப் பைக்கற் மூலம் பாலினை அடைத்து சந்தைப்படுத்தக் கூடிய வசதியை ஏற்படுத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கால் நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளால் பல இடங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களை கட்டாக்காலியாக திரியும் ஆடு, மாடுகள் மேய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தச்சன்தோப்பு, கைதடி, தனங்கிளப்பு உட்பட பல இடங்களில் வயல்களில் பயிர்களாக விளைந்திருக்கும் நெல் நாற்றுக்களை ஆடுகள், மாடுகள் மேய்ந்து வருவதால் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் இவ்வருடம் அதிகளவில் பல இடங்களில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-131)

## தவறவிடப்பட்ட கைப்பையைக் கண்டெடுத்து ஒப்படைத்த மாற்று வலுவுள்ள இளைஞர்

தென்மராட்சி.ஒக்-21

தென்மராட்சி பிரதேச செயலக வளாகத்தில் கண்டெடுத்த பணப்பையை பிரதேச செயலக அதிகாரிகளிடம் கையளித்து உரியவரிடம் சேர்ப்பித்த மாற்று ஆற்றலுடைய இளைஞரை பொதுமக்கள் பாராட்டியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூகசேவை கள் பிரிவில் முச்சக்கரவண்டிக்குப் பதிவு செய்ய வந்த சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த நல்லதம்பி பரமேஸ்வரன் பிரதேச செயலக வளாகத்தில் காணப்பட்ட பணப்பையை எடுத்து பிரதேச செயலக ஆளணி உத்தியோகத்தரிடம் கையளித்துள்ளார்.

சிறிது நேரத்தில் பணப்பையை தவறவிட்டவர் அழுதவண்ணம் தேடிய போது அங்கு நின்றவர்கள் நிர்வாக உத்தியோகத்தரிடம் அழைத்துச் சென்றனர். தவறவிட்ட கைப்பையின் அடையாளங்களை உறுதிப்படுத்திய பின்னர் கைப்பை உரியவரிடம் கையளிக்கப்பட்டது. கைப்பையில் 27 ஆயிரம் ரூபா பணம், நகை, அடவுச்சீட்டு, தேசிய அடையாளஅட்டை உட்படபல்வேறு ஆவணங்கள் காணப்பட்டன.

கைதடி, நுணாவிலைச் சேர்ந்த கைப்பையைத் தவறவிட்ட பெண் வங்கியொன்றில் நகை அடவு வைத்த பணத்துடன் பிரதேச செயலகத்தில் பிறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்க வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்டெடுத்த இளைஞரை அழைத்து அவரது முன்னிலையில் கைப்பை பெண்ணிடம் கையளிக்கப்பட்டது.

இந்த இளைஞரின்செயலை அங்கு நின்ற மக்களும் உத்தியோகத்தர்களும்பாராட்டினர். (த-204-207)

## ஆயுள்வேத பாதுகாப்புச் சபைக் கூட்டம் இன்று

கோப்பாய், ஒக்.21

வலி.கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மருத்துவர் வ.அனவரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் வியன் சத்தியசீலன் 'மூலிகையின் பயன்பாடு' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். ஆர்வமுள்ளவர்கள் கலந்து பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட சித்த ஆயுள்வேத மருத்துவர்கள் இச் சபையில் புதிதாக இணைந்து சபையின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு சபையினர் கேட்டுள்ளனர். (201-72)

## கைதடி கலைவாணி வித்தியாசாலை புனரமைப்புக்கு 8 லட்சம் ரூபா நிதி

நாவற்குழி, ஒக்.21

கைதடி கலைவாணி வித்தியாசாலையில் கடந்த 2000 ஆம் ஆண்டு யுத்த காலத்தில் சேதமடைந்த கட்டடம் ஒன்று தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வடமாகாண கல்வியமைச்சு தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களம் ஊடாக எட்டு லட்சம் ரூபா நிதியை இதற்கென வழங்கியுள்ளது.

ஆரம்ப வகுப்பு வரை நடைபெறும் இப்பாடசாலையின் 3 கட்டடங்களில் ஏற்கனவே 2 கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. தற்போது புனரமைக்கப்படும் இக்கட்டடம் நிறைவு பெற்றதும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மிகவும் சீராக நடைபெற முடியுமென பாடசாலை அதிபர் ப.செல்லத்துரை தெரிவித்தார். (த-121)

# மரண அறிவித்தல்

## முத்துத்தம்பி தம்பிராசா (துரை)



இணுவில் கிழக்கு, அண்ணமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் உடுவில் மகளிர் பாடசாலை மேற்கு வீதியை வதிவிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி தம்பிராசா நேற்றுமுன் தினம் (19.10.2010) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் தவச்செல்வி (ஹொலண்ட்), இராஜேந்திரன் (உரிமையாளர்-ஹம்சிகா பான்சி கவுஸ், யாழ்ப்பாணம்), சிவகுமார் (அதிபர் -மன்/கோவிற்குளம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகேஸ்வரன் (ஹொலண்ட்), சுபாசினி (ஆசிரியை - யா/இராமநாதன் கல்லூரி), பிரபா (ஆசிரியை - யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் சஹானா, சஜீவ், சுவர்க்கா, ஹம்சிகா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), ஜெணங்கணன் (யா/ஜோன் பொஸ்கோ), மதுரிகா (மானிப்பாய் ஏஞ்சல்ஸ் சர்வதேச பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் சரஸ்வதி (லண்டன்), கமலரத்தினம் (ஜேர்மனி), சந்திராதேவி, மகேஸ்வரி, இராசதுரை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2010) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகளிர் பாடசாலை மேற்கு வீதி,*
*உடுவில், சுன்னாகம்.*
*தொ.பே.: 021 224 0769, 021 491 6839*

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/572073)

## சிங்கள வாய்மொழி மூல மீள் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.21

இலங்கை அரச கரும மொழித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண முகாமைத்துவப் பயிற்சித் திணைக்களத்தினால் கடந்த செப்ரெம்பர் மாதம் 17ஆம், 18 ஆம், 19ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட சிங்கள வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றாதோருக்கான பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் தமது பெயர், பரீட்சைச் சுட்டெண், தோற்றிய மாவட்டம், பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மாவட்டம் ஆகிய விவரங்களை இன்று வியாழக்கிழமைக்கு முன்னர் பணிப்பாளர், முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையம், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த- 288)

## கூட்டுறவுப்பயிற்சி பெற்றவர்களுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம் கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட, சாதாரண மற்றும் உயர்பிரிவு பயிற்சிகளில் பயிற்சிபெற்று இதுவரை வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளாதவர்களது விவரம் கல்லூரியால் சேகரிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய சங்கங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு சங்கங்களுக்குப் பயிற்சி பெற்றவர்களது பெயர்ப்பட்டியலை வழங்கும் வகையில் சபையில் ரூபா 20/- செலுத்தி தகவல் திரட்டும் படிவத்தைப் பெற்று 31/10/2010 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்,
இல.12, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/572069)

அதிபர்,
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி.

# மரண அறிவித்தல்

## சுப்பையா நாகராசா (வசந்தன்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், 3ஆம் வட்டாரம், முள்ளியவளையில் வசித்தவரும் தற்போது லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பையா நாகராசா (வசந்தன்) கடந்த 13.10.2010 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பிரபாவதியின் அன்புக் கணவரும் பவஹர்சன், ஹர்ணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இந்திரா, கருணாகரன், கண்ணன் மற்றும் சுந்தரம், நடராசா, இராதாகிருஷ்ணன், தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயபாலன், ஜெயவதனா, காலஞ்சென்ற நேமிநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஜிதா, கமலதாசன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2010) வியாழக்கிழமை லண்டனில் உள்ள மனோ பாக் மண்டபத்தில் நண்பகல் 12 - 3 மணிவரை நடைபெற்று, பிற்பகல் 3.30 மணிக்கு City of London Cemetery Crematorium எனும் இடத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: சுந்தரம் - 0094 77 6763901
ஜெயபாலன் - 0094 77 6447326
நிலீபன் - 0044 7891209077 (London)

தகவல்:
குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## திருமதி
## கதிரவேலு புவனேஸ்வரி

*வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு புவனேஸ்வரி நேற்று (20.10.2010) புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்புமனைவியும் சுந்தர நடராசா (சுந்தரி), நடேஸ்வரி, சோமாஸ்கந்தராசா (சோமு), கோபாலகிருஷ்ணன் (சுவிஸ்), முருகானந்தன் (ஜானுசன் களஞ்சியம்-ஆனந்தி), சத்தியசீலன் (ஜானுசன் ஆட்டோ-சத்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இலட்சுமிதேவி, மகேந்திரன் (வள்ளுவர்), சிதம்பரேஸ்வரி, தட்சாயினி (சுவிஸ்), வனிதா, சிவறஞ்சினி (மு.ப.ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுதாகரன் (சவுதி), சுஜாத்தா, சுஜித்தா, சுவர்ணா, சுபேசன், றமணேந்திரன் (பிரதேச சபை உத்தியோகத்தர்), கஜனி காலஞ்சென்ற வரதன் (I.T.Park) மற்றும் ஜானுசன் (சுவிஸ்), டினுசன் (சுவிஸ்), ஜஸ்மி (சுவிஸ்), மிதுசன், பேபிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரஜீனாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.10.2010) வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

மாவடிச் சந்தி,
வட்டுமேற்கு,
வட்டுக்கோட்டை.

(104932)

தகவல்:
குடும்பத்தினர்

# சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம்;
# சிறுவர் இல்லத்தை மூடுமாறு உத்தரவு

மன்னார்,ஒக்.21

மன்னார், முருங்கன் பகுதியில் அமைந்துள்ள 'என் இரட்சகர்' சிறுவர் இல்லத்தில் 18 வயதிற்குட்பட்ட பல சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்தச் சிறுவர் இல்லத்தை மத போதகரான திருமணமாகி 3 பிள்ளைகளின் தந்தையுமான அ.அமிர்தலிங்கம் (வயது - 45) என்பவர் நடத்தி வருகின்றார்.

இந்த நிலையில் குறித்த சிறுவர் இல்லத்தில் விடுமுறை நாள்களில் குறித்த போதகர் சிறுமிகள் சிலரை மன்னார் பெரியகமம் பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு வீட்டுவேலைக்காக அழைத்து வந்துள்ளார். இந்த நிலையிலேயே மேற்படி துஷ்பிரயோகம் இடம் பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள 15 வயதுடைய சிறுமி ஒருவர் மன்னார் சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகளினூடாக மன்னார் மாவட்ட நீதி மன்றத்திக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து மேலும் ஒரு சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டமை தெரிய வந்துள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட நீதிபதி குறித்த இரண்டு சிறுமிகளையும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் குறித்த சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றி குறித்த இல்லத்தினை மூடுமாறும் உத்தரவிட்டிருந்தார். நேற்று முன்தினம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அந்தச் சிறுவர் இல்லம் நேற்று மூடப்பட்டது. இதேவேளை குறித்த மத போதகர் தலைமறைவாகியுள்ள நிலையில் மன்னார் பொலிஸார் அவரை வலைவீசித் தேடிவருகின்றனர்.



கிளிநொச்சி கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. பாடசாலையின் பழைய மாணவர்களான பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்தபோது... (படம்: லோகிதன்)




# எதிர்காலக் கட்டுமானங்களின் பங்காளராக தொழிற்பயிற்சியாளர் மாறவேண்டும்

## மேலதிக அரச அதிபர் ஸ்ரீநிவாசன்

எதிர்கால கட்டுமானங்களின் பங்காளர்களாக தொழில் பயிற்சியாளர்கள் உருவாக வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பொறுப்பேற்ற ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

உலக கனேடிய பல்கலைக் கழக சேவையின் நிதியீட்டத்தில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் இரண்டு தொழிற் பயிற்சி மையங்கள் கிளிநொச்சி, கனகாம்பிகைக் குளத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிக அரச அதிபர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் கட்டுமானத்திற்கு இப்பகுதி இளைஞர், யுவதிகள் பங்களிக்க வேண்டும். அதற்கு ஏதுவாகத் தொழிற்பயிற்சிகளையும் நுட்பங்களையும் பெற்ற இளைய சமூகம் எதிர்கால அபிவிருத்திக்கு தமது பங்களிப்பை நல்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் உலக கனேடிய பல்கலைக்கழக சேவையின் பிராந்திய பணிப்பாளர் துவான் மஸ்கி, தொழிற்பயிற்சிச் சபையின் உதவிப் பணிப்பாளர் விஜயராஜ் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் முன்னர் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் உபகரணத் தொகுதியும் புதிய பயிற்சியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளையும் மேலதிக அரச அதிபர் வழங்கி வைத்தார். (த-301)

# மூடப்பட்டுள்ள மருதநகர் வீதி; பல மைல்கள் நடக்கும் மாணவர்

கிளிநொச்சி,ஒக்.21

கிளிநொச்சி நகரில் இருந்தும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இருந்தும் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மருதநகர் கிராமத்தின் பிரதான வீதி படைத்தரப்பினால் மூடப்பட்டுள்ளமையால் அக்கிராமத்தில் வாழும் மக்களும், மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தக் கிராமத்தில் பரந்த வயல் வெளிகளில் குடியேறியுள்ள மக்களும், மாணவர்களும் வடக்கே 2 கிலோ மீற்றர் சென்று கரடிப்போக்குச் சந்தியை வந்தடைந்து மீண்டும் தெற்கே உள்ள நகரத்துக்கோ, பாடசாலைக்கோ 2 கிலோமீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது.

இக்கிராம மக்கள் மிகவும் வறியவர்களாக உள்ளதால் பாடசாலை மாணவர்கள் நடந்தே பள்ளிக்கூடம் செல்கின்றனர். அவர்கள் சப்பாத்துக்களுடனும், வெறும்கால்களுடனும் வயல் சேற்றுக்குள்ளால் நடந்து பாடசாலை செல்வதைக் காணமுடிகிறது. அது தவிர விவசாயக் கிராமத்தின் இவ்வீதி மூடப்பட்டுள்ளமையால் உழவு இயந்திரங்கள், உழவுமாடுகள், விதைபொருள்கள் என்பவற்றை நீண்ட தூரம் சுற்றிக் கொண்டு சென்றே கமத்தொழிலில் ஈடுபடவேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அக்கறைகாட்டி வீதியைத் திறக்க ஆவன செய்யுமாறு மக்கள் கோரியுள்ளனர். (த-301)

# மன்னாரில் செம்மொழி மாநாடு நாளை கோலாகலமாக ஆரம்பம்

மன்னார்,ஒக்.21

மன்னார் தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ்ச் செம்மொழி விழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நான்கு தினங்கள் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெறும் வித்துவான் ரஹ்மான் அரங்கு மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ.நிக்கொலஸ்பிள்ளை சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச.மோகநாதன், மன்னார் பிரதேச செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.றதினி யூட், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்.பல்கலைக் கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, மூத்த எழுத்தாளர் 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா, எழுத்தாளரும் ஆய்வாளருமான 'காப்யக்கோ' வைத்திய கலாநிதி ஜின்னா சரிபுதீன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடக்க நாளான நாளை பண்பாட்டுப் பேரணி மன்னார் பாலத்தில் இருந்து ஆரம்பமாகி மன்னார் நகர மண்டபம் வரை இடம்பெறும். இந்தப் பேரணியில் வேடப்புனைவு, ஊர்திகள் பவனி, மங்கள இசை என்பன இடம்பெறும்.

மங்கள விளக்கை மன்னார் மாவட்ட இந்துமத பிரதம குரு கலாநிதி எஸ்.மனோகரக்குருக்கள், மன்னார் பங்குத்தந்தை அருட்கலாநிதி எஸ்.கே.தேவராஜா, மன்னார் முஹைதீன் ஜும்மா மஸ்ஜித்தைச் சேர்ந்த அஸ்ஸெய்க் எஸ்.ஏ.அஸீம், மன்னார் ஸ்ரீ சுவர்ண பிரம்மராம விகாராதிபதி சங்.பி.என்.விமலரத்னதேரர் ஆகியோர் ஏற்றிவைப்பர்.

முதல் நாள் காலை நிகழ்வில் தமிழ்ச்செம்மொழி பற்றிப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புரை ஆற்றவுள்ளதுடன் செம்மொழி வாழ்த்து நடனத்தை ஸ்ரீ சாகித்தியா நடனப்பள்ளி மாணவியர் நிகழ்த்தவுள்ளனர்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் மாலை அமர்வில் இடம்பெறும் லோறன்ஸ் புலவர் அரங்குக்கு மன்னார் தமிழ்ச்சங்க நிர்வாக உறுப்பினர் வைத்திய கலாநிதி எஸ்.லோகநாதன் தலைமை தாங்குகின்றார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலக திட்டப்பணிப்பாளர் ஏ.பத்திநாதன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே.துரம் முசலி, பிரதேச செயலர் செ.கேதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக மூத்த இசை ஆசிரியர் இசைக்கலை மாமணி திருமதி ஞானம்மா வி.யோண்மில்ரன், எழுத்தாளர் 'கலை தீபம்' திருமதி சுகைதா ஏ.கரீம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை மன்னார் இந்துமத பிரதமகுரு கலாநிதி எஸ்.மனோகரக்குருக்கள் வழங்கவுள்ளார். செல்வி ஏ.ஜே. அருள்மொழியின் இசைக்கச்சேரி, நானாட்டான் கோட்ட இசைஆசிரியர்களின் நாட்டார் பாடல், செல்வி ஆர்.ஜ.துஷிக்காவின் வீணை இசைக்கச்சேரி, மன்னார் கோட்ட இசை ஆசிரியர்களின் கதம்பமும், கலாபூஷணம் எஸ்.மாசிலாமணி குழுவினரின் வில்லிசையும், சங்கமம் இசைக் குழுவின் மெல்லிசைக்கச்சேரியும் இடம்பெறும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வான இலக்கிய விழாவில் ராஜம் புஸ்பவனம் அரங்குக்கு மன்னார் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் மக்கள் காதர் தலைமை தாங்குகின்றார்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட உதவிச் செயலாளர் எம்.பரமதாசன், சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலர் சி.ஏ.சந்திரஜயா, மடு உதவி அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், கௌரவ அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் தில்லைநாதன்,எழுத்தாளரும் ஆய்வாளருமான கலாபூஷணம் பி.எம்.புண்ணியாமீன் ,மூத்த மலையக எழுத்தாளரும் 'கொழுந்து' ஆசிரியருமான அந்தனி ஜீவா ஆகியோர் கலந்து கொள்வர்

இந்நிகழ்வில் அருட்தந்தை ஜெறோம் லெம்பேட் (அமதி)டின் சிறப்புச் சொற்பொழிவும் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் 'மொழியார்வம் நம்மிடையே முழுதாகி நிற்கிறது' என்னும் தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் மாலை அமர்வு நாட்டிய விழாவில் சுண்டிக்குளிப் புலவர் (விறாஸ்டி மொத்தம் கபிரியல்) அரங்குக்கு மன்னார் தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் வி.எஸ்.சிவகரன் தலைமை வகிக்கின்றார்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆபேல் றெவ்வல், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.ஸ்ரீதேவி, கலாரத்னா திருமதி லீலாம்பிகை செல்வராஜா கௌரவ விருந்தினர்களாக கலார்ப்பணா இயக்குநர் நாட்டி யாரத்தினாகரம் திருமதி வசந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, நிக்கொட் முன்னாள் பிரதித் திட்டப் பணிப்பாளர் க.இராஜரெட்ணம் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் சிவதரிசனம், குழுநடனம், கோலாட்டம், கிராமிய வசந்தம், மன்னார் செவ்வியல் நடனம், பாங்ரா நடனம் (வட இந்திய நடனம்), காவடிச்சிந்து, நடனசங்கமம், தில்லானா ஆகியவை இடம் பெறவுள்ளன. (6)

## நூல் கண்காட்சி

காயத்திரி பப்ளிக்கேஷனின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துருவில் உள்ள படைப்புக்களை அச்சுரு ஏற்றவுள்ளனர்.

சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், சிறுவர் கதைகள், 25 இளம் எழுத்தாளர்களின் கவிதைகள், புதுமுக எழுத்தாளர்களின் ஆக்கங்கள், பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தேவையான கல்விசார் நூல்கள், உளவியல் நூல்கள், கணினி நூல்களை கண்காட்சி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த நூல்கண்காட்சி மன்னார் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். (6)

# பொன்விழா கொண்டாடும் மல்லாவி சென்றல்

நாவற்குழி,ஒக்.21

மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்விப் பாரம்பரியத்திற்கு அளப்பரிய சேவையாற்றிய இப்பாடசாலை எராளமான கல்விமான்களை உருவாக்கியுள்ளது. இதன் 50ஆம் ஆண்டு நிறைவையொட்டி பல போட்டிகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இடப்பெயர்வின் பின் மீள இயங்க ஆரம்பித்துள்ள இப்பாடசாலை குறுகிய காலத்திற்குள் தன்னை வளப்படுத்தி முல்லை மாவட்டத்தின் கல்வித் துறைக்கு அளப்பரிய சேவையை ஆற்றுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (6-121)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் கிளிநொச்சி உருத்திரபுரம் புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கப்பட்டது. நிகழ்வில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி அன்ரறீற்றா மற்றும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து மாணவர்களுக்கு பசுப்பால் வழங்குவதைக் காணலாம். (படம்: கர்ணன்)

# கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவைகள் மீண்டும் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம்,ஒக்.21

கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளை மீளவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் செயலாளர் சு.தர்மரத்தினம் தெரிவித்துள்ளார்.

தற்போது சங்கத்தில் தொண்டராக இணைந்து பணியாற்ற விரும்புவோரிடம் இருந்து செஞ்சிலுவைச் சங்கம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. யுத்த காலத்தில் தொண்டராகப் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொண்டர்களாகப் பணியாற்ற விரும்புவோர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் முன்பாக அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கடந்த காலத்தில் தொண்டராகச் சேவையாற்றியவர்களுக்கான கொடுப்பனவு தொடர்பான கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (6-301)

# செய்தியாளர் மாநாட்டில் எதிர்ப்பு மாகாண சபைகளில் ஆதரவு

## உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்தில் ஐ.தே.க. இரட்டை வேடம்

கொழும்பு, ஒக்.21

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி கருத்து தெரிவிக்கின்றது. ஆனால் மாகாண சபைகளில் அக்கட்சி உறுப்பினர்கள் சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்றனர். இதுவே ஐ.தே.கட்சியின் இரட்டைவேடம்.

இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவை விடுவிக்கும் போராட்டம் தளர்ந்து விடவில்லை. நாம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றோம். சரத் பொன்சேகாவை விடுவிக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு கடிதம் எழுதினார். இது குறித்து வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

சரத் பொன்சேகாவின் பாரியார் அல்லது அவரது புதல்விகள் மன்னிப்புக் கோர வேண்டும் என அரச தரப்புக் கூறுகின்றது. அவ்வாறு மன்னிப்புக் கோரினால் சரத் பொன்சேகா தான் செய்யாத குற்றத்தை ஏற்றுக்கொண்டார் எனக் கருதப்படும். இதனால் அவரது எதிர்கால அரசியல் வாழ்க்கை சூனியமாகிவிடும். இதையே அரசு எதிர் பார்க்கின்றது.

மன்னிப்புக் கோரிய பின்னர் அவரை விடுதலை செய்யாமல் தொடர்ந்து சிறையில் வைக்கவும் முடியும். எப்படியோ அவர் அல்லது அவரது குடும்பத்தினர் மன்னிப்புக் கோரப் போவதில்லை.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)


மஹஜன சம்பத
மஹஜன சம்பத
Mahajana Sampatha

19.10.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2307

வெற்றி எழுத்து M
வெற்றி எண்கள் 5 0 4 5 9 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M | 5 | 0 | 4 | 5 | 9 | 4 | ரூபா.11,969,091/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 5 | 0 | 4 | 5 | 9 | 4 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 0 | 4 | 5 | 9 | 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | | | | 4 | 5 | 9 | 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 136 |
| 4 பரிசுகள் | | | | | 5 | 9 | 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1325 |
| 5 பரிசுகள் | | | | | | 9 | 4 | ரூபா. 100/= | பரிசுகள் 13422 |
| 6 பரிசுகள் | | | | | | | 4 | ரூபா. 20/= | பரிசுகள் 132641 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 5 | 0 | 4 | 5 | 9 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 5 | 0 | 4 | 5 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 143 |
| 9 பரிசுகள் | | 5 | 0 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1331 |
| 10 பரிசுகள் | | 5 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13239 |
| 11 பரிசுகள் | M | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 53253 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 12,113,130.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 13,207,254.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


### காணி இல்லாதோர் பதிவு செய்க

யாழ்ப்பாணம், ஒக்.21

நெடுந்தீவில் வதியும் மக்களில் சொந்தமாகக் காணியில்லாதவர்கள் தமது பெயர் மற்றும் விவரங்களை தமது பகுதி கிராம அலுவலரிடம் அல்லது நெடுந் தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பதிவு செய்யுமாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (த-7)


**TVகள் மலிவு விற்பனை**

50இற்கும் மேற்பட்ட Sony wega Flat 14''-9000/=, 21''-14,000, 25''-20,000/=, 29''-25,000/= பொக்ஸ் வகைகள் (JBL), அம்பிளிவயர்கள் DTS, குளிர்சாதனப் பெட்டிகள், Cassete, Deck, Radio கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771393670, 0214920853.
இ.மகேஸ்வரன் (அப்பன் கோப்பி),
ரீவிப்புவியாடி (ஆரம்ப பாடசாலை அருகில்), கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

**காணி விற்பனைக்கு**

மட்டுவில், சந்திரபுரம் அரசடி வீதியில் (குளக்கடை ஒழுங்கை) அமைந்துள்ள காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- வட்வோட் விக்ரர் 0773250012

**வேலைக்கு ஆள்கள் தேவை**

Salesman, Bill Clerk ஆகிய பதவிகளுக்கு O/L, A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-
270, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212222403, 021 222 3535



**நன்றிகளும் பாராட்டுக்களும்**



மதிப்புயர் C.A.மோகன்ராஸ்
(மேலதிக அரச அதிபர், முல்லைத்தீவு,
முன்னாள் பிரதேச செயலர் - வலி.கிழக்கு கோப்பாய்)

ஏழைகளின் இதய தெய்வமே! வாழ வைத்த வசந்தமே
வீடுகள், காணிகள் மக்கள் சேவை நிலையங்கள் வாழ்வாதாரங்கள்
இன்னும் பல தந்த தலைவனே உங்கள் சேவைகளுக்கு நன்றிகளும்
உயர்வுக்கு பாராட்டுக்களும் கோடி கோடியாய் பகிர்கின்றோம்.

அச்சுவேலி மேற்கு
மகளிர் விவகாரக்குழு,
அச்சுவேலி.



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
**பிரவுண்ஸ் வழங்கும் பிரமாதமான சலுகை**
ஒக்டோபர் 31 வரைக்கும்

SHARP
AR 5516 கொப்பியரை
ரூபா.99,000/- +VAT 12% இற்கு வாங்கி




இலவசமாக SHARP GQ72 தொலைநகல்



அல்லது இலவசமாக 20,000 பிரதிகளை பெற்றுக் கொள்ளவும்

நிபந்தனைக்குட்பட்டது கையிருப்பு உள்ளவரை



SHARP Air Conditioners
* Compressor இற்கு 05 வருட உத்தரவாதம்.
* இலவச பொருத்தல் சேவை



Available : Sharp Multimedia Projectors.
Sharp Fax Machines



எப்போதும் தரமான உதிரிப்பாகங்கள் மற்றும் உள்ளீடுகளையே (Toners & Spares) நாடுங்கள்.

Brown & Co. Plc - IBS இன் அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்.

**டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்**
இல. 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4040, Fax : 021 222 4040
( ஸ்ரான்லி வீதி சம்பத் வங்கி முன்பாக)




25 உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
வெள்ளிவிழாவை முன்னிட்டு

பாடசாலை மாணவர்களிடையே இடம்பெறும்

## பொது அறிவுப் போட்டிப் பரீட்சை-2010

*மாணவர்களே!*

வினாத்தாள்மூலம் கேட்கப்படும் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள இன்றே உங்கள் பாடசாலை அதிபரின் அனுமதியுடன் விண்ணப்பியுங்கள். 3 தரங்களில் வினாத்தாள்கள் வழங்கப்படும்.

*6, 7, 8 ஆம் தர மாணவர்களுக்கான வினாத்தாள் 1*
*9,10,11 ஆம் தர மாணவர்களுக்கான வினாத்தாள் 2*
*12, 13 ஆம் தர மாணவர்களுக்கான வினாத்தாள் 3*

குறிப்பிட்ட ஒரு தினத்தில் சகல விண்ணப்பதாரர்களுக்கும் பொருத்தமான ஓர் இடத்தில் பரீட்சை நடத்தப்படும். பரீட்சைத்தினம் பத்திரிகை மூலம் பின்னர் அறிவிக்கப்படும். இத்துடன் வெளியிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் மாத்திரமே விண்ணப்பிக்கவேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 05.11.2010**

விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய முகவரி:
பொது அறிவுப் போட்டி, உதயன் வெளியீட்டகம்,
*361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

**உதயன் வெள்ளிவிழா – 2010**
**பொது அறிவுப் போட்டி**

1. மாணவரின் பெயர் : ..........................................
2. பாடசாலை : ..........................................
3. கற்கும் வகுப்பு : ..........................................

மேற்படி மாணவன் எனது பாடசாலையில் குறித்த வகுப்பில் கல்விகற்கின்றார் என்பதை உறுதிசெய்கிறேன்.

அதிபரின் பெயர் : ..........................

அதிபரின் ஒப்பம் : மாணவரின் ஒப்பம்

# இன்றைய சூழலில் பிள்ளைகளைக் கண்காணித்து வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கே

## பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் கந்தசாமி

சுன்னாகம், ஒக்.21

இன்றுள்ள சூழலில் பிள்ளைகளைக் கண்காணித்து வழிப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு பெற்றோருக்கு உரியது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பரிசளிப்பு விழா கடந்த வெள்ளியன்று அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

மாணவர்கள் பாடசாலையை விட தனியார் கல்வி நிலையங்களிலேயே அதிக நேரத்தைச் செலவு செய்கின்றனர். தனியார் கல்வி நிலையங்களில் வினாக்களுக்கு விடையளிக்கும் விதத்திலேயே கற்பிக்கப்படுகின்றன. இதனால் அவர்கள் சுயமாகக் கற்கவும் சுய தேடுதலில் ஈடுபடவும் கூடிய சந்தர்ப்பங்களை வழங்குவதில்லை.

சுயகற்றலும் சுயதேடலும் அவதானிப்பதனூடாக காரணகாரிய தொடர்புகளைத்தேடி அறிவது விஞ்ஞானக் கல்வியில் வேண்டப்படுகிறது. சுயமாகக் கற்பவனால் தான் நல்ல ஆராச்சியாளனாகவும் சமூகப் பொறுப்புணர்வோடு சமூகப் பங்காற்றக் கூடியவனாகவும் விளங்கமுடியும்.

பிள்ளைகள் தனியார் கல்வி நிலையங்களில் அதிக நேரத்தைச் செலவிடும் நிலையில் அவர்கள் தொடர்பில் பெற்றோர் அவதானத்துடன் கண்காணிக்கவும் வழிப்படுத்தவும் வேண்டும்.

இன்றைய பிள்ளைகள் புத்திக் கூர்மையும் நினைத்ததைச் சாதிக்கும் ஆற்றலும் உடையவர்கள். அவர்களை சமூகத்துக்கும் பிரதேசத்துக்கும் சிறப்பாகச் சேவையாற்றக் கூடிய நல்லொழுக்கமுடைய பிள்ளைகளாக வளர்த்தெடுத்து அவர்களது எதிர் காலத்தை வளப்படுத்த வேண்டியது பெற்றோரின் பெரும் பொறுப்பாகும். யூனியன் கல்லூரி 194 ஆண்டுகளாகப் பிரதேசத்தில் புலமையாளர்கள் பலரை உருவாக்கிய பெருமையுடையது - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்து கொண்டார். பரிசில்களை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி சியாமளா கந்தசாமி வழங்கினார். இந்நிகழ்வில் யூனியன் சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

(204-38)



நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாடசாலையின் முன்னாள் அதிபர் சு.இராசலிங்கம் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றுவதனை படத்தில் காணலாம்.

# சிறையில் பொன்சேகாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஐ.தே.கட்சி கூறுகிறது

கொழும்பு, ஒக்.21

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் உட்படப் பல்வேறு குற்றங்களுக்குத் தண்டனை பெற்றவர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கும் நிலையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

- இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் தேவையான வசதிகள் அவர் சிறைவைக்கப்பட்டுள்ள சிறைக்கூடத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று அரசு கூறினாலும், அவருக்குத் தேவையான அத்தியாவசிய வசதிகள் எதுவும் செய்துகொடுக்கப்படவில்லை.

தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி காயங்களுடன் உயிர்தப்பிய சரத் பொன்சேகாவுக்கு உடற்பயிற்சிகளை மேற்கொள்ளுமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். எனினும், உடற்பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் அவருக்கு இதுவரை வழங்கப்படவில்லை. இதன் காரணமாக அவரது உடல்நிலை மேலும் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

சரத் பொன்சேகாவுக்கு எந்த நேரமும் சிறைக்குள் இருக்க முடியாது. வெளியில் நடந்து உலாவுவதற்கும் மிகவும் குறுகிய இடவசதியே காணப்படுகிறது. அது மிகவும் வருத்தத்துக்குரிய விடயமாகும். சரத் பொன்சேகா போன்ற நபர்களுடைய உயிரைப் பாதுகாப்பது அத்தியாவசியமான விடயமாகும். பொதுமக்களும் இதனையே விரும்புகின்றனர்.

இதேவேளை, சிறைவைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவுக்கு நாளாந்தம் இரண்டு பத்திரிகைகளே வழங்கப்படுகின்றன. - என்றார். (சி)

# புலிகளுக்காக ஆயுதக் கொள்வனவில் ஈடுபட முயன்றவர் அமெரிக்க நீதிமன்றில்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில், சிங்கப்பூர் பிரஜையான பால்ராஜ் நாயுடு என்பவரை அமெரிக்காவின் போல்டிமோர் பிராந்திய நீதிமன்றம் குற்றவாளியாக இனங்கண்டுள்ளது.

1976ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பிரிவினையைக் கோரிவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இவர், மேரிலேண்ட்டில் வைத்து சுமார் ஒன்பது லட்சம் டொலர் பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயற்சித்தார் என அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

# கே.பியிடமிருந்து கைப்பற்றப்பட்ட கப்பல்கள், டொலர்கள், தங்கம் எங்கே?

## சபையில் கேட்டவை

கொழும்பு, ஒக். 21

புலிகளின் சர்வதேச வலையமைப்பின் தலைவர் என அரசால் விமர்சிக்கப்பட்ட கே.பி. இன்று அரசின் அனுசரணையில் சொகுசாக இருக்கிறார்.

இந்த கே.பியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கப்பலும், டொலர்களும், தங்கமும் எங்கே? அவற்றுக்கு என்ன ஆனது?

இப்படி ஒரு இக்கட்டான கேள்வியைக் கேட்டு அளும் தரப்பினரை இக்கட்டான ஒரு நிலைக்குள் தள்ளிவிட்டார் எதிர்க்கட்சி உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரா.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையைப் பிரதமர் டி.எம்.ஜயரத்ன முன்மொழிந்தார்.

வழமைபோல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடைக்கிடை எழுப்பிய கேள்விகளுக்கு வழமையாக தனது நகைச்சுவைப் பாணியில் பதில் அளித்துக்கொண்டே இருந்தார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வழமையான சபை நடவடிக்கையின் பின் உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு பதில்கள் அளிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பிரதமர் 2011ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலப் பிரேரணையை சபையில் முன்வைத்தார்.

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினரான ரவிகருணாநாயக்க ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்தார்.

அதாவது, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகா தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அனுர குமார திஸநாயக்கவும் முன்வைத்த சிறப்புரிமைப் பிரச்சினைக்கு இன்றுவரை சபாநாயகரின் தீர்ப்புக் கிடைக்கவில்லை. சாபாநாயகரின் தீர்ப்பை இப்பொழுது சபையில் தெரிவிக்கவேண்டும். நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம் உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டுள்ளார் என்று சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஆளும்கட்சி உறுப்பினர்கள் வழமைபோல் குறுக்கீடுகளைச் செய்துகொண்டே இருந்தனர்.

எனினும், இவ்விடயம் உயர் நீதிமன்றில் முன் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக இப்பொழுது எதையும் கூறமுடியாது என சமாளித்துவிட்டார். தீர்ப்பு வழங்கப்படுமா இல்லையா என்பது குறித்து சபாநாயகர் நேரடியான பதில் எதையும் கூறவில்லை.

தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா சில சுவாரஸ்யமான கேள்விகளை எழுப்பினார்.

அதாவது நாங்கள் கே.பியை பிடித்துவிட்டோம். அவர் மூலம் புலிகளை கூண்டோடு ஒழித்து விடுவோம் என்று கூறிய அரசு இன்று அவசரகாலச்சட்டத்தை நீடிக்க முயல்கின்றது.

சிறைப்பிடிக்கப்பட்ட உங்கள் கே.பி. எங்கே, அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கப்பல்களும், டொலர்களும், தங்கமும் எங்கே என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் ஜோசப் மைக்கல் பெரேரா.

இதற்கான பதில் ஆளும் தரப்பிடமிருந்து கிடைப்பதற்குப் பதிலாக கூச்சல்களும், சத்தங்களும்தான் வெளிப்பட்டன.

இங்கு மற்றும் ஒரு சுவையான சம்பவமும் இடம்பெற்றது.

எதிர்க்கட்சி உறுப்பினரான ஆர்.யோகராஜன் சில கேள்விகளை எழுப்பினார். அதாவது, வெளிநாடுகளில் இருக்கும் இரண்டு பேர் புலிகளின் அமைப்பை மீண்டும் உயிரூட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று பிரதமர் சபையில் கூறினார்.

அமெரிக்கா ஆரம்பம் முதலே புலிகள் இயக்கத்தைத் தடைசெய்துள்ளது என்பதைப் பிரதமர் அறியமாட்டாரா?

வெளிநாடுகளில் இன்று இலங்கைக்கு எதிராகச் செயற்படுபவர்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பிரீஸ் இராஜதந்திர நடவடிக்கைகளை எடுக்கவேண் டும். இதை விட்டுவிட்டு இங்கே அவசர காலச் சட்டத்தை நீடிப்பது வேடிக்கையானது என்று விமர்ச்சித்தார்.

அவசரகாலச் சட்டத்தை கையில் வைத்துக்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பாரம்பரிய காணிகள் ஆயிரம் ஆயிரம் ஏக்கர்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

உல்லாசப்பிரயாண அபிவிருத்தி என்ற போர்வையில் காணிகள் சூறையாடப்படும் அதே வேளை இன்னும் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் அதிகமாக எல்லாவற்றையும் இழந்து துன்பப்படுகின்றனர் என்றும் யோகராஜன் குற்றஞ்சுமத்தினார்.

ஆளும் கட்சி உறுப்பினர்களான அமைச்சர் விமல் வீரவன்ஸ உட்பட பலர் பேசினர். ஆனால், அவை எதுவும் ஆணித்தரமாகக் காணப்படவில்லை.

இ.தொ.க. உறுப்பினரான இராஜதுரை உரையாற்றும்போது அவசரகாலச் சட்டத்தில் காணப்படும் சில சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இவ்வேளையில் ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் சபைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். இதனால், அடிக்கடி அழகான தமிழையும் கேட்க முடிந்தது.

இவ்வேளையில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆசனங்கள் 95 சதவீதம் காலியாகவே காணப்பட்டது.

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினரான அஜித் பெரெரா சபையில் யாரும் இல்லை என்று சுட்டிக் காட்டினார்.

அதாவது நாட்டில் பாதுகாப்பு இல்லை. அவசரகாலச்சட்டம் நீடிக்கப்படவேண்டும் என்று கூறும் அமைச்சர்களும் உறுப்பினர்களும் சபையில் இல்லை. அவர்களுக்கு நாட்டைப் பற்றியும் கவலை இல்லை. சபை நடப்புகள் பற்றியும் அக்கறை இல்லை. இதனால் கோரம் இல்லாமல் சபையைக் கொண்டுசெல்லமுடி யாது என ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பினார் அஜித் பெரேரா.

இதனை சபைக்கு வெளியே நின்று அவதானித்த ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் சபைக்குள் வந்து அமர்ந்துகொண்டனர் . இதனால், போதுமான கோரம் இருப்பதால் சபை தொடரலாம் என்று தெரிவித்தார் அஸ்வர் எம்.பி.

ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆளும் கட்சி அமைச்சர்களும் உறுப்பினர்களும் வேஷ்டியைக் கட்டிக் கொண்டுதான் இன ஒற்றுமை கலாசார மேம்பாடுபற்றி பேசுகின்றனர் என்று கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் 'பம்பாய்' படத்தை திரையிட இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர். பம்பாய் படம் இன ஒற்றுமையை வலியுறுத்தும் ஒரு படம். இதனை ஏன் தடைசெய்யவேண்டும். என்று கேட்டால் அது மேலிடத்து உத்தரவு என்று கூறுகின்றனர். அப்படியானால் இந்தச் சபையில் இனஒற்றுமை என்று பேசுபவர்கள் வேட்டி கட்டிக்கொண்டு தான் வருகின்றார்களா என்று கடுமையாக விமர்ச்சித்தார் ரில்வின் சில்வா.

அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதம் எப்போதுமே கரகரப்பாக இருக்கும். சூடான வாதப் பிரதி வாதங்களும் இடம்பெறும். ஆனால், ஆரம்பத்தில் காணப்பட்ட சூடு அதே வேகத்தில் ஓய்ந்துவிட்டது. கூச்சல்களும் இல்லை, குழப்பங்களும் இல்லை. காரணம் நாற்காலிகள் சத்தம் போடாதல்லவா நாற்காலிகளில் எவரும் இல்லை.

இந்த முறையை நீக்குவதற்காக சபையில் இருந்த ஒரு சில ஆளும்கட்சி உறுப்பினர்கள் இடைக்கிடை சத்தம்போட்டுச் சமப்படுத்தினர்.

எதிரணி உறுப்பினர்களான எஸ்.எம்.சந்திரசேன ஊடகவிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாகச் சபையில் குரல் எழுப்பினார்.

ஊடகவிலாளர்களுக்கு அரச தகவல் திணைக்களம் அடையாள அட்டைகளை வழங்கியுள்ளது. அந்த அடையாள அட்டைகளைக் காட்டிய பின்னரும் இராணுவத்தினரும் பொலிஸாரும் மிருகத்தனமாகத் தாக்குகின்றனர், புகைப்படக் கருவிகளை உடைத்து எறிகின்றனர். இதுதான் ஊடக சுதந்திரமாக என்று சுட்டிகாட்டினார்.

மீள்குடியேற்றத்துறைப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உரையாற்றும்போது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் அரசுக்கும் இடையில் கடும் சொற்போர் இடம்பெற்றது.

இன்னும் இரண்டு வருடங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கட்டி எழுப்புவோம். 24 ஆயிரம் பேர் இன்னும் முகாம்களில் இருக்கின்றனர். அவர்களை மீளக் குடியமர்த்துவதில் இராணுவத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சுமார் 2000 இராணுவத்தினர் கண்டிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்புட்டுள்ளனர்.

இந்நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொறுப்புடன் செயற்படவேண்டும். மக்களைத் தூண்டிவிட்டு மீண்டும் ஓர் இரத்தக் களரியை ஏற்படுத்த வேண்டாம் எனப் பிரதி அமைச்சர் முரளிதரன் கேட்டுக்கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சிறிதரன் உரையாற்றும்போது, அரசினால் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகள் மக்களை இன்னும் சென்றடையவில்லை என்று குற்றஞ்சுமத்தினார்.

இறுதியாக மீண்டும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன எதிர்த்து வாக்களித்தன.

- இரா.புத்திரசிகாமணி

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** காலையில் வந்த வரவு ஒன்றுக்கு மாலையில் செலவு ஏற்படலாம். நண்பர்கள் விடயங்களில் தலையிட்டு அவர்களுக்கு உதவுவீர்கள். உறவுப் பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும்படாமல் நடந்து கொள்ளவேண்டும். சிலரிடம் பரிவாகப் பேசி அவர்களைப் பற்றிய இரகசியங்களை அறிந்து கொள்வீர்கள். கனவுகள் பலிக்கும்.



**இடபம்:** கடனுதவிகள் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும். உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் வியப்படையலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். உங்களின் தனித்திறமையை நிரூபித்துக் காட்ட முற்படுவீர்கள்.



**மிதுனம்:** சில வேலைகளில் அலைச்சல் இருந்தாலும், அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். எந்த விடயத்திலும் சிரமங்களைத் தவிர்க்க முன்யோசனையுடன் செயற்படுவீர்கள். மறைமுக எதிர்ப்புகளைச் சந்திக்கலாம்.



**கடகம்:** துணையாக இருந்த சிலரே உங்களுக்கு எதிர்ப்பாக செயற்படலாம். திடீர் பயணங்களால் செலவுகள் ஏற்படலாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பலமுறை அலைய நேரிடலாம். சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். மற்றவர்களுக்குத் தெரியாமல் இரகசியமாக சில காரியங்களைச் செய்வீர்கள். நன்றி மறந்தவர்களை நினைத்து வருந்துவீர்கள்.



**சிங்கம்:** வெற்றிச் செய்திகள் வீடு தேடி வரும். பொது வாழ்வில் உள்ளோருக்குப் புகழ், செல்வாக்குக் கூடும். எந்த விடயத்தையும் பிறகு எனத் தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறலாம். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம்.



**கன்னி:** முன்னர் நீங்கள் கேட்டபோது இல்லை என கையை விரித்த சிலர் இப்போது உதவி செய்யலாம். வழக்கத்திற்கு மாறான கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். உங்களின் வார்த்தைகளுக்குச் சக ஊழியர்கள் மத்தியில் மரியாதை அதிகரிக்கும். கைவிட்டுப் போனதாக நினைத்த காரியம் ஒன்று மீண்டும் கை கூடி வரலாம். திடீர் பணவரவு உண்டு.



**துலாம்:** குடும்பத்தினர் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். எதிர்பாராத சில செய்திகளைக் கேட்கலாம். பிள்ளைகள் உங்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றார் போலச் செயற்படலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பெரியவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம். வீண் பயம் ஆள் கொள்ளும்.



**விருச்சிகம்:** எதிலும் மன உறுதியுடன் செயற்படும் நாள். புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரலாம். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். அரசியலில் தொடர்புடையவர்கள் விமர்சனப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். சிறிது நேரத்தில் முடிய வேண்டிய வேலை ஒன்றுக்கு நீண்ட நேரம் காத்திருக்கலாம். பதற்றம் அதிகரிக்கும்.



**தனுசு:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். நினைத்த காரியங்கள் சரியான நேரத்திற்கு முடியலாம். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாம். மாற்று மத நண்பர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். சிறு பணவரவுகளைப் பெறலாம்.



**மகரம்:** இனம்புரியாத கவலை ஆள்கொள்ளும் நாள். உங்களுக்கு எதிராக இனிப்பாகப் பேசிய சிலர் மறைமுகமாக விமர்சிக்கலாம். வேண்டா வெறுப்பாக சில காரியங்களைச் செய்வீர்கள். பல நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைக்கலாம். கனவுத் தொல்லையுண்டு.



**கும்பம்:** எண்ணிய காரியங்கள் எண்ணம் போல் நிறைவேறலாம். தந்தை வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். சகோதர பாசம் மேலிடும்.



**மீனம்:** சோதனைகளை எதிர்கொள்ளும் நாள். சில வேலைகளை செய்ய முற்பட்டாலும், அது முடியாத அளவுக்குத் தடை ஏற்படும். எதிர்பார்ப்புகள் நிறைவேற எதிலும் பொறுமை அவசியம். உங்களுக்கு வேண் டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். சில விடயங்களில் வேகமாக முடிவு எடுத்து விட்டு, பின்னர் அதில் மாற்றம் செய்வீர்கள்.



நல்லூர்ப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரவிழா திருநெல்வேலி பழம்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு உள்ளூராட்சி கட்டுமான மேம்பாட்டுத்திட்ட எந்திரி எஸ்.சுரேன் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: லக்ஸ்மன்)*

## வைத்திய அதிகாரி யோகீஸ்வரதேவனுக்கு பாராட்டு விழா

வடமராட்சி, ஒக்.21

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் பல்லாண்டு காலம் வைத்தியசேவையாற்றி இளைப்பாறிய வைத்திய அதிகாரி ம.யோகீஸ்வரதேவனின் சேவை நலன் பாராட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை கரவெட்டி தச்சை ஐங்கரன் இந்து அற நெறிப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம், கரவெட்டி வைத்தியசாலை அபிவிருத்திக் குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் டாக்டர் கே. நந்தகுமார், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைப் பிரதிமாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி.ஜெயராஜா, வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும் பெருமாள், கரவெட்டிப் பிரதேச அரசினர் வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி மங்கையர்மணி மகேந்திரா, கரவெட்டிப் பிரதேச தலைமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மு.இரவிச்சந்திரன் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்குவார்கள். (த-236)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் தொடர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.21

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாரம் தோறும் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவியாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்தவுள்ளார். (204-236)

## எரிகாயங்களுக்கு உள்ளான பெண் வைத்தியசாலையில்

வடமராட்சி, ஒக்.21

மண்ணெண்ணை ஊற்றி அடுப்புப் பற்ற வைத்தபோது உடுப்பில் தீப்பற்றிக் கொண்டதால் எரிகாயங்களுக்குள்ளான பெண் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

உடுப்பிட்டி பொக்கணையைச் சேர்ந்த திருமதி ஸ்ரீராம் அகிலா (வயது- 40) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு காயமடைந்தவராவர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமுற்ற குடும்பப் பெண் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். (த-236)

## ஏழையின் உருவில் இறைவன்



முன்னொரு காலத்தில் ஆன்மிகப் பெரியவர் ஒருவர் நீண்ட நாள்களுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இருந்தார்.

பல்லக்குப் பின்னுக்குப் போனாலும் அவர் நடந்துதான் போவார்.

ஒரு நாள் அவர் வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது அடியார்கள் வந்து வணங்கி ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு போனார்கள்.

சிறிய குழந்தைகள் பலர் அழுக்குப் படிந்த சட்டைகளுடன் வீதியில் நின்று பாட்டுப் பாடிக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்த பெரியவருக்கு இரக்கம் வந்தது. அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

இதைப் பார்த்த அவரது செயலாளருக்கு கவலையாக இருந்தது. அதற்கான காரணம் பெரியவர் விரைவாக அடுத்த ஊருக்குப் போகவேண்டும் என்பதாகும்.

இதை ஞாபகப்படுத்த அவர் பெரியவரிடம் சென்றார். ஆனால் பெரியவர் அவர் காதில் ஏதோ சொன்னவுடன் அங்கிருந்து போய்விட்டார்.

பெரியவர் மறுபடியும் பிள்ளைகளைப் பாடச் சொல்லிப் பிரியமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

செயலாளர் புத்திசாலி. குழந்தைகள் எல்லோருக்கும் தகுந்த சட்டைத் துணிகள் வாங்கிக்கொண்டு வந்து பெரியவரிடம் கொடுத்தார்.

அந்தக் குழந்தைகள் அனைவருக்கும் சட்டைத் துணிகளைப் பெரியவர் கொடுத்தார். அதன் பின்னர் ''பக்கத்து ஊரில் பூசை ஒன்று செய்யவேண்டும்'' என்பதை ஞாபகப்படுத்தினார் செயலாளர்.

இதைக் கேட்டதும் பெரியவர் ''அதுதான் குழந்தைகளுக்குச் செய்து விட்டோமே! இதுவே போதும்'' என்றார். இதுதான் 'ஏழைகள் உருவில் இறைவனைப் பார்க்கிறோம்' என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**கோ.சுவாமிநாதன்.**

## அடிமை கொடுத்த அறிவு

விவேகானந்தர் மேலை நாடுகளுக்குப் பயணம் செய்தார். அப்போது அவருக்குத் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டது. அவர் தங்கும் அறை நவீன கட்டில், உயர்ரக மெத்தையுடன் இருந்தது. ஆனால் அவர் கட்டில், மெத்தையைத் தவிர்த்துக் கீழே உறங்கிக் கொண்டார். ''ஏன்'' என்று கேட்டபோது ''எம் நாட்டில் கோடிக்கணக்கான ஏழைகள் பாய் கூட இல்லாமல் தரையில் உறங்கும் போது இந்த உயர்ரகக் கட்டில், மெத்தையில் எப்படி என் னால் உறங்க முடியும்?'' என்று பதில் கூறினார்.

இதுபோல் சிந்தனையைத் தூண்டக் கூடிய மற்றும் ஒரு கதை உண்டு.

அரண்மனையில் வேலை பார்க்கும் அடிமை ஒருவன் அரசருடைய படுக்கை அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

மெத்தையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து அதன் மென்மையை உணர்ந்து அதனில் சாய்ந்து உறங்கி விட்டான்.



உள்ளே நுழைந்த அரசர் அடிமை தன் கட்டிலில் உறங்குவதைப் பார்த்து கோபப் பட்டு ''இவனைச் சவுக்கால் அடியுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

சவுக்கால் அடிபட்டவன் சிரிக்கத் தொடங்கினான். ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று அரசன் கேட்டார்.

அதற்கு அடிமை ''அரை மணி நேரம் படுத்திருந்த எனக்கே இவ்வளவு அடி கிடைக்கிறது. வாழ்நாள் முழுதும் உறங்கும் உங்களுக்கு எவ்வளவு அடி கிடைக்கும்? என்று நினைத்தேன். அதுதான் சிரிப்பு வந்துவிட்டது'' என்று கூறினான்.

**சுகி.சிவம்.**

# அதிகாரப் பகிர்வுக்கு நாட்டின் அபிவிருத்தி மாற்றீடாக அமைய முடியுமா?

**ஆங்கிலப் பத்திரிகையொன்றில் என்.சத்தியமூர்த்தி எழுதியிருந்த கட்டுரையின் சாரம் இது.**

## விதவைகள், அநாதைகளின் மறுவாழ்வுக்கு அரசு திட்டங்கள் தீட்டிச் செயல்பட வேண்டும்

இலங்கை மக்களில் நால்வரில் ஒருவர் உளநலமற்றவராய் இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்ட விடயம் யாருக்கும் மகிழ்ச்சி தரும் சமாச்சாரமல்ல. குறிப்பாக போர்முடிந்த நிலையில் நாட்டைக்கட்டியெழுப்புவதற்கு பகீரதபிரயத்தனம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தவேளையில் உல்லாசப்பயணத்துறைக்கும் இது நல்ல செய்தி என்று சொல்லமுடியாது.

ஜனாதிபதி ராஜபக்ஷவை பொறுத்தவரை சிங்கப்பூரைப் போன்று இலங்கையையும் வளர்த்தெடுக்கும் கைங்கரியத்தில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார் அவர்.

அரசாங்கத்திலுள்ள சில போர்வழிகளுக்கு அதிகாரப் பகிர்வுக்கு பொருளாதார அபிவிருத்தியே முழுஅளவிலான மாற்றீடாக இருக்கமுடியும் என்று தோன்றுகிறது. அதிகாரப்பகிர்விற்காகவே முப்பதாண்டுகாலம் நாடு பெரும் போராட்டங்களை நடத்தி வந்தது. ஆனால் அரசு கூறுவது போல் உளநலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இந்த அளவில் இருக்குமானால் அபிவிருத்தியில் நிச்சயமாகத் தடங்கல்கள் இவைகளால் ஏற்பட்டிருக்கவே செய்யும். அவை பெரும்பாலும் போர்க்கால விதவைகள்,அநாதைகள் பெரும் எண்ணிக்கையிலான போக்கிடமற்றவர்கள் என்ற நிலையிலேயே இருக்கும். விரைவாகவோ காலம் தாழ்த்தியோ இவர்கள் அபிவிருத்திகளுக்கான பாதைகளில் தடங்கல்களை ஏற்படுத்தியே ஆவார்கள்.

இந்த மக்களில் மறுவாழ்விற்கான திட்டங்களைத்தீட்டி செயல்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும். அதுவே அபிவிருத்திக்கு உதவியாக அமையும். இந்த நோக்கங்களை அடைவதற்குத் தேசிய மனச்சாட்சியைத் தெளிவாக வைத்துக் கொள்வது அவசியம் அதன்மூலம் உல்லாசப் பயணத்துறையும் அசையாமல் இருக்கும்.

இதற்கிடையில் இன்னுமொரு செய்தி அறிக்கை வெளியாகியுள்ளது. அதன்படிக்கு ஒவ்வொரு நாளும் இலங்கை நாட்டின் ஒரு பெண், சிறுமி வல்லுறவுக்குள்ளாகின்றார் என்பதாகும்.

இவையனைத்தும் போருக்கு பின்னரான அபிவிருத்திகள் அதிகார பகிர்வுத்திட்டங்களால் வரக்கூடிய நன்மைகளைவிட ஆழமான எதிர்விளைவுகளை ஏற்படுத்துபவையாகவே இருக்கும்.

இவர்கள் அனைவரும் போரின் விளைவால் உருவான தமிழ்விதவைகள்,அநாதைகள் மற்றும் உளநலம் அற்றவர்கள் தானே என்று அரசு அசட்டைப்படுத்த முடியாது. இவர்களில் போரில் மரணமான சிப்பாய் குடும்பங்களை சேர்ந்தவர்களும் இருக்கலாம்?ஆனால் அவர்களைப் பொறுத்தவரை சமுக மற்றும் திணைக்கள அமைப்புக்கள் இருக்கின்றன. அவை அவர்களின் மறுவாழ்வுப் பிரச்சினைகளைக் கவனித்துக்கொள்ளும்.

இவர்களுக்கு இடையில் வடக்கு, கிழக்கு போர்நடந்து முடிந்துள்ள பகுதிகளில் தமிழ்ப்பெண்கள் மத்தியில் 90 ஆயிரம் விதவைகள் காணப்படுவதாக அண்மையில் அரசு அறிவித்து இருக்கின்றது. அநாதரவாகியுள்ள வயதானவர்கள், சிறுவர்கள் பற்றிய தெளிவான எண்ணிக்கை தெரியவில்லை.

இந்த விடயங்களில் இச் சமுகங்கள் தங்கள் தரப்பிலான நடவடிக்கைகளில் இறங்குவதற்கு முன்னர் இவர்களின் மறுவாழ்விற்கான திட்டங்களை உருவாக்கிச் செயல்பட வேண்டியது அரசின் கடமை. இந்த வகையில் புலம்பெயர்ந்த மக்கள் ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், வயோதிபர் நிலையங்கள் அல்லது அநாதைகளுக்கான நிலையங்கள் என்று நிறுத்திவிடாமல் தீவிர தொழில்சார் நிலையங்களை அமைப்பதிலும் ஈடுபடுவது அவசியமாகும்.

போர் முடிந்த கையோடு 20,000 தமிழ் அநாதைச் சிறுவர்களின் நலன்புரி நிலையங்களை அமைக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. இதில் சர்வதேச அரசு சாரா நிறுவனங்களை தலையிட அனுமதிக்கப் போவதில்லை. என்பதில் அரசாங்கம் மிக கண்டிப்பாக இருந்தது.

இப்பொழுது ஒரு வருடத்திற்கு மேலாகி விட்ட நிலையில் இந்தப் பிள்ளைகளின் இன்றைய நிலை என்னவாய் இருக்கிறது என்பது பற்றிய விவரங்களை அரசு வெளிவிட வேண்டும். அது பிரயோசனமாக இருக்கும்.

கண்டி மற்றும் கொழும்பு போன்ற நகரங்களைப் பிச்சைக்காரர்கள் அங்காடிகள் அற்ற பிரதேசங்களாக வைத்திருப்பது அரசின் தேவையாக இருக்கலாம். என்ன காரணமாக இருந்தாலும் இலங்கையில் இருந்து அவர்களை துடைத்து விட முடியாது.

தொழில்வாய்ப்புக்களைப் பொறுத்தவரை அரைவேகாட்டு தொழிலாளர்கள் நிறைந்த ஒரு நாடு உயர் தொழில்நுட்பவியலாளர்கள் நிலைக்கு உயர்வது அவசியம். சமயமும் அரசியலும் செல்வாக்குச் செலுத்தும் நாடுகளில் அறிவியலில் குறைந்த திறமையுள்ள தொழிலாளர்கள் தேவைப்படும் நாடுகள் அரபு மத்தியகிழக்கில் உள்ளன. அந்நாடுகளில் வெளிநாட்டவருக்கு குடியுரிமை வழங்குவதில்லை. குடியேறுவதற்கும் அனுமதி வழங்கப்படுவதில்லை. அவர்கள் ஒரு கொஞ்சக்காசு உழைத்தாலும் அதனை இங்கு அனுப்பிவிடுகிறார்கள். அப்பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிய நாட்டவர்களின் நிலைமை இதுதான்.


திறமையுள்ள மற்றும் தொழில்நுட்ப வியலாளர்களை வழங்கும் மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்த வரையில் தமது உயர் திறமையாளர்களை, நிர்வாகிகளை மேற்குலக நாடுகளுக்கு அனுப்பிவிடுகின்றன. அங்கே ஒய்வு பெற்றதுடன் இலங்கையர்கள் பெரும்பாலும் திரும்பி வரவிரும்புவதில்லை. பதிலாக அவர்கள் அங்கேயே தங்கி சுதந்திரமாகவும் உல்லாசமாகவும் வாழ விரும்புகிறார்கள். அவர்கள் சொந்த நாட்டில் ஜனநாயக பற்றாக்குறையைச் சுற்றிக்காட்டி நியாயப்படுத்திக் கொள்கிறார்கள்.

இதன் விளைவால் இலங்கை தொடர்சியாக மூளைசாலிகளை இழந்துவருகின்றது. அதேவேளை இங்கு விசுவாசமாக இருப்பவர்கள் மேலே சமுகப்பொருளாதார ஏணியில் ஏறுவதற்கு அரசு உதவுவதில்லை.

தமிழில்: **ரம்யன்**

# ‘பால பொதுப்பிடிய’வின் வேடவுடை: காண்பிய கலைக் காட்சி





**யா**ழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையும் அதன் மாணவர் அமைப்பான கலைவட்டமும் ஓவியம்,சிற்பம் ,புகைப்படம் உட்பட்ட காண்பியற் கலை வெளிப்பாடுகளை முன்னிறுத்திய பயில்வு,பகிர்வு,பாதுகாத்தல் நோக்கிய பல செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது. தமிழகம் உட்பட்ட தமிழ்ச் சூழலில் கலை வரலாறு - கோட்பாடு தொடர்பான பயில் துறையின் முன்னோடித் துறையாகவும் ஒரே ஒரு துறையாகவும் இன்று வரை திகழ்ந்து வருகிறது.

இத்தகைய பின்னணியில் நுண்கலைத் துறையின் கலைவட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ' பால பொதுப்பிடிய' எனும் தென்னிலங்கைப் படைப்பாளியின் காண்பியற்கலைக் காட்சியொன்று 14.10.2010 முதல் (21.10.2010 வரை) நுண்கலைத்துறையின் கலைக்கூடத்தில் நடைபெற்று வருகிறது.

பாலப் பொதுப்பிடிய,தெனியாய எனும் இடத்தில் சிங்களப் பாரம்பரிய சடங்காற்றுகைகளுள் ஒன்றான 'சாந்தி கரண கருமய' எனும் ஆற்றுகையாற்றும் பாரம்பரியக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அடிப்படையில் பாரம்பரிய கலை-கைவினை மரபுகளோடு பலமாகப் பிணைக்கப்பட்ட சூழக நிலவரத்தில் இருந்து வந்த பாலவின் உயர்கல்வி களனிப் பல்கலைக்கழகத்தில் சிற்பத்துறை சார்ந்து அமைந்தது. மேலதிகமான சில செதுக்குப் பயிற்சிகளைப் பாகிஸ்தானிலும் இவர் பெற்றுள்ளார்.

இங்கு பாலவினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான படைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன எனது அடையாள அட்டை எனது மூதாதையரின் ஆடைகள் என்ற பெயரிலான பல தொடர் வெளிப்பாடுகளால் ஆன இக்காட்சி அதன் படைப்பாக்க மற்றும் அழகியல் வெளிப்பாட்டு நிலையில் முக்கியமானவை. இவை ஊடகம் சாந்த நவீனவாதத்தின் கட்டுப்பெட்டித் தனமான முடிவுகளுக்கு சவால் விடுவனவாகவும், ஊடகம் சார்ந்த ஒரு விடுதலைப் பாங்கான பாதையில் பயணம் செய்வனவாகவுள்ளன. அத்துடன் தனது சொந்த வரலாற்றையும் - உருவத்தினையும் அதன் பகுதியாகக் கொண்ட அடையாளம் தொடர்பான அரசியலையும் உடையவை. அவ்வளர்ச்சியில் காலனிய, பின்காலனிய கட்டமைப்புக்குள் அகப்பட்ட தனிமனிதன் அவன் சமூகம் அதனிருப்பு, அடையாளம் என்பன இதன் முதன்மைக் கருப்பொருளாகியுள்ள துடன் இலங்கையின் 90ஆம் கலைப்போக்கு என இனங்காணப்படும் காலகட்ட வெளிப்பாடுகளின் போக்குகளில் ஒன்றான விளிப்பு நிலைப்பட்டவற்றின் உள்வருதல் என்பது இவ்வாறு நடந்தேறுகிறது. கலை- கைவினை தொடர்பான நவீன சட்டத்தையும் கேள்விக்குள்ளாக்கும் பாலா, கைவினைத் தன்மையான செயற்பாடுகளை தனது வெளிப்பாட்டின் பகுதியாக்கி உள்ளார்

ஓவியவெளி அவரிடம் சிற்பவெளியாக மாறுவதையும் (MY ID..) ,மரபார்ந்த ஆற்றுகை ஆடைகள் சமகால சிற்பத்தில் இணைவதையும் (My Ansestral Dress....) பொதுவாகக் காணமுடிகிறது. பெருமளவுக்கு பல்வேறு ஊடகங்களாலான தனது சுய மெய்யுருவிற்கு தனது மூதாதையரின் ஆற்றுகையாடைகளைத் தரிப்பதனூடாக தனது சுய அடையாளத்தினை பரம்பரைவழியாக அவர் நிர்ணயம் செய்யமுற்படுகிறார்.

இந்த முயற்சியின் ஊடாக- கையாளுகையில்- மிகவும் பிரதானமான கூறு, வீசு பொருள்களால்(Junks) ஆன ஆடையுருவாக்கமாகும். பற்தூரிகை, பேனா, பேனாமுடிகள், பொத்தான்கள், ஈயக் கடதாசிகள், துணித்துண்டுகள் இவற்றால் நெய்யப்பட்ட இச்சிற்ப ஆடைகள் ஊடகக் கையாளுகையின் சமய நிலவரங்களைப் பிரதிபலிப்பதுடன் ஊடகம் தொடர்பிலான படைப்பாக்கச் சாத்தியங்களை அதிகரித்து விடுகின்றன.

இன்றைய, சமகால காண்பிய கலைச்சூழலில் வெளிப்பாட்டு வடிவம், ஊடகங்கள், சுயசரிதம், வரலாற்று நிலைப்படுத்தல் எனும் பல்வேறு நிலைவரங்கள் தொடர்பிலான கேள்விகளைக் கிளப்பிவிடும் பால பொதுப்பிடியவின் காட்சி எமது காண்பியற் கலைச் சூழலின் நகர்ச்சிக்கும் விவாதங்களுக்கும் மிக முக்கியமானது.

ஓவியம் தொடர்பான கல்வியைப் பாடசாலைகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கல்வியற்கல்லூரி, பல்கலைக்கழகம் எனும் இடங்களில் பெறுகின்ற மாணவர்களும்- ஆசிரியர்களும் மற்றும் கலை இரசிகர்களும் இக்காட்சியைப் பார்ப்பதனூடாக இவை தொடர்பிலான புரிதல்களைப் பெறமுடியும்.

தியாகராசா சதீஸ்குமார்
நுண்கலைத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

உலகத் தமிழர் பேரவை வெளியிட்ட

# தமிழர் படுகொலை தொடர்பான படங்களை மறுக்கிறார் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஒக்.21

இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது இராணுவத்தினர் தமிழர்களைப் படுகொலை செய்தார்கள் என்பதைக் காண்பிப்பதாகக் கூறப்படும் புகைப்படங்களை ஐரோப்பாவில் இயங்கும் உலகத் தமிழர் பேரவை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பலர் படுகொலை செய்யப்பட்டிருப்பதையும், கொலை செய்யப்பட்ட பெண்களின் அரை நிர்வாணத்தையும் அந்தப் புகைப் படங்கள் காண்பித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு லண்டன் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின் வருகையைக்கண்டித்து லண்டனில் வாழும் ஆயிரத்துக்கும் அதிகமான புலம்பெயர் தமிழர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே இப்புகைப் படங்களும் உலகத் தமிழர் பேரவையால் வெளியிடப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கை அரசின் அந்தஸ்தைச் சீர்குலைக்கும் நோக்கிலேயே இப்புகைப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் லண்டனில் வைத்துக் கூறியதுடன், இப்புகைப் படங்களில் உள்ள காட்சிகளையும் முற்றாக மறுத்துள்ளார். (சி)

## நெஞ்சம் மறவாத ஐந்தாம் ஆண்டின் நினைவுகள்

அன்னையின் மடியில்
20 . 09 . 1942



ஆண்டவன் அடியில்
31 . 10 . 2005

### அமரர் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

திதி: சதுர்த்தசி (21.10.2010)

ஆண் குழந்தை வேண்டி அருந்தவமிருந்தாள் அன்னை
அவள் மனம் மகிழ வந்துதித்தீர் மகனாக
கண்ணின் கருமணியாய் வளர்ந்து வந்தீர் வாலிபனாய்
இல்வாழ்வை வெறுத்தீர் இறை தொண்டு செய்து வாழ்ந்தீர்
இறைவனும் உம்மை தன்னடியில் அழைத்து விட்டார்
உம் நினைவை எம்மால் என்றுமே மறக்க முடியாது.
ஓம் சாந்தி!

18, கதிரவேலு லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம். (104824)

அன்புச் சகோதரியும் மருமக்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
1982.04.24

காலன் பிடியில்
2010.09.21

### செல்வி விசாலினி செல்வராசா

(Management Assistant- Education Department, Velannai)
(H.N.D.M- High National Diploma in Management)

எம் குடும்பத்தின் முதல் ஒளி விளக்கே- எம்மை
விட்டு எங்கு சென்றீர்- திருமணக் கோலத்தில்
உம்மைக்காண எண்ணியிருந்த வேளையில்
ஐந்து நிமிட நோய் உருவில் காலன்
உம்மைக் கவர்ந்து சென்றானே- யாரிடம்
சென்று நாம் முறையிடுவோம்.

அமைதியின் ஊற்றாக ஒளிர்ந்தீரே- கல்வியில்
பதவியில் உயர்வான நிலையைத் தொட்டீரே
பொறுமைக்கு பூமாதேவிக்கே போட்டியாக
மிளிர்ந்தீரே

விஜி அக்கா என அழைத்த எம்மை
ஆலமர விருட்சமாய் தாங்கி நின்றீரே
இனிமேல் யாரை நாம் அழைப்போம்- அம்மா
இல்லாமல் நான் வாழமாட்டேன் என
அடிக்கடி சொன்னீரே- ஆனால்
இன்று எம்மை தவிக்க விட்டு விட்டு நீர்
மட்டும் தனியே எங்கு சென்றீர். இனி எந்த
ஜென்மத்தில் உம்மைக் காண்போம்- உம்
பிரிவின் துயரமும் உம் நினைவுகளும்
எம்முடன் எம் ஆயுள் வரை தொடரும்.

அன்னார் நோயுற்றபோது அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உதவிய வேலணை கல்விவலய உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் வேறுபல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எம் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
90/3, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு-13.

நிரந்தர முகவரி:
1029/ 39, மதவடி லேன்,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் உம்மை மறக்க முடியாமல் தவிக்கும்:
தாய், சகோதரிகள்,
மைத்துனன், மாமா.

(சி/572011)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14 . 11 . 1924



மறைவு
25 . 10 . 2007

### அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா J.P.

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)

திதி: 21.10.2010

குடும்ப ஒளி விளக்காகிய நீங்கள் எம்மோடு இல்லையே
தாங்குமா எம் இதயம்- தினம் தினம் ஏங்குகின்றோம்
உங்களை நினைத்து மூன்றாண்டுகள் சென்றாலும் ஆறாது எம் துயர்
நிலையற்ற இவ்வுலகில் எமக்கு நீங்கள் நிலையான செல்வம்
பல கோடி செல்வங்கள் எம்மைத் தேடி வந்தாலும்
உங்களின் அன்புக்கு ஈடாகுமா?
நினைவில் எம்முடனும் நிஜத்தில் இறைவனிடமும் கலந்திருக்கும்
உங்களின் ஆத்மா சாந்தியடைய மருதடி விநாயகரை வேண்டுகின்றோம்.

மேதர் ஒழுங்கை,
மானிப்பாய். (104845)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிற்றம்பலம்



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சீரணி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிற்றம்பலம் (18.10.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தையனாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரலீலாவின் அன்புக் கணவரும் ஸ்ரீசங்கர் (இத்தாலி), சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதி, பரமசிவம் (இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்), பொன்னம்பலம் (லண்டன்), குமாரசாமி, சிவபாக்கியம் (ஜேர்மனி), மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் ஜெயமங்களம் (நோர்வே), மகேஸ்வரி (கொழும்பு), தேவமலர் (டென்மார்க்), நாகேஸ்வரி (இத்தாலி), காலஞ்சென்றவர்களான இரத்தினபாலன், இராஜராஜேஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.10.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

சீரணி, சண்டிலிப்பாய். (104916)

# திருகோணமலையில் 23,24ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழா

திருகோணமலை, ஒக்.21

கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழா இம்மாதம் 23,24ஆம் திகதிகளில் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெறும்.

இவ்விழாவில் பதினைந்து தமிழ்,முஸ்லிம் கலைஞர்கள் மாகாண முதலமைச்சர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவர். விருது வழங்கல் நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறும்.

அன்றைய தினம் 2009ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

முதலமைச்சர் விருது பெறுபவர்களின் பெயர்கள், இலக்கிய நூல்களுக்காகப் பரிசு பெறுபவர்களின் பெயர்கள் ஆகியவை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் சி.தண்டாயுதபாணியால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.

முதலமைச்சர் விருது பெறுவோரின் பெயர்கள் வருமாறு:-

செ.விபுணசேகர்(நாட்டார் இசை),கனகமகேந்திரா (நாடகம்), முகமது சுல்தான் அமானுல்லா (சிறுகதை), தம்பு சிவசுப்பிரமணியம்(ஆக்க இலக்கியம்), எம்.கி.எச்.எம். தௌபீக்(சிறுவர் இலக்கியம்),வெல்லவூர்க் கோபால், சி.கோபாலசிங்கம்(இலக்கிய ஆய்வு), வாகரைவாணன் சந்தியா பிள்ளை அரியரத்தினம்(ஆக்க இலக்கியம்).

மூத்தம்பி அருளம்பலம் (கிராமியக் கலை),ஓவியர் தர்மா,வீரன் தர்மலிங்கம் (ஓவியம்),ஆய்வாளர் நாகமுத்து நவநாயகமூர்த்தி (வரலாற்று ஆய்வு),பொன்சிவானந்தன் (கவிதை),மாறன்செயின் உதுமா லெவ்வை செயின் (சிறுவர் இலக்கியம்),எம்.ஏ.அப்துல் றஸாக் (சித்திரக் கலை).

இலக்கிய நூல்களுக்காகப் பரிசு பெறுவோரின் பெயர் விவரங்கள்:-

(சிறுவர் இலக்கியம்) திருமதி ஜெனீரா ஹய்றுல் அமான் (சின்னக்குயில் பாட்டு), ச.அருளானந்தம்(அற்புதமானவானம்), முத்து இராதாகிருஷ்ணன் (பசுமைத்தாயகம்),கே.எம்.எம்.இக்பால் (தாமரையின் ஆட்டம்), (சிறுகதை)மு.சடாட்சரன், (கவிதை) யு.எம்.நபீல் (காலமில்லா காலம்), உயர்கல்வி - வே.குணரத்தினம் (அரசறிவியல்) (ஏ)

# புதிய தபாலகக் கட்டடத்துக்கு மருதமுனையில்அடிக்கல்

அம்பாறை, ஒக்.21

மருதமுனை புதிய தபாலகக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை மருதமுனை மக்கள் மண்டபத்துக்கு அருகாமையில் இடம் பெற்றது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார். அத்தோடு நினைவுக் கல்லையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

மருதமுனை தபால் நிலைய அதிபர் பி.எம்.அஸ்ஹர்தீனின் நெறிப்படுத்தலின் கீழ் இடம் பெற்ற இவ்வைபவத்தில் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்வை மாகாணசபை உறுப்பினர் எம்.எல்.துர்கா் நயீம், கல்முனை மாநகரசபை மேயர் முன்னாள் செனட்டர் எஸ்.இசட்.எம்.மசூர் மௌலானா, சட்டத்தரணி எவ்.எம். அமீருள் அன்சார் மௌலானா ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மருதமுனைப் பிரதேசத்தில் சுமார் 23 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். எனினும், பிரதேசத்துக்குரிய அஞ்சல் அலுவலகம் கடந்த 47வருடங்களுக்கும் மேலாக வசதிகள் குறைந்த, நெருக்கடியான வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது.இந்த அசௌகரியத்தைப் போக்கும் பொருட்டே சகல வசதிகளோடுங்கூடிய புதிய அஞ்சல் அலுவலகம் நிர்மாணிக்கப்படவுள்ளது. (ஏ)

# சந்திவெளி விவசாயிகளுக்கு வங்கி மூலம் விவசாயக் கடன்




மக்கள் வங்கி வாழைச்சேனை கிளைமூலம் சந்திவெளி விவசாயி ஒருவருக்கு பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் விவசாயக் கடன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

மட்டக்களப்பு, ஒக்.21

மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தில் வசிக்கும் விவசாயிகளுக்கு வாழைச்சேனை மக்கள் வங்கியில் 32 லட்சம் ரூபா விவசாயக் கடன் பெற்றுக் கொடுக்க பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நடவடிக்கை மேற்கொண்டார்.

107 விவசாயிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் இந்த விவசாயக் கடன் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளது. இக்கடனுக்கு 8சத வீத வட்டி அறவிடப்படுகின்றது.

இம்முறை பெரும்போகத்தில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் விதை மற்றும் விவசாய உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள பெருந்தொகைப் பணம் தேவைப்படுவதால் இக்கடனைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 'மஹிந்த சிந்தனை'யின் கீழ் இவர்களுக்கு உரமானியமும் வழங்கப்படும்.

சந்திவெளி, திஹலிவெட்ட தமிழ் வித்தியாலயத்தில் வங்கிக் கடன் வழங்கும் வைபவம் சமீபத்தில் நடைபெற்றது.வைபவத்தில் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், 'எஸ்கோ' அரச சார்பற்ற நிறுவனத்தின் பணிப்பாளர் கிலிதியோன், அமைச்சின் இணைப்பாளர் ஜஸ்டின் லாசரஸ், இணைப்புச் செயலாளர் பி.ரவீந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ஏ)

# தீபாவளி முற்பணம், இதர கொடுப்பனவுகள் நவ. 2ஆம்திகதிக்கு முன் வழங்கப்பட வேண்டும்

## இ.தொ.கா. வேண்டுகோள்

கொழும்பு,ஒக். 21

தீபாவளியை முன்னிட்டு தோட்டத் தொழிலாளர்களின் சகல கொடுப்பனவுகளையும் தோட்ட நிர்வாகங்கள் நவம்பர் 2 ஆம் திகதிக்கு முன் வழங்க வேண்டும் - என இ.தொ.கா. நிர்வாக உபதலைவரும், சட்டத்தரணியுமான கா.மாரிமுத்து முதலாளிமார் சம்மேளனத் தலைவர் லலித் ஒபயசேகரவிற்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நவம்பர் 5 இல் தீபாவளி வருவதால் 10 ஆம் திகதி தொழிலாளருக்கு வழங்கப்படும் சம்பளம், இதர கொடுப்பனவுகள் 2ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக வழங்கப்படவேண்டும்.

இதேவேளை,பண்டிகை காலத்தில் மலையகத்தில் விசேட ரயில், பஸ் போக்குவரத்துச் சேவைகளை நடத்துமாறு கட்சியின் தலைவரும் பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் தொழில் புரியும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று திரும்புவதால் விசேட போக்குவரத்துச்சேவைகளை ஏற்பாடு செய்யுமாறு அவர் கேட்டுள்ளார்.

இத்தகைய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அமைச்சர் முத்து சிவலிங்கம் பிரதி நிதிகள் குழு ஒன்றை நியமித்துள்ளார் என இ.தொ.காவின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஏ)

# சூழல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவினரால் மகாவலி நதி நீரில் 'மலம்' கண்டுபிடிப்பு

கண்டி, ஒக். 21

மகாவலி கங்கை நீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அதில் மனிதமலம் கலந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கங்கையில் மலம் கலப்பதற்கு காரணமானவர்களை உடன் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை சூழல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவினர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மகாவலி கங்கையை அண்மித்த பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் ஹொட்டல்களின் கழிவறைக் குழாய்கள் மகாவலிகங்கைக்கு திருப்பி விடப்பட்டிருப்பதே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மகாவலி கங்கையிலிருந்து பெறப்படும் நீரே சுத்திகரிக்கப்பட்டு மக்களுக்கு குழாய் மூலம் விநியோகிக்கப்படுகின்றது.

அதனையே பொதுமக்கள் குடிப்பதற்கும், ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர். ஏற்கனவே கழிவறைக் குழாய்கள் கங்கையில் கலக்கின்றன எனப் பொது மக்கள் விசனித்துவரும் நிலையில் மேற்படி தகவலானது மக்களை வாந்தியெடுக்க வைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட பிரிவினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு கங்கைக்குள் கழிவறைக் குழாய்களை திருப்பியுள்ளவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும். அதேவேளை கங்கை நீரைப் பாதுகாப்பதற்கு விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே பலரதும் கோரிக்கையாக உள்ளது. (ஏ)

# சாரதியை மரத்தில் கட்டிவிட்டு வானைக் கடத்தியவர்கள் கைது

கண்டி,ஒக். 21

வாடகைக்குப் பெற்ற வானைக் கடத்திச்சென்ற சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் நால்வர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கண்டி - மாத்தளை வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வான் ஒன்றை குத்தகைக்குப் பெற்ற கோஷ்டியொன்று யஹலதென்ன காட்டுப் பகுதியில் சாரதியை மரத்துடன் கட்டிப்போட்டுவிட்டு வாகனத்தை கடத்திச் சென்றிருந்தது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மறுநாளான கடந்த திங்கட்கிழமை வானை மீட்டதுடன் நான்கு சந்தேகநபர்களையும் கைது செய்தனர்.மரத்துடன் கட்டப்பட்டிருந்த சாரதியும் மீட்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஏ)

# உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க அமோகமான வெற்றியைப் பெறும்!

## ஐ. தொ. காவின் பூண்டுலோயா அமைப்பாளர் கூறுகிறார்

கண்டி, ஒக். 21

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐ. தே.க. அமோக வெற்றியீட்டும் என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் மடக்கும்பர - பூண்டுலோயா அமைப்பாளர் பீ.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாணைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் சுயநலனுக்காக ஆளும் கட்சியோடு இணைந்துள்ளமையை மலையக மக்கள் எதிர்க்கின்றனர். எனவே உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இவர்களுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

மலையக மக்களிடம் பொய் கூறி வாக்குப் பெற்ற இவர்கள் அவர்களுக்கு துரோகம் இழைத்து விட்டனர்.

ஆனால் தலைவர் மனோ கணேசன் தேர்தலில் தோல்வியடைந்தும் கூட யாருக்கும் விலை போகவில்லை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைமையானது சிறுபான்மை மக்களின் பிரதிநிதித் துவத்தைத் திட்டமிட்டு ஒழிக்கும் செயலாகும். இதை அறிந்தும் மலையக தொழிற்சங்க, அரசியல்வாதிகள் அரசுக்கு துணைபோவது ஏன்?

வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் தோட்டத்தொழிலாளர்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மானிய விலையில் தொழிலாளர்களுக்கு மா விநியோகிக்கப்படும் என்று அரசியல்வாதிகள் கூறுவது விந்தை.

கடந்த காலங்களிலும் மானிய விலையில் மா வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனாலும் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப் படவில்லை.

எனவே, உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மலையக மக்கள் ஐ.தே.கவுக்கு வாக்களித்து அதனை வெற்றியடையச் செய்வார்கள். - இவ்வாறு இராஜேந்திரன் தெரிவித்தார். (ஏ)

# கொழும்பு - நானுஓயா நகர்சேர் கடுகதி 22 தொடக்கம் 24 வரை நடைபெறும்

கொழும்பு, ஒக்.21

கொழும்பு கோட்டை - நானுஓயா நகர் சேர் கடுகதி ரயில் சேவை இம் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் 24ஆம்திகதிவரை மூன்று நாள்களுக்கு நடைபெறும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

22ஆம் திகதி ஆரம்பமாகும் மூன்று நாள் விடுமுறையைக் கருத்தில் கொண்டு இந்தச் சேவை நடத்தப்படவுள்ளது.

காலை 8.35 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் பிற்பகல் 2.10இற்கு நானுஓயாவைச் சென்றடையும்.

பிற்பகல் 3.15மணிக்கு நானுஓயாவிலிருந்து புறப்பட்டு இரவு 9 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும் என ரயில்வே திணைக்கள வர்த்தக அத்தியட்சகர் விஜயசமரசிங்க தெரிவித்தார்.

இந்த ரயில் சேவைக்கான ஆசன முற்பதிவுகள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்படும்.விடுமுறைக்கு மலையகம் செல்ல விரும்பும் பயணிகளின் நலன்கருதி போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் பணிப்பின் பேரில் இச்சேவை நடத்தப்படவுள்ளது. (ஏ)

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்
திரு.யு.எல்.எம்.பஷீர்,
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்,
வத்தேகம கல்வி வலயம், கண்டி.
தொ.பே.இல: 077-3283470

G.C.E.(O/L)
வலம்-3
வெளியீடு-2
கண்டி

## வரலாறு - I

நேரம்: 1 மணித்தியாலம்

01. புனித வெள்ளரசு மரத்தையும் புனித தந்தத்தையும் பற்றிக் கூறும் இலக்கிய மூலாதாரங்கள் இரண்டும் எவை?
   1) திரிபிடகமும் தீபவம்சமும்.
   2) மகாவம்சமும் சூளவம்சமும்.
   3) போதிவம்சமும் தாதுவம்சமும்.
   4) ராஜாவலியும் பூஜாவலியும்.

02. இந்தியாவின் அதிவிசாலமான பரப்பை ஆட்சிசெய்தவர்கள் என்ற பெருமை யாரைச் சாரும்?
   1) மௌரியர். 2) குப்தர். 3) மொகலாயர். 4) ஆங்கிலேயர்.

03. சமுத்திரகுப்தனை ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் 'இந்திய நெப்போலியன்' என்று புகழ்ந்துரைத்துள்ளனர். அந்த நெப்போலியன் எந்நாட்டவன்?
   1) இங்கிலாந்து. 2) பிரான்ஸ். 3) ரஷ்யா. 4) இத்தாலி.

04. அசோகச் சக்கரவர்த்தியின் மாளாப் புகழை மீள வலியுறுத்தும் தலையாய அம்சமாக எதனைக் கொள்வீர்?
   1) இந்தியாவின் தேசியக்கொடியில் காணப்படும் தர்மச்சக்கரமும் தேசிய இலச்சினையான நான்முகச் சிங்கமும்.
   2) இன்றும் இந்திய நாட்டில் பெரும்பான்மையோர் பௌத்த சமயத்தையே பின்பற்றுகின்றமை.க
   3) அவரால் நிர்மாணிக்கப்பட்ட கற்றூண்களை இன்றும் இந்தியாவில் காணக்கூடியதாக உள்ளமை.
   4) கலிங்கப்போரில் அவர் அடையப்பெற்ற மகத்தான வெற்றி.

05. பண்டுகாபய, தேவநம்பியதிஸ்ஸ, சூரதிஸ்ஸ, மகாவிஜயபாகு ஆகிய மன்னர்கள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்றாக எதனைக் கொள்வீர்?
   1) வெவ்வேறு வரலாற்று நிகழ்வுகளில் இவர்கள் முதலாம் இடத்தை வகித்தோராவர்.
   2) பௌத்தசமய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியோராவர்.
   3) அந்நியரிடம் இருந்து இலங்கையின் ஆட்சியை மீட்டுத்தந்தோராவர்.
   4) அந்நியப் படையெடுப்புகளுக்கு முகங்கொடுத்தோராவர்.

06. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்களின் வாழ்விடங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் கற்குகைகளை மட்டும் காண்பிக்கும் விடைத்தொகுதி எது?
   1) பாஹியன்கல, படதொம்பலென, பொம்பரிப்பு, இப்பன்தடுவ, அளுலென.
   2) பாஹியன்கல, படதொம்பலென, அளுலென, பெலிலென, பெலிகல்கே.
   3) பெலிகல்கே, பெலிலென, இரணைமடு, படதொம்பலென, பெலிகல்கே.
   4) பெலிகல்கே, பெலிலென, இரணைமடு, பொம்பரிப்பு, இப்பன்கடுவ.

07. இலங்கையில் காணப்படும் பரப்பளவு கூடிய 'கல்பொத' கல்வெட்டில் கூறப்படும் விடயம் எது?
   1) மதத்தின் புகழ். 2) குருமார்களின் ஒழுக்கம்.
   3) மன்னரின் புகழ். 4) விகாரைகளுக்கு வழங்கப்பட்ட காணிகள்.

08. மகா விஜயபாகு மன்னனால் ஆற்றப்பட்ட இப்பணிகளுள் வரலாற்று மாணவன் என்ற ரீதியில் எதற்கு முதலிடமளிப்பீர்?
   1) நீர்ப்பாசன அமைப்பைப் புனரமைத்து, உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டை வளப்படுத்தியமை.
   2) பர்மாவில் இருந்து பிக்குகளை அழைத்துவந்து புறக்கணிப்புக்கு உள்ளாகியிருந்த பௌத்தத்தை உயிர்ப்பிக்க 'உபசம்பதா' வைபவத்தை நடத்தியமை.
   3) அநுராதபுரத்தில் மகாவிகாரையில் வைக்கப்பட்டிருந்த புனித தந்தத்தைப் பொலநறுவையில் வைப்பதற்கு தலதா மாளிகையைக் கட்டியமை.
   4) நீண்டகால சோழர் ஆட்சியை முற்றுப்பெறவைத்து முழுநாட்டையும் ஒன்றுபடுத்தி ஆண்டமை.

09. பொலநறுவைக்கால ஆட்சி தொடர்பான சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   * மகா விஜயபாகு, மகா பராக்கிரமபாகு போன்ற பலம்வாய்ந்த மன்னர்கள் தோன்றாமை.
   * நிஸ்ஸங்கமல்லன் அந்நிய நாட்டவனாயினும் நல்லாட்சி புரிந்தமை.
   * அரசர்களையும் அரசிகளையும் பதவியில் அமர்த்துவதிலும் அகற்றுவதிலும் படைத் தளபதிகளின் செல்வாக்குக் காணப்பட்டமை.
   * கலிங்க மாகனின் ஆட்சியுடன் இத்தலைநகரின் வரலாறே முற்றுப்பெற்றமை.
   மேற்கூறிய தகவல்களை வைத்துப் பார்க்கும்போது பின்வரும் முடிவுகளில் மிகவும் பொருத்தமானதாக எதனைக் கொள்வீர்?
   1) வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்களால் ஆட்சியாளர்கள் பலவீனப்பட்டுப்போனமை.
   2) சட்டரீதியான ஆட்சி உரிமையாளர்கள் அற்றுப்போனமை.
   3) மன்னர்களிடையே காணப்பட்ட பதவிப்போட்டி.
   4) ஆட்சியாளர்களின் பலவீனம் காரணமாக ஆட்சி உறுதியற்றுப்போதல்.

10. எமது மன்னர்களுள் புலவர்களாகத் திகழ்ந்த இருவரும் யாவர்?
   1) 2ஆம் பராக்கிரமபாகு, 4ஆம் பராக்கிரமபாகு.
   2) 4ஆம் பராக்கிரமபாகு, 6ஆம் பராக்கிரமபாகு.
   3) குமாரதாஸ, 2ஆம் பராக்கிரமபாகு.
   4) புத்ததாஸ, குமாரதாஸ.

11. கல்யாணி நதி, கடலில் மேற்குப் புறமாகக் கலக்க அதற்கு நேரெதிரே கிழக்குப்புறமாகக் கடலில் சங்கமிக்கும் நதி எது?
   1) கரிந்த. 2) கால்க. 3) கதம்ப. 4) ஜஜ்ஜர.

12. இங்கே தரப்பட்டுள்ள சரியான கூற்றுக்கள் நான்கிலும் இவ்விடத்திற்குப் பொருத்தப்பாடற்றதாக எதனைக் கருதுவீர்?
   1) கம்பளைக் காலத்தில் தூது காவியங்கள் பிரபல்யம்பெற்றன.
   2) 2ஆம் பராக்கிரமபாகு மன்னர் கலிகால சாஹித்திய சர்வக்ஞ பண்டித எனப் பட்டம்பெற்றார்.
   3) 4ஆம் பராக்கிரமபாகு மன்னர் பண்டித பராக்கிரமபாகு எனப் பாராட்டப்பட்டார்.
   4) 6ஆம் பராக்கிரமபாகு இலக்கியத்தின் பொற்காலத்தவர் என சிலாகிக்கப்படுகிறார்.

13. கீழே தரப்பட்டுள்ள கோட்டை இராச்சியம் சார்ந்த விடயங்களுள் புராதன இலங்கை வரலாற்றில் உள்ளடங்காத விடயம் எது?
   1) டொன் ஜுவான் தர்மபால மன்னன் இவ்விராச்சியத்தைக் கடைசியாக ஆண்டான்.
   2) இந்தக் கோட்டையைக் கட்டுவித்தவர் நிஸ்ஸங்க அழகக்கோனார் ஆவார்.
   3) 6ஆம் பராக்கிரமபாகு மன்னர் இதன் முதல் ஆட்சியாளராவார்.
   4) யாழ்ப்பாண மன்னனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இக்கோட்டை கட்டப்பட்டது.

14. தலாய்லாமா என அழைக்கப்படும் பௌத்த குருக்களின் தலைவரால் முன்பு ஆளப்பட்ட நாடு எது?
   1) சீனா. 2) மங்கோலியா. 3) ஜாவா. 4) திபெத்.

15. இன்றும் நிலைத்துநிற்கும் குதுப் மினார் எனும் கோபுரம் டில்லி சுல்தானிய ஆட்சியாளர் ஒருவரின் நினைவாகக் கட்டியெழுப்பப்பட்டதாகும். அவ்வரசர் எவ்வம்சத்தைச் சார்ந்தவர்?
   1) அடிமை. 2) கில்ஜி. 3) துக்ளக். 4) லோதி.

16. வானியல் வல்லுநர்களின் பெயர்களை மட்டும் கொண்ட விடை எது?
   1) லியானோ டாவின்சி, மைக்கல் ஏஞ்சலோ, ரபாயேல், போட்டி செல்லி.
   2) பெரஸல்ஸ், வில்லியம் ஹாவே, மைக்கல் சர்வேஸஸ், எட்வட் ஜென்னர்.
   3) நிக்கலஸ் கொப்பனிக்கஸ், கலிலியோ கலிலி, ஜோஹான்ஸ் கெப்லர், ஐசக் நியூட்டன்.
   4) தாந்தே, பெட்ரியாக், பொக்காசியோ, தோமஸ்மூர், ஷேக்ஸ்பியர்.

17. கீழே தரப்பட்டுள்ள தேசிய அரசுகளை ஆண்ட மன்னர்களை சரியான முறையில் வரிசைப்படுத்தினால் பெறப்படும் விடை எது?
   1) போர்த்துக்கல் A - 14ஆம் லூயி.
   2) ஸ்பானியா B - 8ஆம் ஹென்றி.
   3) ஒல்லாந்து C - கடலோடி ஹென்றி.
   4) இங்கிலாந்து D - ஒரேஞ் விலியம்.
   5) பிரான்ஸ் E - 2ஆம் பிலிப்.
   1) CEABD 2) CEDBA 3) ABCDE 4) BAECD

18. A - கன்னொருவ, B - பலனை, C - தந்துறே, D - ரந்தெனிவெல, E - முல்லேரியா.
   A - இப்போர்க் களங்கள் அனைத்திலும் இலங்கை மன்னர்களே வெற்றியீட்டினர்.
   B - இப்போர்கள் அனைத்தும் மலையக மன்னர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே இடம்பெற்றதாகும்.
   C - இவை அனைத்தும் இலங்கையின் வரலாற்றைத் தீர்மானித்த போர்க்களங்களாகும்.
   D - இப்போர்களுடன் முதலாம் ராஜசிங்ஹ, முதலாம் விமலதர்மசூரிய, 2ஆம் ராஜசிங்ஹ மன்னர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.
   மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் எவை சரியானவை?
   1) A, C 2) B, C 3) D, B 4) A, D

19. மேற்படி போர்கள் நிகழ்ந்த காலத்தை வைத்து வரிசைப்படுத்தினால் சரியான விடையாக எவற்றைக் கொள்வீர்?
   1) ECBDA 2) ECABD 3) CBEAD 4) CEBDA

20. 2ஆம் ராஜசிங்கனால் கண்டியில் சிறைவைக்கப்பட்டிருந்து, பின்னர் தப்பியோடி, ''இலங்கையுடனான வரலாற்றுத் தொடர்புகள்'' என்னும் நூலை எழுதிய ஆங்கிலேயரான ரொபட்நொக்ஸ் இவற்றுள் எவ்விடயத்தை அறிந்திருக்கமாட்டார்?
   1) முதலாம் விமலதர்மசூரிய மன்னனால் கண்டியில் தலதா மாளிகை நிர்மாணிக்கப்பட்டதை.
   2) இளவரசி குசுமாசனதேவி டோனா கதறினாவாக மதம் மாறியமையை.
   3) கீர்த்திஸ்ரீ ராஜசிங்ஹ மன்னனால் கைதுசெய்யப்பட்டு பின் வெளியேவிடப்பட்ட ஸ்ரீசரணங்கர பிக்கு சங்கராஜாவாகப் பதவி உயர்த்தப்பட்டதை.
   4) 2ஆம் ராஜசிங்க மன்னன் கன்னொருவப் போரில் போர்த்துக்கேயரை வெற்றிகொண்டமையை.

21. மகா விஜயபாகு, முதலாம் விமலதர்மசூரிய, 2ஆம் விமலதர்மசூரிய, கீர்த்திஸ்ரீ ராஜசிங்ஹ மன்னர்கள் அனைவருடனும் சம்பந்தப்படும் ஒரே விடயம் எது?
   1) புனிதத் தந்ததாதுவுக்கென மாளிகைகளை நிர்மாணித்தமை.
   2) வெளிநாட்டில் இருந்து குருமாரைத் தருவித்து உபசம்பதா வைபவத்தை நடத்துவித்தமை.
   3) அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுடன் வீரப்போர் புரிந்து வெற்றிபெற்றோராவர்.
   4) இவர்கள் அனைவரும் கண்டி இராச்சியத்தை ஆட்சிபுரிந்தோர் ஆவர்.

22. கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் முதலில் ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணமாக எதனைக் கொள்வீர்?
   1) அங்கு மூலப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்கப்பெற்றமை.
   2) மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கி வசதிகள் அங்கு காணப்பட்டமை.
   3) உலகின் மிகப் பலமான கடற்படையை அந்நாடு கொண்டிருந்தமை.
   4) சூரியன் மறையாத சாம்ராஜ்யமாக அது திகழ்ந்தமை.

23. கரிபால்டி, லெனின், மா ஓ சேதுங் ஆகிய மூன்று தலைவர்களும் ஒன்றுபடும் ஒரு விடயம் எது?
   1) கம்யூனிஸக் கட்சியின் தலைவர்களாவர்.
   2) உலகத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராட்டங்களை நடத்தியவர்கள்.
   3) செந்நிறத்துடன் சம்பந்தப்பட்ட படைகளைக் கொண்டிருந்தவர்கள்.
   4) இத்தாலியின் ஐக்கியத்திற்காகப் பாடுபட்டவர்கள்.

24. ''உணவு, நிலம், சமாதானம்'', ''சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம்'', ''பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னன் வரி விதித்தலாகாது'', ''பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை'' - இக்கோஷங்களுடன் முன்னெடுக்கப்பட்ட புரட்சிகளை முறையாகக் காட்டும் விடை எது?
   1) ரஷ்ய, பிரான்ஸிய, ஆங்கிலேய, ஐக்கிய அமெரிக்கா.
   2) ஆங்கிலேய, பிரான்ஸிய, ரஷ்ய, ஐக்கிய அமெரிக்கா.
   3) பிரான்ஸிய, ஐக்கிய அமெரிக்க, ஆங்கிலேய, ரஷ்ய.
   4) ஐக்கிய அமெரிக்க, ரஷ்ய, ஆங்கிலேய, பிரான்ஸிய.

25. பிரித்தானியர் காலத்தில் இடம்பெற்ற இரண்டு கலவரங்களுக்கு வரிவிதிப்புகளே காரணமாயின. அவை இரண்டும் இடம்பெற்ற ஆண்டுகளைக் காட்டும் சரியான விடை எது?
   1) 1797, 1818. 2) 1797, 1848. 3) 1848, 1915. 4) 1818, 1848.

26. இலங்கையை ஆளும்போது பிரித்தானியர் பின்பற்றிய கொள்கைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும்போது ஏற்றுக்கொள்ளமுடியாத விடயம் எது?
   1) பெருந்தோட்ட விருத்தியை மனங்கொண்டு ராஜகாரிய முறையை ஒழித்தமை.
   2) தாராள (லிபரல்) வாத பொருளாதாரக் கொள்கையைக் கையாண்டமை.
   3) மனித உழைப்பை சம்பளத்துக்குப் பெற்றுக்கொடுத்தல் அடிமை முறை எனக் கருதிச் செயற்பட்டமை.
   4) கண்டியப் பிரதானிகளின் அதிகாரங்களையும் சலுகைகளையும் படிப்படியாகக் குறைத்தமை.

27. 1762, 1782, 1795 ஆகிய ஆண்டுகளில் இங்கு வந்த பிரித்தானியர் திருகோணமலைத் துறைமுகத்தைத் தமதாக்கிக்கொள்வதிலேயே குறியாய் இருந்தனர். அவர்களுக்கு இந்தளவிற்கு அதன் தேவையைத் தோற்றுவித்த காரணி யாதாயிருக்கலாம்?
   1) ஆசியக் கடற்பாதையின் மையத்தில் அது அமைந்திருந்தமையாகும்.
   2) அது ஒரு பெரிய இயற்கைத் துறைமுகமாக இருந்தமையாகும்.
   3) கூடியளவு கப்பல்களை அங்கு நங்கூரமிட்டு வைத்திருக்க வசதியிருந்தமையாகும்.
   4) இந்தியாவின் கிழக்கு-மேற்குக் கடற்கரையைக் கண்காணிக்கக்கூடிய இடத்தில் அது அமைந்திருந்தமையாகும்.

28. வெல்லஸ, மாத்தளை, கம்பளை ஆகிய மூவிடங்களும் ஆங்கிலேய வரலாற்றின் எவ்விடயங்களுடன் சம்பந்தப்பட்டவை?
   1) ஆங்கிலேயர்கள் கண்டி மன்னனுடன் போரிட்ட இடங்கள்.
   2) ஆங்கிலேயர் காலத்தில் மலையகத்தில் இடம்பெற்ற முக்கியமான கலவரங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்.
   3) பெருந்தோட்டப் பயிர்கள் மூன்றும் முதன்முதலாகப் பயிரிடப்பட்ட இடங்கள்.
   4) ஆங்கிலேயருக்கு எதிராக மலையக மக்கள் கலவரம் புரிந்த இடங்கள்.

29. ஜோர்ஜ் பேர்ட், ஜேம்ஸ் டெயிலர், ஹென்றி வில் ஹெக்டப் என்போர் எமது வரலாற்றில் இடம்பெறுவதற்கான காரணம் என்ன?
   1) கோப்பி, தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கையை ஆரம்பித்துவைத்தமை.
   2) மலையகத்துடன் கரையோரத்தைப் பெருந்தெருக்களால் இணைத்தவர்கள்.
   3) புகையிரதப் பாதைகளை அமைப்பதற்குப் பொறுப்பாயிருந்தவர்கள்.
   4) நீர்ப்பாசனப் புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்.

30. சன் யாட் சென், மகாத்மா காந்தி, முஹம்மட் அலி ஜின்னா, டீ.எஸ்.சேனநாயக்க ஆகிய பெருந்தகைகளைப் பற்றிக் கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளுள் எவற்றைச் சரியானதாகக் கொள்வீர்?
   1) இந்நாடுகள் சுதந்திரம் அடைந்த பின்னர் அந்நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டவர்கள்.
   2) பிரித்தானியப் பேரரசுடன் போராடித் தத்தமது நாடுகளுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தோராவர்.
   3) இவர்கள் தத்தமது நாடுகளின் தேசபிதாக்களாக கண்ணியப்படுத்தப்படுவோராவர்.
   4) இவர்களால் எழுதப்பட்ட நூல்கள் உலக மக்களுக்குப் புதிய தத்துவங்களை முன்வைத்தவைகளாகும்.

31. இந்தியா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளின் எழுச்சியைப் பற்றிக் கற்றுக்கொண்ட நீங்கள் பின்வரும் படிப்பினைகளில் எதனைப் பெற்றுக்கொண்டீர்கள்?
   1) தமக்கென பாரம்பரியமான போராட்ட முறைகளை வகுத்துக்கொண்டு செயற்படுதல்.
   2) வெளிநாட்டவரின் நடைமுறைகளைத் தமது நாட்டுக்குப் பொருந்தும்வண்ணம் மாற்றியமைத்துக்கொள்ளுதல்.
   3) வல்லரசுகளின் போக்கறிந்து நடந்துகொண்டு தமது இலட்சியங்களை அடைந்துகொள்ளுதல்.
   4) தலைமைக்குக் கட்டுப்பட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.

32. டொகுகாவா ஷோகுன்களின் ஆட்சியின் சிறப்பம்சமாக எதனைக் குறிப்பிடுவீர்?
   1) ஜப்பான் அதிநவீன நாடாக மாற்றம்பெற்றமை.
   2) ஒரே நிர்வாக அமைப்புக்குள் நாட்டைக் கொண்டுவந்தமை.
   3) கிறிஸ்தவ சமயம் ஜப்பானில் இருந்து பூண்டோடு அழிக்கப்பட்டமை.
   4) ஜப்பான் வெளியுலகத்திற்குத் திறந்துவிடப்பட்டமை.

33. 2ஆம் உலக மகா யுத்தத்தில் ஐக்கிய அமெரிக்கா பிரவேசிக்கக் காரணமாயிருந்த பேர்ள் துறைமுகம் எச்சமுத்திரப் பரப்பில் அமைந்துள்ளது?
   1) வட பசுபிக்.
   2) தென் பசுபிக்.
   3) வட அத்திலாந்திக்.
   4) தென் அத்திலாந்திக்.

34. 15ஆம் நூற்றாண்டில் கீரியும் பாம்புமாய் நூற்றாண்டுப் போரில் ஈடுபட்ட இரு நாடுகள் 20ஆம் நூற்றாண்டில் நகமும் சதையுமாய் நட்புப்பூண்டு இயங்கின. அவ்விரு நாடுகளும் எவை?
   1) ஜேர்மனும் ஆஸ்திரியாவும்.
   2) பிரஷ்யாவும் ரஷ்யாவும்.
   3) பிரித்தானியாவும் பிரான்ஸும்.
   4) ஜேர்மனும் இத்தாலியும்.

35. கம்யூனிஸ்ட், கொமிங் டாங், தேசிய காங்கிரஸ், நாசி, பாசி ஆகிய கட்சிகளை ஸ்தாபித்தவர்களின் பெயர்களை முறையே குறிப்பிடும் விடை எது?
   1) லெனின், சன்யாட் சென், ஹிட்லர், பெனர்ஜி, முஸோலினி.
   2) சன்யாட் சென், ஹிட்லர், முஸோலினி, லெனின், பெனர்ஜி.
   3) லெனின், பெனர்ஜி, சன்யாட் சென், ஹிட்லர், முஸோலினி.
   4) லெனின், சன்யாட் சென், பெனர்ஜி, ஹிட்லர், முஸோலினி.

36. முதலாம் உலகப் போருடன் சம்பந்தப்பட்ட காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றுடனொன்று நெருங்கிய சம்பந்தமுடைய சோடியாக எதனைக் கொள்வீர்?
   A - ஷேர்பியா, ஆஸ்திரியாவால் தாக்கப்பட்டமை.
   B - பெல்ஜியத்தின் ஊடாக ஜேர்மனி பிரான்ஸ் மீது படையெடுத்தமை.
   C - ரஷ்யாவில் கம்யூனிஸ்டுகள் புரட்சிசெய்தமை.
   D - லூசிடேனியா கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை.
   E - ஜனாதிபதி வூட்றோ வில்ஸன் 'சகலருக்கும் நியாயம்' என்ற கோட்பாட்டை முன்வைத்தமை.
   F - ரஷ்யா போரிலிருந்து விலகிச்சென்றமை.
   1) A, B 2) C, F 3) C, D 4) D, E

37. சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் கூட்டப்பட்ட சர்வதேச சங்கக் கூட்டங்களில் கலந்துரையாடப்படாத விடயமாக எதனைக் கொள்வீர்?
   1) ஜப்பான் பேர்ள் துறைமுகத்தின் மீது விமானத் தாக்குதலை மேற்கொண்டமை.
   2) ஜேர்மனும் ரஷ்யாவும் சேர்ந்து போலந்தை ஆக்கிரமித்துக்கொண்டமை.
   3) இத்தாலி அபிஷீனிய (எதியோப்பிய) நாட்டை ஆக்கிரமித்துக்கொண்டமை.
   4) ஜப்பான் சீனாவின் கிழக்குக் கரையோரத்தைத் தாக்கியமை.

38. பனிப்போர் என்ற வரையறையினுள் வராத மோதலாக இவற்றுள் எதனைக் கொள்வீர்?
   1) பேர்லின் நெருக்கடி.
   2) கொரிய நெருக்கடி.
   3) சுயெஸ் நெருக்கடி.
   4) கியூப நெருக்கடி.

39. பிரித்தானியா, ஜப்பான் எனும் இரு நாடுகளை வைத்துப் பார்க்கும்போது பொருத்தப்பாடற்ற ஒரு விடயம் எது?
   1) இரண்டுமே தீவு நாடுகளாகும்.
   2) இரு நாடுகளும் கைத்தொழில் வல்லரசுகளாகும்.
   3) உலக மகா யுத்தங்கள் இரண்டிலும் இவை பங்குபற்றின.
   4) ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்ப அங்கத்துவ நாடுகளாகும்.

40. இரண்டாவது சோஸலிஷ ஜனநாயக் குடியரசு யாப்பில் ஜனாதிபதிப் பதவிக்கு இரு முறைக்கு மேல் போட்டியிடுவதில் இருந்த வரையறை நீக்கப்பட்டது எத்தனையாவது சீர்திருத்தத்தில்?
   1) 13 2) 17 3) 18 4) 19

(17 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சரவணபவன் எம்.பி. 34 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக். 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 34 லட்சம் ரூபா நிதியை யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்குவழங்கியுள்ளார்.

அவர் வழங்கிய உதவித் திட்டங்களும் அவற்றின் தொகையும் வருமாறு:-

**கரவெட்டிப் பிரதேச செயலகம்**

✱ உடுப்பிட்டி சேமக்காலை வீதி புனரமைப்பு - 50 ஆயிரம் ரூபா.

✱ அல்வாய் கிழக்கு சனசமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 25 ஆயிரம் ரூபா.

**சங்கானை**

✱ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.

✱ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.

✱ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்குத் தளபாடங்கள் வழங்கல் - ஒரு லட்சம் ரூபா.

✱ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் - ஒரு லட்சம் ரூபா.

✱ சுழிபுரம் பாரதி சிறுவர் முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா.

✱ சுழிபுரம்பெரியபுலோஅண்ணா முன்பள்ளிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 10 ஆயிரம் ரூபா.

✱ சுழிபுரம், வழக்கம்பரை அம்மன் ஆலயத்தின் கட்டடம் புனரமைப்பு-ஒருலட்சத்து50ஆயிரம் ரூபா.

✱ சங்கானை கரைச்சி மயான அபிவிருத்திச் சபைக்கு தளபாடங்கள் வழங்கல் - 50 ஆயிரம் ரூபா.

**சாவகச்சேரி**

✱ கச்சாய் அ.த.க. பாடசாலையின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம்

✱ சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாசாலையின் வகுப்பறைகள் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.

✱ கச்சாய் றோ.க.த.க. பாடசாலையின் வகுப்பறைகள் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.

✱ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலைக்கு 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் வழங்கல் - ஒரு லட்சம்

✱ சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு கணினிகள், உபகரணங்கள் வழங்கல் - ஒரு லட்சம் ரூபா.



வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற பெற்றோர் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

✱ சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குத் தொலைபேசி இணைப்பு வசதிகள், தொடர்புசாதனங்கள் வழங்கல் - ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

✱ கைதடி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு 'பாண்ட்' வாத்திய உபகரணங்கள் வழங்கல் - ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

✱ வரணி இடைக்குறிச்சி சன சமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 40 ஆயிரம் ரூபா.

✱ கைதடி மத்தி வளர்மதி சன சமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 40 ஆயிரம் ரூபா.

✱ கைதடி மத்தி குமரநகர் சன சமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 40 ஆயிரம் ரூபா.

✱ கைதடி மத்தி குமரநகர் நவ சக்தி சனசமூக நிலையத்துக்கு தளபாடங்கள்வழங்கல்-40ஆயிரம்ரூபா.

✱ மட்டுவில் வில்சன் சன சமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 40 ஆயிரம் ரூபா.

✱ வினோபா சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்துக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் - 50 ஆயிரம்

✱ தென்மராட்சி கலைமன்றத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 50 ஆயிரம் ரூபா.

✱ இடைக்குறிச்சி பெண்கள் கிராமிய சமூக அபிவிருத்தி மன்றத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 50 ஆயிரம் ரூபா.

**மருதங்கேணி**

✱ கட்டைக்காடு அ.த.க. பாடசாலையின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.

**பருத்தித்துறை**

✱ வல்வெட்டித் துறை தமிழ்க் கலவன் பாடசாலையின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.

✱சுப்பர்மடம் மயான அபிவிருத்திச் சபைக்குத் தளபாடங்கள் வழங்கல் - 50 ஆயி ரம் ரூபா.

**நல்லூர்**

✱ யாழ்.இந்துக் கல்லூரிக்கு 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் வழங்கல்-ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபா.

✱ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்துக்கு கணினிகள், சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகளும் மற்றும் உபகரணங்களும் வழங்கல் - 50 ஆயிரம் ரூபா.

✱ கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு கணினிகளும் மற்றும் உபகரணங்கள் வழங்கல் - 50 ஆயிரம் ரூபா.

✱ நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 25 ஆயிரம் ரூபா.

✱ சம்பியன் லேன் வளர்மதி சன சமூக நிலையத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 40 ஆயிரம் ரூபா.

✱ யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 40 ஆயிரம் ரூபா.

✱ மகா விஷ்ணு ஆலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம்

✱ ஸ்ரீ நாராயணா கிராமிய அபிவிருத்தி மன்றத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 50 ஆயிரம் ரூபா.

✱ கோண்டாவில் வடக்கு மத்திய கிராமிய அபிவிருத்தி மன்றத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 50 ஆயிரம்

**சண்டிலிப்பாய்**

✱ சில்லாலை றோ.க.த.க. பாடசாலைக்கு 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் வழங்கல் - ஒரு லட்சம் ரூபா.

✱ பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு போட்டோக் கொப்பி, றோணியோ இயந்திரங்கள் வழங்கல்- 50 ஆயிரம் ரூபா.

✱ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்துக்கு போட்டோக் கொப்பி இயந்திரம் மற்றும் நூலகத்துக்கான தளபாடங்கள் வழங்கல் - ஒரு லட்சம் ரூபா.

**தெல்லிப்பழை**

✱ கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்துக்கு நூலகத் தளபாடங்கள்வழங்கல்-ஒருலட்சம் ரூபா

**உடுவில்**

✱ சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அலுவலகத் தளபாடங்கள் வழங்கல் - ஒரு லட்சம் ரூபா.

**நெடுந்தீவு**

✱ நெடுந்தீவு சிவப்பிரகாச வித்தியாலயத்துக்கு றோணியோ இயந்திரமும் உபகரணங்களும் வழங்கல் - ஒரு லட்சம் ரூபா.

✱ பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் கட்டடம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.

**யாழ்ப்பாணம்**

✱ வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்குத் தளபாடங்கள் வழங்கல் - ஒரு லட்சம்

**காரைநகர்**

✱ காரை. மத்தி அபிவிருத்தி மன்றத்துக்கு தளபாடங்கள் வழங்கல் - 50 ஆயிரம் ரூபா. (201)

## வரலாறு - II

நேரம்: 3 மணித்தியாலங்கள்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

✱ முதலாம் வினா கட்டாயமானதாகும். பகுதி 1 இலிருந்து 3 வினாக்களுக்கும், பகுதி 2 இலிருந்து 2 வினாக்களுக்குமாக மொத்தம் 6 வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி I

01. 1) இலங்கைப் படமொன்றில் தரப்பட்டுள்ள இடங்களைக் குறித்துக் காட்டுக: பலாங்கொடை, ஜஜ்ஜர நதி, அநுராதகாம, மகாகாம, எலஹர அணைக்கட்டு, கந்தளாய்க் குளம், கொடவாய, அதுகல் புர, தந்துற, வெல்லஸ்ஸ.
2) உலகப்படம் ஒன்றில் பின்வரும் இடங்களை மிகச் சரியாக அடையாளமிட்டுக் காட்டுக: கருங் கடல், கங்கைநதி, மலாக்கா நீரிணை, லாட தேசம், ஜெரூஸலம், நன்னம்பிக்கை முனை, பெர்லின், ஹவாய் தீவு.
3) 1. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பௌத்த பிக்குகளின் பெயர்களைக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புக.
   1) பாணந்துறை விவாதத்திற்குத் தலைமை தாங்கி வெற்றி பெற்றவர்:..................
   2) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனால், சங்கராஜாவாகத் தரமுயர்த்தப்பட்டவர்:..................
   3) 1848 இல் இடம்பெற்ற கலவரத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்:..............
   4) கண்டிய ஒப்பந்தம் எழுதப்படுகையில் ஏற்றப்பட்ட பிரித்தானியர் கொடியைக் கீழிறக்கி, சிங்கக் கொடியை ஏற்றியவர்:................
   (வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர, மிக்கெட்டுவத்த குணானந்த, வலானே சித்தார்த்த, வாரியப் பொல ஸ்ரீ சுமங்கள, குடாபொல, வில்பாவே)
   2. இப்படங்களில் தரப்பட்டுள்ளவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

A  B  C  D 

   3. கீழே தரப்பட்டுள்ள நூல்களின் ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
   1) மகாவம்சம் 2) கவிசிலுமின
   3) சத்தியசோதனை 4) சகுந்தலை

### பகுதி II

02. 1) இலங்கையின் வரலாற்றில் 5ஆம் மஹிந்தன், கலிங்க மாகன், ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் எனும் அரசர்கள் ஒரே விடயத்தில் ஒன்றுபடுகின்றனர். அவ்விடயங்களை முறையே தருக.
2) இலங்கையைக் கைப்பற்றி நல்லாட்சி புரிந்த அந்நிய அரசர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் ஒவ்வொரு சிறப்பியல்புகளையும் குறிப்பிடுக.
3) வரலாற்றில் 'மகா' என்ற அடைமொழியைப் பெற்ற மன்னர்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்கள் அதனை அடைய ஆற்றிய பணிகளை விளக்குக.
4) துட்டகைமுனு மன்னனின் வரலாற்றுப் பணிகள் இரண்டை மதிப்பீடு செய்க.

03. ''இலங்கையில் பெருமைக்குறிய நீர்ப்பாசன நாகரிகம் ஒன்று நின்று நிலவியது.''
1) 1. முதலாவது குளத்தைக் கட்டிய மன்னன் யார்?
   2. பெருங்குளத்தைக் கட்டிய முதல் மன்னன் யார்?
   3. தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்ட மன்னன் யார்?
2) தாதுசேன, மகாபராக்கிரமபாகு மன்னர்களால் நீர்ப்பாசனம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்ட எடுகோள்கள் எவை?
3) இவை எல்லாம் அழிவுற்றமைக்கான வரலாற்றுக் காரணங்கள் இரண்டை விளக்கிக் கூறுக.
4) ஓர் ஆற்றின் நீரை பிறிதோர் ஆற்றின் பள்ளத்தாக்கிற்குப் பாய்ச்சும் நுட்பம் 5ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டது. இவ்விரு ஆறுகளினதும், சம்பந்தப்படும் இரு நீர்த்தேக்கங்களினதும், இணைக்கும் கால்வாயினதும், இணைத்த மன்னனினதும் பெயர்களை ஒழுங்கமைப்பில் குறிப்பிடுக.

04. 1) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரத்தை ஆண்டுகொண்டிருந்தபோது, கண்டி இராச்சியத்தின் மன்னர்களாகப் பதவி வகித்தோர் மூவரின் பெயர்களையும் முறையே குறிப்பிடுக.
2) போர்த்துக்கேயர் எவ்வளவு முயன்றும் அவர்களால் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடியாது போனமைக்கான நான்கு காரணிகளைத் தருக.
3) போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் கைப்பற்ற முடியாதுபோன மலைநாட்டை ஆங்கிலேயரால் மாத்திரம் எவ்வாறு வெற்றிகொள்ள முடிந்தது என்பதை இரண்டு காரணிகளூடாக விளக்குக.
4) ஆங்கிலேயரின் ஆட்சியால் இலங்கை அடையப்பெற்றது நன்மையா? தீமையா? உமது கருத்தை இரண்டு ஆதாரங்களுடன் நிறுவுக.

05. 1) ''மூன்று நூற்றாண்டுகளாக அந்நிய ஐரோப்பியரிடமிருந்து தம்மைக் கண்டி இராச்சியம் காத்துக்கொண்டது.''
   1. கண்டி மீது படையெடுத்த முதல் பிரித்தானிய ஆளுநர் யார்?
   2. கண்டியைக் கைப்பற்றி தமதாக்கிக்கொண்ட ஆளுநர் யார்?
   3. கண்டியைக் கொழும்புடன் தொடுத்து பெருந்தெருவைவெட்டிய ஆளுநர் யார்?
2) பிரித்தானியர் கையாண்ட பாழ் நிலக் கொள்கை, தரிசு நிலச்சட்டம் என்பவற்றால் கருதப்படுவது என்ன?
3) ஊவா - வெல்லஸ்ஸ(1818) கலவரத்திற்கும் மாத்தளைக் கலவரத்திற்கும் (1848) இடையே காணப்பட்ட இரு வேறுபாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக.
4) இலங்கையின் மூவின மக்களினதும் கலாசார மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கப் பாடுபட்ட ஒவ்வொருவரினதும் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களில் ஒருவரின் பணியை மதிப்பீடு செய்க.

06. 1) தற்போதைய எமது அரசியல் யாப்பின்படி சட்ட, நிர்வாக, நீதித்துறைகளுக்குத் தலைமை தாங்கும் பதவிகளை முறையே குறிப்பிடுக.
2) எமது பாராளுமன்றத்தால் ஆற்றப்படும் இரு பணிகளைக் குறிப்பிடுக.
3) இலங்கையில் வாக்குரிமை வளர்ச்சியின் வரலாற்றைப் படிமுறையாக விளக்குக.
4) ''ஜனாதிபதி ஒருவர் இரு முறை மட்டுமே பதவி வகிக்கலாம்'' என்ற வரையறை 18ஆவது அரசியல் யாபபுச் சீர்திருத்ததின்படி நீக்கப்பட்டது நன்மையானதா? அல்லது தீமையானதா? என்பதை இரு கருத்துக்கள் மூலம் நிறுவுக.

### பகுதி III

07. 1) ஐரோப்பாவில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர்களிலிருந்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   1. மொனாலிஸா ஓவியத்தை வரைந்தவர் யார்?
   2. வானியலின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
   3. செய்முறை விஞ்ஞானத்தின் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
2) மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த வரலாற்றுக் காரணியாகக் கருதப்படுவது எதனை என்பதை முழுமையாகக் கூறுக.
3) மானிய முறைச் சமூகத்தில் காணப்பட்ட அரசியல், பொருளியல், கலாசார அம்சங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் நீர் விரும்பிய ஒன்றை விளக்குக.
4) மானிய முறையை முற்றாக ஒழித்த புரட்சிகள் மூன்றைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்று அதனை எவ்வாறு சாதித்தது என்று கருத்துரைக்குக.

08. ''மனிதன் கைகளினால் செய்த வேலைகளுக்குக் கருவிகளைக் கண்டறிந்ததும், மனித, மிருக சக்திகளுக்குப் பதிலாக வலு மூலங்களைக் கண்டறிந்ததுமே கைத்தொழில் புரட்சியாகும்.''
1) இப்புரட்சி ஆரம்பமான மூன்று தொழிற்றுறைகளும் எவை?
2) இங்கிலாந்தில் இப்புரட்சி இடம்பெற்றதற்குத் துணையாக இருந்த நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.
3) இதனால் நீர் அடையப்பெற்றுள்ள நன்மைகள் இரண்டை விளக்கிக் கூறுக.
4) இப்புரட்சி குடியேற்றவாதத்தின் நோக்கில் தோற்றுவித்த பிரதான மாற்றங்கள் இரண்டைக் கூறி அதுதொடர்பான உமது கருத்தை முன்வைக்குக.

09. ''பிரித்தானியாவையும் பிரான்ஸையும் தாழ்த்தி ஐக்கிய அமெரிக்காவையும் ரஷ்யாவையும் உயர்த்திய இரு உலகப் போர்களும் நீங்கள் வாழும் உலகத்தின் போக்கை வடிவமைத்தன.''
1) அச்சு நாடுகள் எனும் பெயரை உருவாக்கிய மூன்று நகரங்களையும் குறிப்பிடுக.
2) வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் ஜேர்மனுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் நான்கைக் குறிப்பிடுக.
3) ஒதுங்கியிருந்த ஐக்கிய அமெரிக்காவை போரில் ஈடுபடச் செய்த இரு சம்பவங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
4) ''ரஷ்ய நாட்டின் வரலாற்றில் இரு உலகப்போர்களுமே அதற்கு திருப்புமுனையாக அமைந்தன.'' அவ்விரு சந்தர்ப்பங்களையும் குறிப்பிட்டு விளக்குக.

10. 1) இங்கு தரப்பட்டுள்ள ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதிகளுள் நீர் விரும்பிய மூவரின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
   ✱ ஜோர்ஜ் வொஷிங்டன் ✱ ஆபிரஹாம் லிங்கன்
   ✱ ஜேம்ஸ் மொன்றோ ✱ ஜோன் F. கெனடி
   ✱ ஒபாமா
2) பனிப்போர் என்பது யார் யாருக்கிடையே, ஏன், எக் காலகட்டத்தில் இடம்பெற்றது?
3) மூன்றாம் உலகப் போரைத் தோற்றுவித்துவிடும் என அஞ்சப்படும் இரு உலக நெருக்கடிகளின் தன்மையைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
4) சோவியத் ரஷ்யா 15 நாடுகளாய்ச் சிதறுண்டுபோய் வீழ்ச்சி அடைவதற்கான இரு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(முற்றும்)

### தமிழ் I விடைகள் (20.10.2010)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-2 | 02-3 | 03-1 | 04-1 | 05-3 | 06-1 | 07-4 | 08-2 | 09-4 | 10-3 |
| 11-2 | 12-1 | 13-4 | 14-2 | 15-2 | 16-2 | 17-1 | 18-3 | 19-4 | 20-1 |
| 21-3 | 22-3 | 23-1 | 24-2 | 25-4 | 26-1 | 27-2 | 28-3 | 29-2 | 30-1 |
| 31-3 | 32-1 | 33-4 | 34-2 | 35-1 | 36-3 | 37-3 | 38-1 | 39-4 | 40-2 |

# மனிதன் தெய்வீகத்தின் அம்சம்

ஒவ்வொரு மனிதனுக்கும் மனம் என்ற ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அது ஒரு மர்மமான பொருள். அது இடம்பெயராதது போலத் தோன்றும். இருந்தும் இது ஒளியின் வேகத்திலும் பார்க்க அதி வேகமாகப் போகக் கூடியது. ஒருவன் பலவிதமான பிறவிகள் எடுத்தாலும், பெயரிலும், உருவத்திலும் பல விதமான மாற்றங்களை அடைந்தாலும் மனம் ஒரு வித மாற்றமும் அடையாமலிருக்கும். அது ஒருவனை அவன் பிறவி தோறும் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கும். இதுதான் மனத்தின் விசித்திரமான இயக்கமாகும். இந்த நிலையில் ஒருவர் எப்படி தன் மனிதத் தன்மையை வெளிப்படுத்தலாம். சுவையற்ற பூவில்கூட இனிமையான தேனைச் சேகரிக்கும் தேனீயின் உதாரணத்தை மனிதன் பின்பற்ற வேண்டும். அதேபோல தீயதைப் போலத் தோன்றும் ஒரு விடயத்தில் கூட நல்லதைத் தேர்ந்தெடுக்க ஒருவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தீயது என்று சொல்வதிலும் நல்லது என்று ஏதோ இருக்கிறது.

மனிதனிடம் ஒவ்வொரு கணமும் தெய்வத்துவம் ஒளி விடுகிறது. மனிதன் பிறந்திருப்பது ஏதோ சுய நலத்துக்கும், சுயலாபத்திற்கும் அல்ல. உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாக உதாரண புருஷனாக வாழ அவன் இலக்கு நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். இந்த உலகில் எங்கு நோக்கினும் அமைதியின்மை, அமை தியின்மைதான். எல்லாம் மாறுகின்றன. காலம் மாறுகிறது. மனிதர்கள் (புறத்தோற்றத்தில்) மாறுகிறார் கள். நியமங்கள் மாறுகின்றன. மனித மனம் மட்டும் மாற மறுக்கிறது.

மனிதன் தன்னுள் இருக்கும் தெய்வீகத்தை அடக்கி வைத்திருப்பான். எப்போது இத்தெய்வீகத்தை அதிகமாக வளர்க்கிறானோ, அப்போது தெய்வ சங்கற்பத்தைக்கூட மாற்ற இயலும். ஏனெனில் மனிதன் தெய்வீகத்தின் அம்சம். பிரகிருதியின் அம்சம் அல்ல. அதனால் நல்ல எண்ணங்களையும், செயல்களையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். உதாரணபுருஷனாக உன்னை நிலை நிறுத்திக் கொள்ளுதல் அவசியம்.

ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதன் ஆரம்பம் இப்போதுதான் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. விதை மரமாகவும், குழந்தை தந்தையாகவும் என மாற்றம் ஏற்பட்ட வண்ணம் இருக்கிறது.



முட்டை பறவையாக மாறுகிறது. இவையெல்லாம் மாற்றத்தின் விளைவுகளே. ஆனால் மனிதன் தெய்வமாக உயருவதில்லை. ஆனால் அரக்கனாகக் கீழே இறங்கிப் போய் விடுகிறான் இது தவறு. முன்னேற வேண்டும். பின்வாங்கக் கூடாது. மாணவத் தன்மையிலிருந்து (மனிதத் தன்மையிலிருந்து) தெய்வத்துவமாக மாறவேண்டும். பிராணிகளின் நிலையிலிருந்து மனிதனாக வளர்ந்திருக்கிறோம். தெய்வீகமாக உயரவேண்டுமேயன்றி வேறு வழி செல்லக் கூடாது.

## சாயி சிந்தனை

# பரிசளிப்பு விழாக்கள்

வடமராட்சி, ஒக்.21

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சின்னத்தம்பி கலை அரங்கில் அதிபர் மா.நவநீ தமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முக லிங்கன் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் திருமதி கௌரி சண்முகலிங்கன் பரிசில்களை வழங்கவுள்ளார். (204-236)

* * * * *

வடமராட்சி,ஒக்.21

கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்குக் கல்லூரி பிரதி அதிபர் திருமதி நா.அனந்தேஸ் வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் திருமதி நந்தினி உதயகுமார் பரிசில்களை வழங்கவுள்ளார். (204-236

* * * * *

கோப்பாய், ஒக்.21

அச்செழு சைவப் பிரகாச வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை முதல்வர் ச. வேலழகன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக முன்னாள் பிரதி அதிபர் திருமதி கி.ஸ்ரீஸ்கந் தராஜா, ஓய்வுபெற்ற தாதிய உத்தியோ கத்தர் திருமதி த.கந்தசாமி, முன்னாள் பிரதி அதிபர் செல்வி அ.நடராஜா, நலன்விரும் பியான திருமதி அ.சின்னத்தம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (204-72)

## கொடுப்பனவு பெறாதோர் உடன் தொடர்புகொள்க

யாழ்ப்பாணம், ஒக்.21

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் கொடுப்பனவான 20 ஆயிரம் ரூபா,நிக்கொட் அமைப்பின் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக நல்லூர் பிரதேச திட்டப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறும், அடையாள அட்டை, வங்கிப் புத்தகங்களின் புகைப் படப் பிரதியுடன் சமூகமளிக்குமாறும் நல்லூர் பிரதேச உதவித் திட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திர நாதன் அறிவித்துள்ளார். (த-7)

**விற்பனைக்கு**

புதிய சொப்பிங் பாக் தயாரிக்கும் மெஷின் விற்பனைக்குண்டு.
தொடர்பு இல: 400, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6634, 0778736561

**பிறின்ஸி போல்றி பாம்**

புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
இல.380, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
இ.பீற்றர்தாஸ்- 0776095749

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

தொண்டமானாறு செல்வச் சந்நிதியைச் சேர்ந்த கந்தசாமி ரஞ்சநாதன் (ரஞ்சன்) - செல்வகுமாரி தம்பதியரின் ஏக புதல்வன் செல்வன் ர.அருஷன் இன்று (21.10.2010) வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார். அருஷன் எல்லாம் வல்ல செல்வச்சந்நிதி முருகனின் ஆசியுடன் பல கலையும் பயின்று நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

அருஷனின் பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று (21.10.2010) வியாழக்கிழமை மதியம் செல்வச்சந்நிதி முருகனுக்கு அபிஷேக ஆராதனையும், அதனைத் தொடர்ந்து இவரது பேரனது மடமாகிய மணியம் மடத்தில் அன்னதானமும் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
கந்தசாமி புஸ்பநாதன் குடும்பம்
(பெரியப்பா),
மணியம்மடம்,
செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.
தொ.பே. : 077 6648653
021 7912094
(104906)




## மாபெரும் இலவச மருத்துவ முகாம்

LIONS CLUBS INTERNATIONAL
DISTRICT 306 B1 ஒழுங்குபடுத்தலில்
**Cherron Lubricants Lanka Ltd** இன்
அனுசரணையில் நடத்தப்படும்
மாபெரும் இலவச மருத்துவ முகாம்

இடம்: **St.James School**
(பிரதான வீதி, யாழ்ப்பாணம், யாழ்.சிறைச்சாலைக்கு முன்பாக)
காலம்: நாளை **(22.10.2010)** வெள்ளிக்கிழமை
காலை: 9.00 மணி தொடக்கம் 12.30 வரை
(சி/572035)

## இடமாற்றம்



**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

இல.54, பெரியகடை வீதியில் இயங்கிவந்த எமது நிறுவனம் தற்பொழுது
இல.66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
எனும் எமது சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கோவில் தேவைகளுக்குரிய குடை, கொடி, ஆலவட்டம், திரைச்சீலை, வாகுமாலை விற்பனையாளர், உற்பத்தியாளர் இப்பொருள்களை திறமையாகத் திருத்தம் செய்து கொடுப்பவர்கள்.

**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
இல.66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2899

## Dip.Inf.J. SABINS JEYASEGARA HOLDING

**Job opportunity Information Technology**

NECM - North East Computer Masters - Vacancies for Young Dynamic Team!
Secretary with Ms Office - Sales Manager - Technician (Experience in the field of IT welcome)

**Job opportunity in Agra Sector.**

SABINS No1 Modern Healthy Poultry Farm!
Management - Secretary with Ms.Office - Sales manager - Staff (Experience in the field of Poultry. farm welcome)

**Please send the CV - Bio Data with Photo ASAP**

NECM - North - East Computer Masters,
Attn: Mr.Sabins Jeyasegara
360/8,Catholic Press Complex,
Main Street,
Jaffna.
(104917)

## பவளவிழா வாழ்த்துக்கள்

(21.10.2010)
திருவாளர்
**சண்முகம் குகதாசன்** அவர்கள்
அகவை எழுபத்தைந்தில்
அடி எடுத்து வைக்கும்
அன்புக் குகதாசன் மாமா -
இன்னும்
ஆண்டுகள் பல சேமமாய்
வாழ்ந்திட
அன்புடன் வாழ்த்தும் நாம்
மீரா விஜயகுமார் குடும்பம்,
தபோதினி முகுந்தன் குடும்பம்.
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.



(104907)

# எதிர்காலம் வளமாக அமைய வெளிநாடு செல்வதே வழி என இன்றைய இளம் சமுதாயத்தினர் எண்ணுகின்றனர். இந்த எண்ணம்

சரியானதா / தவறானதா




இன்றைய காலத்தில் நாம் வசதியாக வாழ்வதற்கு வெளிநாடு செல்வதே சிறந்த வழியாகும். ஏனெனில் இன்று நாட்டிலே எவ்வளவோ படித்துப் பட்டம் பல பெற்றாலும் வேலைவாய்ப்பைப் பெற முடியாத சந்தர்ப்பமே காணப்படுகின்றது. இதனால் விரக்தி அடைந்த இளம் சமுதாயத்தினர் தங்களது எதிர்காலத்தை வளமாக்கும் பொருட்டு வெளிநாடு செல்கின்றனர்.

மற்றும் இன்றைக்கு மாத வருமானம் என்பது வெளிநாட்டிலும் பார்க்கக் குறைவாகவே காணப்படுகின்றது. இங்கு எத் தொழில் புரிந்தாலும் மாத வருமானம் குறையத் தான் வரும். இதனாலேயே எதிர்காலத்தை வளமாக்கும் நோக்குடன் இன்றைய இளம் சமுதாயத்தினர் வெளிநாடு செல்வதே வழி என எண்ணுகின்றனர்.

இன்று கூலி வேலை பார்ப்பவர்கள் உடனே தங்களது சம்பளத்தினைக் கொடுத்து வேறு அத்தியாவசியப் பொருளை வேண்டுவதால் மிகுதி என்பது இல்லாது போகின்றது. இதனால் இவர்கள் தங்களது எதிர்காலத்தை வளமாக்கும் நோக்குடன் வெளிநாடு செல்லுகின்றனர் எனலாம்.

**டர்சிகா நாகராசா**
*யா/வட்டு இந்து நவோதயாக் கல்லூரி.*
A/L (2011) *கலைப்பிரிவு.*

மேகம் நிறம்மாறிவர, மாரிமழை தான் பொழிய, கதிரவன் கைநீட்டி அழைப்புவிட, அப்பு கலப்பை சுமந்து வர, ஆச்சி கஞ்சிக் கலசம் காவி நிற்க, கழனியில் உணவு படைத்தவர் நாம். இன்று அந்த உணர்விழந்து தரணியெங்கும் அலைகின்றோம்.

எல்லை வேலியில் கொப்புடைத்து, எளிதாய் குழை இணுங்கி கொல்லையில் கொட்டில் கட்டி கொழுகொழு ஆடுகள் வளர்த்தோரும் நாமே! கம்பில் கரப்பு செய்து ''கலர்கலராய்'' கோழிகள் வளர்த்தோமே! கறுப்பி, சிவப்பி எனப் பெயர் வைத்தே பசுக்கன்றுகள் பல வளர்த்துப் பாலில்... தயிர், வெண்ணெய், மோர் எனப் பலதும் பிரித் தெடுத்தோமே! நாம் இன்று பல திக்குகளில் பிரிந்து போனோமே!

''என்ன வளம் இல்லை எம் திருநாட்டில்?''... நெல்லோடு எள், பயறு, குரக்கன், தினை, சாமை, வரகுவகை... மரவள்ளி முதல் பனங்கிழங்கு வகை வகையாக, சுறா, திருக்கை, கணவாய், நண்டு, இறால் இவை சுவை சுவையாக, அகத்தி, பொன்னாங்காணி, வறுமை போக்கும் முருங்கை இலைவகையாக, கத்தரி முதல் பூசனி வரை காய் கறிகளாக, செம்பாட்டான், அம்பலவி, கறுத்தக்கொழும்பான் எனும் கனிவகையாக, பலா முதல் விளாவும்... இதரை, கதலி, கப்பல் எனும் கனிவகையாக, பழவகையும்... பல வகையும் எம் முற்றத் தில் குடியிருக்க நாமோ, விரைவுணவு, விலையுணவு தேடிப் புலம்பெயர்ந் தலை கிறோம்.

இத்தனையும் இங்கிருக்க இல்லாததைத் தேடித்திரிவதேன்? ''இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி அலைகிறாய் ஞானத்தங்கமே'' எனும் பாடல் எங்கிருந்தோ காற்றில் மிதந்து வருகிறது... எமக்காக எல்லாம் எமக்காக இங்கிருக்க, நம்மவர்தான் அதற்காக, அதைக் காக்க இங்கில்லை!

**மு.க.பாத்திமா றிஸ்லியா,**
*பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி.*

## பயமின்றி பரீட்சையை எதிர்கொள்ள

பரீட்சைகள் என்பது ஒரு மோசமான விடயமல்ல. மிகவும் நல்ல பயன்களையுடைய ஓர் அருமையான விடயம் தேர்வுகள் (பரீட்சைகள்) வைப்பதன் நோக்கங்கள்:-

1. வகுப்பில் சொல்லித்தந்த பாடங்களையெல்லாம், நாம் எந்தளவு ஊன்றிப் படித்திருக் கின்றோம் என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு.
2. கற்றுக்கொண்ட விடயத்தை இன்னொருவருக்கு விளங்கும்படி விரிவாகவும் தெளிவாகவும் சொல்வதற்கு, நமக்குத் தெரிகிறதா என்று அறிந்துகொள்வதற்கு.
3. நாம் படிப்பது சரிதானா என்று நாமே சரியாக சோதித்துப் பார்த்துக் கொள்வதற்கு.
4. ஒரு வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களில் யார் மிகச் சிறந்தவர் எனத் தீர்மானிப்பதற்கு.
5. நம் அறிவுத் திறனுக்கேற்ற, நம் உழைப்புக் கேற்ற மதிப்பெண்ணைப் பெறுவதற்கு.
6. பதற்றமான ஒரு பரீட்சைச் சூழலிலும் நம்மால் நிதானமாகச் செயல்பட முடிகிறதா என்று சோதிப்பதற்கு.

இத்தனை நல்ல பயன்களையுடைய ஒரு விடயத்தைப் பார்த்து நாம் நடுங்கலாமா? மோசமானவர்களைப் பார்த்துத் தான் நாம் பயப்பட வேண்டும். நல்லவர்களைப் பார்த்து யாரேனும் பயப்படுவார்களா?

**ஜனனி சடாச்சரசோதி 10D**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

பரீட்சை என்றதுமே தொடை நடுங்கும் மாணவர்கள் இருக்கின்றார்கள். அந்தப் பயமே இல்லாமல் துணிச்சலா கப் பரீட்சைகளைச் சந்தித்து, சாதிப்பவர்களும் இருக்கின் றார்கள். இன்னும் ஒரு படி மேலே போய், 'பரீட்சை என் றால், எங்களுக்கு பாதாம் அல்வா சாப்பிடு வது மாதிரி' என்று சந்தோஷமாகச் சொல்பவர்களும் கூட உண்டு. இவற்றில் நீங்கள் எந்தக் கட்சி என்று தெரிந்து கொள்ள இந்தப் பரீட்சையே பெரி தும் உதவுகிறது.

*(வளரும்)*

## எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சந்திரன், செவ்வாய் என வேறு மண்ட லங்களுக்கே செய்மதி அனுப்பிவிட் டோம். அண்டை மண்டலங்களில் மனிதக் குடியேற்றங்களை அமைக்க முனைந்து நிற்கின்றோம்.

குளோனிங் குழந்தைகளும் குதித்து மகிழ்கிறார்கள். இயந்திர மனிதன் இயன்ற பணி செய்கின்றான். மகோன்னதமாக விளங்கும் மருத்துவத் துறையோ வளர்ச்சியடைந்துவிட்டது. நோய்த்தடுப்பு, நோய் நீக்கல், இருதயமாற்று, செயற் கைச் சுவாசம், செயற்கை அங்கங்கள் பொருத்துதல் என மருத்துவத்துறை பெற் றுள்ள மாற்றங்கள் சொல்லில் அடங்காதவை. இத்தனை பெரிய மாற்றங்களையும் சிறப்பு மிக்கவனவாக விஞ்ஞானம் செய்த போதும் கூட இன்று மனித வாழ்வில் அமைதி இல்லை.

**ஷாலினி, மட்டுவில்**

எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும்' என மனி தன் அமைதியைத் தேடி அலைகிறானே ஏன்? அவ்வாறு அமைதி கெடுவதற்கும் விஞ்ஞானமே காரணமாக அமை கின்றது என்பதை மறுக்க முடியாது. சூழற் சம நிலை கெட்டுவிட்டது. மிதிவெடிகள், ஏவுகணைகள் போன்றன உருவாகுவதற் குக் கூட விஞ்ஞானமே காரணமாகின்றது. கணினி யுகத்தில் இன்று வாழ்ந்து கொண்டிருக் கும் மனித இனம் தனது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைப் பயன் படுத்த வேண்டும்.

*(வளரும்)*

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

எதிர்காலம் வளமாக அமைய வெளிநாடு செல்வதே வழி என இன்றைய இளம் சமுதாயத்தினர் எண்ணுகின்றனர். இந்த எண்ணம்

சரியானதா [ ] தவறானதா [ ]

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
அடையாள அட்டை இல................................

உங்கள் தீர்ப்புகளை 28.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

## விவாதமேடை

சரியானதா — எதிர்காலம் வளமாக அமைய வெளிநாடு செல்வதே வழி என இன்றைய இளம் சமுதாயத்தினர் எண்ணுகின்றனர். இந்த எண்ணம் — தவறானதா

*இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே* **எதிர்காலம் வளமாக அமைய வெளிநாடு செல்வதே வழி என இன்றைய இளம் சமுதாயத்தினர் எண்ணுகின்றனர். இந்த எண்ணம் சரியானதா? தவறானதா?** *என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.*

## இனிவருமா? சமாதானம்

எமது மண்ணிலே வேடனாய் வந்து
உறங்கி எமது உறவினர்களின்
உயிர்களை பலி எடுத்து
உடல்களை தெருக்களில் எறிந்து
இரத்தங்களை உறிஞ்சுகிறீர்களே
இனியும் உங்களை இறைவன் மன்னிப்பாரா?
ஒவ்வொரு உறவுகளும் விடும்
கண்ணீரும் அழுகையும் இறைவன் மன்னிப்பாரா?
எப்பொழுது எமக்கு விடிவு வரும்
இனிவருமா? சமாதானம்

**கருணாகரன் சோபிகா** *தரம்-10*
*யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*




**கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.**

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்* **'இளவல்கள் வட்டம்'** *என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
.................... ..............................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டங்களில் எடுக்கப்பட்ட காட்சிகள்....

## சுப்பிரமணியம் ஞாபகார்த்த கிரிக்கெட்; திருக்குமரன் வி.க. இறுதியாட்டத்தில்

வலி.வடக்கு,ஒக்.21

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட மென்பந்து விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகமும் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய முத்துத்தம்பி விளையாட்டுக் கழகம் 15.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மயூரன் 9 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 14 ஓட்டங்கள் கிடைத்தன.

திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுதன், தயா, அருண் முறையே 8,10,15 ஓட்டங்களைக் கொடுத்து தலா 3 விக்கெட்டுக்களையும் தினேஸ் 12 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருக்குமரன் விளையாட்டுக் கழகம் 13.1 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது.

இதில் சுரேஷ் 16 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்கள் கிடைத்தன.

முத்துத்தம்பி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த டுசாந் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கோபி 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சுரேந்திரன், ரஜீபன் முறையே 4,11 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (6-86)



கண்டி றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை றோட்டறக்ட் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ரி.ஆர். ஆர்.ராஜன் நினைவுக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் முதல் முறையாக சம்பியனான யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகத்தினர் வெற்றிக் கிண்ணத்தை விருந்தினரிடமிருந்து பெற்றபோது...

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஒக்.21

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முடிவுகள் சில வருமாறு:

*16 வயதுப் பிரிவினருக்கான போட்டியின் ஆட்டம் ஒன்றில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமும் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயமும் மோதின. இதில் சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் 3:0 என்ற கோல் கணக்கில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை வெற்றிபெற்றது.

*வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற ஆட்டம் கோல்கள் எதனையும் பெறாது சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 3 கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

*அராலி வள்ளியம்மை வித்தியாலயத்திற்கும் அராலி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் வள்ளியம்மை வித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

*18 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டத்தில் அராலி இந்துக் கல்லூரியும் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டதில் இரு அணிகளும் கோல்கள் பெறாது சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அராலி இந்துக் கல்லூரி 4:3 கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (6-86)

**'உதயன்' வெள்ளி விழா கூடைப்பந்தாட்டம்**

## நேற்றைய விறுவிறுப்பான போட்டிகளில் இறுதியாட்டங்களுக்கு 3 அணிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.21

'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இருபாலாருக்குமான அரையிறுதியாட்டம் நேற்று மாலை யாழ். மத்தியகல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றன. இதில் ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியும், பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் திருக்கும்பக் கன்னியர் மட அணி, பமிலியன்ஸ் அணிகளும் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றன.

**பமிலியன்ஸ் அதிரடி வெற்றி**

வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டம் ஒன்றில் பட்டர்பிளை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றவண்ணம் இருந்தனர். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. ஆட்டம் முடிவடைய 10 நிமிடங்கள் இருக்கையில் இரண்டு அணியினரும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்று எவர் வெற்றி பெறுவர் என கூறமுடியாத அளவுக்கு மோதினர். ஆட்டம் நிறைவில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 55:43 என்ற புள்ளிகள் அடிப்படையில் பட்டர்பிளை விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது.

**கன்னியர் மடத்திற்கு இலகு வெற்றி**

யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இராமநாதன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட அணி மோதியது. இதில் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட அணியினர் தங்களை எதிர்த்து விளையாடிய இராமநாதன் விளையாட்டுக்கழக அணியை 56:13 என்ற புள்ளி அடிப்படையில் இலகுவாக வெற்றிகொண்டது.

**சென்றலைட்ஸுக்கு வெற்றி**

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இரண்டு அணியினரும் தமது அணியே வெற்றிபெறவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் களம் இறங்கினர். ஆட்டம் தொடங்கியது முதல் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி ஆட்ட வேகத்தினை அதிகரித்து புள்ளிகளைப் பெற்றனர். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 35:17 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. மீண்டும் இரண்டாம் பாதி ஆட்டத்திற்காக ஆரம்பித்த போது ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் வேகப்படுத்தி புள்ளிகளைப் பெற்றனர். ஆட்டமுடிவில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி 73:54 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது. (6-23)

## காண்டீபன், அன்புஜன் அதிரடி ஆட்டம் சென்றல் வி.கவை வீழ்த்தியது ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம், ஒக்.21



காண்டீபன்

காண்டீபன், அன்புஜனின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க சென்றல் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம்.

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது. இதில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் சென்றல் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றஜீவ்குமார் 58 ஓட்டங்களையும், சுதர்சன் 30 ஓட்டங்களையும் யசிந்தன் 27 ஓட்டங்களையும், கபில்தேவ் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.



அன்புஜன்

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களான ஹரிவதனன் 6 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் அகிலன் 5 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிரணவன் 4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் காண்டீபன் 3 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் களமிறங்கிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 29.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக் களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது.

இதில் காண்டீபன் ஆட்டமிழக்காமல் 94 ஓட்டங்களையும் அன்புஜன் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்றல் விளையாட்டுக் கழகம் சார்பில் பந்து வீசிய துசியந்தன், சுவாதீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (6-23)

### வெற்றிபெற்ற அணிகள்

வலி.வடக்கு, ஒக்.21

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு:

**12 வயதுப் பிரிவு**

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**16 வயதுப் பிரிவு**

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி.

இந்த அணிகள் வலய மட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன. (6)




### இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.21

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நாளை வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் 15 வயதுப் பிரிவு யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி மோதுகின்றது. (6-23)

# தென்னாபிரிக்கத் தொடரில் பங்கேற்கவுள்ள பாக். வீரர்களுக்கு கடுமையான விதிமுறைகள்



ஐக்கிய அரேபியாவில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள பாகிஸ்தான் வீரர்களுக்கு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடுமையான சட்ட விதிமுறைகளை விதித்துள்ளது.

பாகிஸ்தான் அணியின் சில வீரர்கள், ஆட்ட நிர்ணய சதியில் சிக்கியதன் காரணமாகவே, இவர்களுக்கு சட்ட விதிகள் கடுமையாக்கபட்டுள்ளன எனவும், இதற்காக அவர்களுக்கு ஒரு மணித்தியால அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முகாமையாளரான இந்திகாப் அலம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடந்த கிரிக்கெட் தொடரின்போது பாகிஸ்தான் வீரர்கள் சிலர் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டனர் எனப் பெரும் சார்ச்சை ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக சம்பந்தப்பட்ட வீரர்களுக்கு ஐ.சி.சி. தடை விதித்திருந்தமையும் தெரிந்ததே.

தென்னாபிரிக்காவுடன் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக பாகிஸ்தான் அணி நாளைமறுதினம் 23ஆம் திகதி ஐக்கிய அரேபியா நோக்கிப் பயணிக்கவுள்ளது.

இரண்டு 'இருபது-20' போட்டிகள் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

# ஐ.சி.சி. கூறுவதைவிட ஆஸி. சிறந்த அணி!



மெல்போர்ண், ஒக். 21

''ஐ.சி.சி. கூறும் தரவரிசையை விட, ஆஸ்திரேலிய அணி பலமானது.''

- இவ்வாறு ஆஸ்திரேலிய வீரரான மைக் ஹஸி கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 0-2 என்ற கணக்கில் தோல்வியடைந்தமையால், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஐ.சி.சி. டெஸ்ட் அணிகளின் தரவரிசையில் 5ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவின் மோசமான தரநிலை இதுவாகும்.

இந்த நிலையில் ஐ.சி.சி. கூறும் தரவரிசையை விட எங்களது அணி பலமானது என்று ஆஸ்திரேலிய வீரர் மைக் ஹஸி கூறியிருக்கிறார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஆஸ்திரேலியாவை உலகின் 5ஆவது சிறந்த அணி என்று நான் கருதவில்லை. தரவரிசை எங்கள் அணியின் உண்மையான நிலையைப் பிரதிபலிக்கவில்லை என்றே நினைக்கிறேன்.

ஐ.சி.சியின் தரவரிசை சொல்வதை விட நாங்கள் நிச்சயம் சிறந்த அணிதான் என்பதில் சந்தேகமில்லை. நாங்கள் உலகின் 5ஆவது சிறந்த அணி என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் கிடையாது. - என்றார்.

# ஐ.பி.எல். தொடரிலிருந்து கொச்சி அணியும் நீக்கம்

மும்பை, ஒக். 21

ஐ.பி.எல். தொடருக்கான அணிகளிலிருந்து கொச்சி அணியும் நீக்கப்படக்கூடிய நிலை காணப்படுகிறது.

அடுத்த ஐ.பி.எல். போட்டியில் 10 அணிகள் பங்கேற்பதாக இருந்தது. ஆனால், சில முறைகேடுகளில் ஈடுபட்டமையால் பஞ்சாப், ராஜஸ்தான் அணிகள் ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டன. அதன் காரணமாக அணிகளின் எண்ணிக்கை 8 ஆக குறைந்தது.

தற்போது கொச்சி அணியும் நீக்கப்படும் நிலை காணப்படுகிறது.

கொச்சி அணியும், புனே அணியும், அடுத்த தொடருக்காக ஐ.பி.எல்லில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தன.

அதில், கொச்சி அணியின் பங்குகள் தொடர்பாக சில சர்ச்சைகள் எழுந்தன.

இதன் காரணமாக, இந்திய கிரிக்கெட் சபை, கொச்சி அணியின் பங்குதாரர்கள் தொடர்பான முழு விவரங்களையும் கேட்டிருந்தது. ஆனால், அந்த விவரங்களைக் கொச்சி அணியினர் கொடுக்கவில்லை.

தகவல்களைக் கொடுக்க கிரிக்கெட் சபை 10 நாள்கள் காலக்கெடு விதித்திருந்தது. நேற்றுடன் அந்தக் கெடு முடிந்துவிட்டது. ஆனால், கொச்சி அணி சார்பாக எந்தத் தகவல்களையும் அவர்கள் கொடுக்கவில்லை - கொடுப்பதற்கான எந்த வித முயற்சியிலும் ஈடுபடக் கூட இல்லை.

இதன் காரணமாக கொச்சி அணியும் ஐ.பி.எல்லிலிருந்து நீக்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் சென்னை, பெங்களூர், கல்கத்தா, மும்பை, டில்லி, டெக்கான் சார்ஜர்ஸ், புனே ஆகிய 7 அணிகள் மட்டுமே அடுத்த ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஐ.பி.எல்லில் 60 போட்டிகள் நடத்தப்பட்டன. அடுத்த போட்டித் தொடரில் 7 அணிகள் மட்டுமே பங்கேற்கக் கூடிய நிலை இருப்பதால், 46 போட்டிகளாகக் குறைக்கப்படும். ஒவ்வொரு அணியும் தலா 12 முதல் 14 போட்டிகளில் விளையாடும். அணிகளின் எண்ணிக்கை குறைவதால் வீரர்களின் எண்ணிக்கையும் குறைந்து விடும்.

இது ரசிகர்களுக்கும் பெரும் ஏமாற்றமாகவே அமையும்.



இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரரான ஷேன் மார்ஷலின் விக்கெட்டை நெஹ்ரா வீழ்த்தினார். ஷேன் மார்ஷல் ஆட்டமிழந்தபோது...

# ஏ.சி.மிலானை வீழ்த்தியது ரியல் மாட்ரிட்



மாட்ரிட்டில் நடந்த 'சம்பியன்ஸ் லீக்' ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் 2-0 என்ற கோல் கணக்கில் ஏ.சி.மிலானைத் தோற்கடித்தது.

'சம்பியன்ஸ் லீக்' முதல் சுற்று ஆட்டங்கள் சில நேற்றுமுன்தினம் நடந்தன. இதில் 'ஜி' பிரிவில் இடம்பெற்றிருந்த ரியல் மாட்ரிட்டும் ஏ.சி.மிலானும் மாட்ரிட் நகரில் மோதின.


இந்தப் போட்டியின் 13ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, 'பிரீ கிக்' மூலம் கோல் ஒன்றை அடித்தார்.

இந்த ஆரவாரம் அடங்குவதற்குள், மெசூட் ஓசில் 2ஆவது கோலை அடிக்க, ரியல்மாட்ரிட் 2-0 என்ற கோல் முன்னிலை பெற்றது.

பின்னர், பதில் கோல் அடிக்க மிலான் கடைசிவரை போராடியும் பலன் கிடைக்கவில்லை. ஆட்ட நேர முடிவின்போது ரியல்மாட்ரிட் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




# புகைப்படப் பிடிப்பாளர் மீது தாக்குதல்:
# நஷ்ட ஈடு கோரி டைசன் மீது வழக்கு



லொஸ்ஏஞ்சல்ஸ், ஒக். 21

தம்மைத் தாக்கி - அவமானப்படுத்தியமைக்காக நஷ்ட ஈடு வழங்கவேண்டுமெனக் கோரி, டைசன் மீது புகைப்படப் பிடிப்பாளர் ஒருவர் வழக்குத் தொடுத்துள்ளார்.

பிரபல குத்துச்சண்டை வீரரான டைசன், கடந்த நவம்பர் மாதம் அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குச் சென்றிருந்தபோது, விமான நிலையத்தில் வைத்து அவரை புகைப்பட நிபுணர் அன்டோனியா படம் எடுத்தார். இதனால் கோபமடைந்த டைசன், புகைப்பட நிபுணரைத் தாக்கியதுடன், அவரது கமராவையும் பறித்து உடைத்தார்.

இது தொடர்பாக டைசன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஆனால், போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி டைசனை நீதிமன்றம் விடுவித்துவிட்டது.

இந்த நிலையில் அன்டோனியா, ''லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றில் டைசன் மீது சிவில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்துள்ளார். அதில் டைசன் என்னைத் தள்ளியதோடு, எனது கமராவையும் உடைத்து அவமானப்படுத்திவிட்டார். இதற்காக டைசன் நஷ்ட ஈடு தரவேண்டும்''

''அதேவேளை, டைசன் தாக்கியமையால் எனது தண்டுவடம் பாதிக்கப்பட்டுள்ளது'' - என்று அவர் கூறியுள்ளார்.

இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வருகிறது. அதில் டைசனுக்கு அபராதம் விதிக்கபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் பிரேஸில் அணியில் இடம்?

ஏ.சி.மிலான் அணியின் நடுக்கள வீரரான ரொனால்டினோ, மீண்டும் பிரேஸில் அணியில் இடம்பிடிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த உலகக் கிண்ணப் போட்டியின்போது, ஏ.சி.மிலான் நட்சத்திரம் ரொனால்டினோ பிரேஸில் அணியில் இடம்பெறவில்லை. ''எனக்கு நட்சத்திர வீரர்கள் தேவையில்லை. ஒருங்கிணைந்து விளையாடும் பிரேஸில் அணியே தேவை'' என்று கூறிய அப்போதைய பயிற்சியாளர் கார்லஸ் துங்கா, ரொனால்டினோவைப் புறக்கணித்தார்.

பின்னர், தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பிரேஸில் காலிறுதியுடன் வெளியேறியது. அந்தத் தொடர் முடிந்ததும் பிரேஸில் பயிற்சியாளரும் மாற்றப்பட்டார். புதிய பயிற்சியாளராக மானோ மெனசஸ் பொறுப்பேற்றார். புதிய பயிற்சியாளரின் கீழ் பிரேஸில், சினேகபூர்வ ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று வருகிறது.

இதற்கிடையே, ஏ.சி.மிலான் அணிக்காக ரொனால்டினோ, சிறப்பாக விளையாடிவருகிறார். சமீபத்தில் நடந்த சீரி 'ஏ' போட்டியில் ஏ.சி.மிலான், சீவு அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் ரொனால்டினோ அற்புதமாக விளையாடினார். இந்தப் போட்டியில் அவர் காட்டிய திறமை, மீண்டும் தேசிய அணியில் இடம் கிடைக்க வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இது குறித்து பிரேஸில் பயிற்சியாளர் மானோ மெனசஸ் கூறுகையில்,

''ரொனால்டினோவைக் கூர்ந்து கவனித்து வருகிறேன். அவரை மீண்டும் தேசிய அணிக்குக் கொண்டு வருவது குறித்து பரிசீலிப்பதற்காக யோசித்து வருகிறேன்.'' - என்றார்.



## கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி

*தரம் - 5 புலமைப் பரிசில் பாராட்டு விழா - 2010*

எமது பாடசாலையில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2009, 2010ஆம் ஆண்டுகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பாராட்டுவிழா நவம்பர் முதல் வாரத்தில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. எனவே எமது பாடசாலையில் குறித்த ஆண்டுகளில் கல்வி கற்றுச் சித்தி பெற்ற பிள்ளைகளின் பெற்றோர்கள் 25.10.2010இன் முன்னர் பாடசாலையுடன் தொடர்புகொள்ளு மாறு வேண்டுகிறோம்.


தொலைபேசி இல. : 0212285414

(சி/572079)

பாராட்டுவிழா ஏற்பாட்டுக்குழு,
*கிளி/கிளிநொச்சி ம.வி.*



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2010 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெற்ற எமது கிராமத்தைச் சேர்ந்த

சந்திரன் ஜெகராசா B.A. (Hons)
- வரலாறு

மார்க்கண்டு மதியழகன் B.A. (Hons)
- தொல்லியல்

ஆகிய இருவரும் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கொடிகாமம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1235 நீலம்

கும்பம் 15 33 38 50 19-10-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 7,567,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 239,269 | 20/- | 4,785,380/- |
| 2 இலக்கங்கள் | 21,971 | 40/- | 878,840/- |
| 1 இல. + லக்கினம் | 21,824 | 60/- | 1,309,440/- |
| 2 இல. + லக்கினம் | 2,008 | 200/- | 401,600/- |
| 3 இலக்கங்கள் | 601 | 1000/- | 601,000/- |
| 3 இல. + லக்கினம் | 39 | 10,000/- | 390,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,567,500/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,966,260/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 644 | | 620,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 286,359 | | 9,586,760/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,102,225/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 12 25 32 40 ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 641 | 500/- | 320,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 644 | | 620,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-


## நாவற்குழி நூலகத்தில் மாணவர்களின் போட்டிகள்

சாவகச்சேரி, ஒக். 21

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் பொதுநூலகத்தினால் மாணவர்கள் இடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதன் பிரகாரம் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி பாலர்களுக்கு இடையிலான கதைகூறல் போட்டிகளும் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை, 26ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பாடசாலை மாணவர்களுக்கு இடையே சொல்வளம், வாசிப்பு, பேச்சு, கட்டுரை, பொது அறிவு ஆகிய போட்டிகளும் நடத்தப்படவுள்ளன - என்று நூலகர் திருமதி இ.சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நாவற்குழி பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கு மாணவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஒ-16-131)

## கஞ்சாவுடன் கைதான நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் 1,100 மி.கி. கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த நபரைப் பொலிஸார் கைது செய்து நேற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்ட நபருக்கு நீதிவான் அ.அ.ஆனந்தராஜா 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் அபராதம் செலுத்தத் தவறின் 5 மாத சிறைவாசம் அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ஒ-6)


### பிரத்தியேக வகுப்புகள்

தரம் - 8, 9, 10, 11 வகுப்புகளுக்கான கணித, விஞ்ஞான பாடங்கள் தனியாக, குழுவாக உத்தரவாதத்துடன் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0771837644 (பி.ப 4 மணியின் பின்) 0715756339

### கட்டடம் தேவை

சாவகச்சேரி, சங்கத்தானை போன்ற இடங்களில் 2,000 தொடக்கம் 2,500 சதுர அடி கொண்ட கட்டடம் அல்லது வீடு (A-9 வீதியை அண்டியதாக) பிரபல நிறுவனம் ஒன்றுக்குத் தேவை.
தொடர்பு: 0776108420

### காணி/ வீடு விற்பனைக்கு

யாழ். நகர் சுண்டிக்குழி பாடசாலைக்கு அருகில் 3 பரப்புக்குள் அமைந்த மேல்மாடி வீடும், அதனோடு இணைந்த 3பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சுற்றுலா விடுதிக்கு உகந்தது. ஞாயிறு காலை 8 - 11 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: 0773614283

கச்சாய் வீதியில் A9 இல் இருந்து 200 m தூரத்தில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773614283

### Great Way & Great Achievement

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது World Wide நிறுவனத்தில் O/L, A/L சித்திபெற்ற துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்குச் சர்வதேசத்திலும், உள்நாட்டிலும் தொழிற்பயிற்சியைப் பெற்று உயர் தொழில் வாய்ப்பைப் பெற ஓர் அரிய வாய்ப்பு. சம்பளம் தகைமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.


*Contact :-* Udayarajan,
0717494735, 0214915550

### அபூர்வ ஜோதிடம்

மாறாத நீரிழிவுப் புண்கள், கை, கால் செயல் இழக்கும் பக்கவாதம், ஆஸ்மா, கெற்பநோய் இலகுவாகக் குணமாக்கும் சிறப்பு மருந்தியல் அதிர்ஸ்ட பலன் பெறல்.
கிழமை நாள்:- 3-6 P.m.
சனி, ஞாயிறு:- 8.30 A.m - 2 P.m.
உரும்பிராய்ப் பிள்ளையார் கோயிலடி தபால் பெட்டி லேன், ஆனைக்கோட்டை. T.P:- 0773212740



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பிரதேச செயலாளராகக் கடமையாற்றி முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. C.A.மோகன்றாஸ்
(மேலதிக அரசாங்க அதிபர், முல்லைத்தீவு)

வலி.கிழக்கு (வ.ப.)
ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி.



## புதுக்கடைத் திறப்புவிழா

# NECTA SNACK BAR

No 19, GRAND BAZAAR ROAD, JAFFNA.

இன்று (21.10.2010) வியாழக்கிழமை கோலகலமாக ஆரம்பமாகிறது.



- தீபாவளியை முன்னிட்டு கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட உயர்தரமான *Bombay Sweets* இங்கே கிடைக்கும்.
- ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்


## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை

*வெளிவாரிப் பரீட்சைகள்-2009*

1. இசைமாணி/நடனமாணி முதலாம் வருடம்.
2. இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடம்
3. இசைமாணி/நடனமாணி மூன்றாம், நான்காம் வருடம்.

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தைப் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= இற்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 × 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 30-11-2010 (செவ்வாய்க்கிழமை) வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

*20.10.2010* பதிவாளர்

(இ/572075)


வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை

# ARRUL GLOBAL EXPRESS

International Courier & Cargo Service

தீபாவளி பண்டிகை கால விசேட சலுகை

தொலை தூரத்து உறவுகளுடன் உள்ளத்து அன்பை பகிர்ந்திட எந்நேரமும் உங்களுடன்.

- உலகின் சகல நாடுகளுக்கும் 24 மணித்தியாலம், 72 மணித்தியாலங்களில் கடிதங்கள், பொதிகள், மற்றும் ஆவணங்கள் ஒப்படைக்கப்படும்.
- முற்கூட்டியே நேரம் குறித்து ஒப்படைக்கும் சேவை (TDD Service).
- பொருட்கள் உரிய இடத்தை சென்றடையும் வரையான தகவல்களை உங்கள் கையடக்க தொலைபேசியில் இருந்தே அறிந்து கொள்ளும் வசதி.

10Kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு அதி விசேட கட்டணச் சலுகை

இல,1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி யாழ்ப்பாணம்

arrulgex@gmail.com

Tel : 021 222 6113

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## தங்கராசா சத்தியகுமார்

பிறப்பு 10.06.1959

இறப்பு 22.09.2010

பாசமிகு எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் ஏனைய உதவிகள் ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (22.10.2010) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தாங்கள் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சக்தி தொலைத் தொடர்பகம்,
தாமரைக் குளத்தடி,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## வைத்தியாம்பிள்ளை விசுவாசம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரந்தன் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியாம்பிள்ளை விசுவாசம் நேற்று (20.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியாம்பிள்ளை - அடைக்கலமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரிமளத்தின் அன்புக் கணவரும், வரதராசா (அலெக்ஸ்சாந்தர்), ஆனந்தராசா, இதயராசா, மேரிநிர்மலா, ரவிராசா (பிரான்ஸ்), மேரிசசிகலா, பிறேமதாசா (சாந்தி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலினி, விக்னேஸ்வரி, சகுந்தலாதேவி, ஞானசோதி (அப்பன்), சசிகலா (பிரான்ஸ்), இராசநாயகம் (சமூக சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), சுதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.10.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் நல்லடக்கத்துக்காக புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் மேற்கு, நீர்வேலி.
0778435695

தகவல்: குடும்பத்தினர்.

## சோமசுந்தரம் பத்மநாதன் (பெரியண்ணை)

(செயலாளர், அறங்காவல் சபை, சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், சண்டிலிப்பாய்)



சீரணி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பத்மநாதன் (இளைப்பாறிய விவசாயப் போதனாசிரியர்)நேற்று (20.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திராவதி (இளைப்பாறிய விவசாயப் போதனாசிரியர்)அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மாணிக்கம் சோமசுந்தரம் மற்றும் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் கரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மநேசன்,பத்மதேவன், பத்மானந்தன், பத்மசுந்தரி, பத்மரஞ்சினி, திலகவதி,பத்மஜோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுருநாதன்,குகதாசன் சேனபதி, சிவநேசன்,காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் நாகராஜேஸ்வரி , புஸ்பா காலஞ்சென்றவர்களான பரிமளபாக்கியம், அம்பிகாவதி மற்றும் வித்தியாவதி, இந்திராவதி, திலகவதி, பாலநேசன், மகேந்திரன், மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான நித்தியானந்தன் பத்மநாதன் மற்றும் காங்கேயன், செல்லத்துரை, கருணாகரன் ஆகியோரின் சகலனும்சரோஜினிதேவி, சரஸ்வதிதேவி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 23.10.2010 சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீரணிச்சந்தி,
சண்டிலிப்பாய்.
021 321 6975 (104943)

தகவல் :- குடும்பத்தினர்.

## வடமராட்சி கிழக்கு பல்கலை. மாணவர்களைப் பதியுமாறு அறிவுறுத்து

வடமராட்சி, ஒக்.21

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் பயின்று ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குக்கு தெரிவான மாணவர்கள் தமது பெயர்களை பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையில் தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப் பாடசாலைகளில் இருந்து 2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களே தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என வடமராட்சி வலயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வடமராட்சியில் 199 பேர் சித்தி

இவ்வருடம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சி கல்வி வலயத்தில் இருந்து 199 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் கரவெட்டிக் கல்விக் கோட்டத்தில் 100 மாணவர்களும், பருத்தித்துறை கல்விக் கோட்டத்தில் 96 மாணவர்களும், மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் 3 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

## 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவிப் பொருள்கள்

தென்மராட்சி, ஒக்.21

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பத்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு யுனிசெப் நிறுவனத்தின் உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

16 பேருக்கு சைக்கிள்களும், 7 பேருக்கு தையல் இயந்திரங்களும் இருவருக்கு சிறு வியாபாரத்திற்கான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலஸ்ரின் (உதயன்), யுனிசெப் நிறுவன சிறுவர் பாதுகாப்பு அலுவலர் திருமதி ச.தர்மினி, யாழ்.மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஆ.ஞானசீலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஐ-207)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.21

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார். (ஒ-ற)

## சுழற்சி முறையில் கடன் திட்டம்

தென்மராட்சி, ஒக்.21

தென்மராட்சி தெற்கு கோயிலாக் கண்டி மக்களுக்கு கெயர் நிறுவனத்தினர் சுழற்சி முறைக் கடன்களை அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக வழங்க வுள்ளனர்.

அதற்கான ஒப்பந்தம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இக்கடன்கள் வழங்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் த.தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

முதற்கட்டமாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா சங்கத்தின் ஊடாகப் பயனாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது. (ஐ-207)

## தவறிவிட்டது

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ஒருவரது திருமண அழைப்பிதழ் உள்ளிட்டு முக்கிய ஆவணங்களுடன் பொதி ஒன்று தனியார் சிற்றூர்தி நேரக்கணிப்பாளர் அமைவிடத்திற்கு அருகில் தவறிவிட்டது. அதனை கண்டெடுத்தவர்கள் ''திருமண நிகழ்வை'' கருத்தில் கொண்டு தந்து உதவுமாறு (மனித நேயத்தோடு) கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 9081936, 077 1381482
M.அன்பழகன் (இ.விஜய்)
ஞான வைரவர் கோவிலடி, கோப்பாய் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி ( C.T.B.) கமலாதேவி

ஆறுமுகம் வீதி, கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி (C.T.B.) கமலாதேவி நேற்று (20.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை.

தகவல்: சே.அரியதாசன். (வாசன்)

## திருமதி அப்புத்துரை சிவபாக்கியம்



வீ.சீ.சீ., மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், இல.2, இரண்டாவது ஒழுங்கை, பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை சிவபாக்கியம் நேற்று முன்தினம் (19.10.2010) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரம் - செல்வி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற ஆ.அப்புத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செ.அன்னம்மா, சி.தர்மலிங்கம், சி.அமிர்தலிங்கம், கு.பூமணி மற்றும் சி.இராஜலிங்கம் (J.P.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அ.ஜெயக்குமார் (பிரான்ஸ்), சி.சுகந்தினி (லண்டன்), சு.ஜெயந்தினி, அ.சாந்தினி, அ.ராம்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெ.அமலா (பிரான்ஸ்), இ.பாஸ்கரன் (ஜேர்மனி), அ.சுரேஸ்குமார், ரா.ரகுலினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் தமாரா, எமிமா, சேந்தன், நிவேதிகா, திலக்சிகா, பிரகலாதன், பிருந்திகா, திருஸ்ரிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.2, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (104946)

தகவல்: குடும்பத்தினர், அ.சுரேஸ்குமார் (மருமகன்).

# நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு நினைவில்



திருமதி மங்கையர்க்கரசி சோதிலிங்கம்

2ஆம் ஆண்டு நினைவில்



சோதிலிங்கம் பஞ்சலிங்கம்

15ஆம் ஆண்டு நினைவில்



ஏரம்பு சோதிலிங்கம்

கடந்த 01.11.2009 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அன்னை திருமதி மங்கையர்க்கரசி சோதிலிங்கம் மற்றும் 2008 இல் இறைபதமடைந்த எமது உடன்பிறப்பு சோதிலிங்கம் பஞ்சலிங்கத்தின் 02ஆம் ஆண்டு நினைவுதினம், எமது தந்தை ஏரம்பு சோதிலிங்கம் அவர்களின் 15ஆம் ஆண்டு சிரார்த்த தினம் என்பன இன்று (21.10.2010) வியாழக்கிழமை மு.ப.11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இன்று எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு. (104948)

குடும்பத்தினர்.

# டக்ளஸ் தேடப்படும் குற்றவாளி சென்னை நீதிமன்று தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

சென்னை சூளைமேட்டில் 1986 ஆம் ஆண்டு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேடப்படும் குற்றவாளிதான் - என்று சென்னை நான்காவது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

1986 ஆம் ஆண்டுச் சம்பவத்தில் திருநாவுக்கரசு என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த வழக்கு விசாரணை சென்னை நான்காவது கூடுதல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்தில் ஆஜராகாதமையால் அவரைத் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து 1994 இல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் சமீபத்தில் இந்தியா சென்ற டக்ளஸ் தேவானந்தாவைக் கைது செய்ய வேண்டும் என்று தமிழக மக்கள் உரிமைக் கழகம் சென்னை உயர்நீதிமன்றம் வழக்குத் தொடர்ந்தது. ஆனால் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படாத நிலையில் டக்ளஸ் தேவானந்தா இலங்கை திரும்பினார். அந்த வழக்கும் நிலுவையில் இருக்கிறது.

இந்நிலையில் டக்ளஸ் தேவானந்தா, தான் குற்றவாளி என அறிவிக்கப்பட்டிருப்பதை ரத்துச் செய்யவேண்டும் எனக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். நீதிபதி அக்பர்அலி இந்த வழக்கின் விவரம் குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டிருந்தார்.

அதன்படியே அமர்வு நீதிபதி பரஞ்சோதியின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், டக்ளஸை 1994 ஆம் ஆண்டு தேடப்படும் குற்றவாளி என அறிவித்து விசாரணை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது உண்மைதான் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சட்டத்தரணி வஜ்ரவேலு, சம்பந்தப்பட்ட அறிவிப்பு பொது அறிவிப்பாக முறையாக விளம்பரப்படுத்தப்படவில்லை. பத்திரிகைச் செய்திகள் வழியாகவே தெரிய வந்திருக்கிறது. எனவே விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்துச் செய்ய வேண்டும் என்று வாதிட்டார். இதையடுத்து வழக்கு விசாரணை இன்று வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த விசாரணையில் அரசுத் தரப்பில் பதில் அளிக்க வேண்டும் என்றும் நீதிபதி அக்பர் அலி தெரிவித்தார். (சி)

# தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழரின் விவரத்தை வெளியிடக் கோரி கையெழுத்துப் போராட்டம்

## 'நாம் இலங்கையர்' அமைப்பு நேற்று ஆரம்பித்தது

கொழும்பு, ஒக். 21

தடுப்பு முகாம்களிலும் சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களின் பெயர் விவரங்களை வெளியிடக் கோரி 'நாம் இலங்கையர்' என்ற அமைப்பு கையெழுத்துப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்தப்போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு மகஜர் ஒன்றில் நேற்று கையெழுத்திட்டுள்ளனர்.

'நாம் இலங்கையர்' என்ற அமைப்பின் ஏற்பாட்டில் அந்த நிகழ்வு நேற்று மாலை கோட்டை ரயில் நிலையம் முன்பாக இடம்பெற்றது.

மகஜரில் கையெழுத்திடும் நிகழ்வுக்கு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளை அரசு சந்தேகத்தின் பேரில் கைது செய்து தடுத்து வைத்துள்ளது. ஆயினும் இன்றுவரை அவர்களைப் பற்றிய எந்த விவரத்தையும் - குறைந்த பட்சம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களையாவது வெளியிட அரசு முன்வரவில்லை. தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளின் பெயர்ப்பட்டியலை நாடாளுமன்றத்திற்காவது சமர்ப்பிக்கும்படி ஜே.வி.பி. விடுத்த வேண்டுகோளையும் அரசு நிராகரித்திருந்தது.

## சடலங்கள் ஒதுங்கின

யாழ்ப்பாணம், ஒக். 21

ஊர்காவற்றுறை கடற்பகுதியில் கரை ஒதுங்கிய இரு சடலங்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று மு.ப. 10.45 மணியளவில் ஒப்படைக்கப்பட்டன.

சிதைவடைந்த நிலையில் ஒப்படைக்கப்பட்ட இச் சடலங்களை உறவினர்கள் இனங்கண்டுள்ளதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (உ-ஐ)

# அரச ஊழியருக்கு ரூ. 10,000 சம்பள உயர்வு வழங்குங்கள்

## ரவி. எம்பி. அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.21

வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது. இத்தொகை இன்றைய வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கப் போதுமானதல்ல. அரச ஊழியர்களுக்குப் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கும்படி நாங்கள் வலியுறுத் துகின்றோம்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று கொழும்பு எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

2007ஆம் ஆண்டு முதலே அரச ஊழி யர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக அரசு வாக்குறுதி அளித்து வருகிறது. ஆனால் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல்களில் அளிக்கப்பட்ட இந்த வாக்குறுதி மூன்று வருடங்களாகியும் அரசு நிறைவேற்றவில்லை. இந்த நிலையிலேயே இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசு ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்போவதாகத் தெரிவிக்கின்றது. நாளாந்தம் விஷம்போல் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செல வைச் சமாளிக்க 2,500 ரூபா அதிகரிப்பு போதாது. எனவே, பத்தாயி ரம் ரூபா வழங்கும்படி அரசை வலியுறுத்துகின்றோம் - என்றார். (சி)

# எல்.ஓ.எல்.சி. நிறுவன கட்டட அடிக்கல் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தில் எல்.ஓ.எல்.சி. நிறுவனத்தின் கிளைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 9.45 மணிக்கு வைபவரீதியாக 64/40, ஸ்ரான்லி வீதியில் இடம்பெறவுள்ளது.

மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ரால் அடிக்கல்லை நடவிருக்கிறார்.

இந் நிகழ்வையடுத்து சுப்பிரமணியம் பூங்காவில் இந்த நிறுவனம் மேற்கொண்ட திட்டங்களை ஆளுநர் திறந்துவைக்கவிருக்கிறார். (ஐ)

## 4 சிப்பாய்களுக்கும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதிட்டிருந்தார்.

இந்தப் பிணை மனு மீதான தீர்ப்பை நேற்று (ஒக். 20இல்) வழங்குவதாக நீதிவான் பெ.சிவகுமார் அறிவித்திருந்தார். இந்த வழக்கு நேற்று நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த வழக்கு விசாரணைகள் பூர்த்தியடைந்ததாலும்-

குறிப்பிட்ட சிப்பாய்கள் மூன்று மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாலும் - அவர்களுக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் பிணை வழங்கப்படுவதாக நீதிவான் நேற்று தீர்ப்பு வழங்கினார்.

பிரஸ்தாப சிப்பாய்கள் 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் -

ஒவ்வொரு எதிரியும் 3 பேரின் 5 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

எதிரிகள் வெளிநாடுகளுக்குப் பயணமாவதை தடுக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத் துக்கு உத்தரவிட்ட நீதிவான், மாதத்தில் கடைசி ஞாயிற்றுக் கிழமை எதிரிகளை அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் வைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (ஒ-ஐ)

## கப்பல் மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து, கனடா அரசு கடல் வழியான ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்துவது தொடர்பான பேச்சுகளை சர்வதேச நாடுகளுக்கிடையில் நடத்தி வந்தது. இந்நிலையில் இப்புதிய சட்ட மூலம் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இச்சட்டம் மிகவும் பலமானதாக இருக்கும் என்றும் கடல்வழியாக அரசியல் தஞ்சம் கோரி வருபவர்களின் எண்ணிக்கை நிச்சயமாகக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்றும் கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-11)

## உள்ளூராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் 51 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சிக்கு 70சதவீத பிரதிநிதித்துவமும், 49 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சிக்கு 30சதவீதப்பிரதிநிதித்துவமும் வழங்கும் வகையில் உத்தேச திருத்தங்கள் அமைந்துள்ளன. இது ஜனநாயக விரோத திருத்தமாகும். வாக்காளர்களின் உண்மையான கருத்துகள் இதில் பிரதிபலிக்கவில்லை.

ஐ.தே.கட்சி உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பாக இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. செய்தியாளர் மாநாடுகளில் உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தத்தை எதிர்ப்பதாகத் தெரிவிக்கும் அக்கட்சி மாகாண சபைகளில் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்றது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## முன்னாள் பெண்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாத இறுதியில் 500 பெண்கள் விடுவிக் கப்பட்டால் 27 பெண்கள் மாத்திரமே புனர்வாழ்வு முகாமில் எஞ்சியிருப்பர். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## போர் முடிவடைந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் போல் மேர்பி இக் குழுவிற்குத் தலைமை தாங்குகிறார்.

இந்தக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்து நிலைமைகளைப் நேரில் பார்வையிட்டனர். யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் யாழ். சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர்.

ஐரோப்பியப் பிரதிநிதிகளை வரவேற்ற அரச அதிபர், யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி விளக்கினார். தொடர்ந்து சிவில் சமூக பிரதிநிதிகளுடன் திறந்த கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

நிலைமைகளின் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடப்பட்ட போது, தற்போதைய நிலைமையில் தமக்குத் திருப்தி இல்லை என்று ஐரோப்பியக் குழுவினர் தெரிவித்தனர். போர் முடிவடைந்து விட்டாலும் பொது மக்கள் மகிழ்ச்சியாக இல்லை என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

தமது கூற்றுத் தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிகளின் கருத்துக்களையும் அவர்கள் கேட்டறிந்தனர். "போர் முடிவடைந்தமை மகிழ்ச்சியானதுதான். ஆனால், இன்றைய நிலை தொடர்ந்தால் திட்டமிட்ட - கட்டமைக்கப்பட்ட - வன்முறை தோன்றாவிட்டாலும் சிறியளவிலான வன்முறைகள் ஏற்படுவதற்கான வாய்புகள் உருவாகிவிடும்'' என சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

''போர் முடிவடைந்த சூழலில்கூட மக்களால் சுதந்திரமாக நடமாடுவதற்கோ, சுதந்திரமாகப் பேசவோ முடியாத நிலையே காணப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதே இதற்குக் காரணம். இவற்றை நீக்கினால் மட்டுமே முழுமையான சுதந்திரம் கிடைக்கும்'' என்றும் ஐரோப்பியப் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

சற்குணா பயிற்சியகம்
பதிவு இல :- VW/FIN/R/i/42/2010.
வட்டுக்கிழக்கு, சித்தன்கேணி.
மகளிருக்கான பயிற்சிகள்
புதிதாக ஆரம்பித்துள்ள எமது பயிற்சியகத்தில் புதன்கிழமை 20.10.2010 அன்று காலை 9 மணிமுதல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தையற்கலை, கேக் அலங்காரம், கூந்தல் அலங்காரம், கைவேலை, பூ வேலை, பப்றிக் வர்ணம் தீட்டுதல் - அனைத்து மாணவிகளையும் அன்புடன் அழைக்கிறோம்.
* சனி, ஞாயிறு, கிழமைநாள் வகுப்புக்களும் ஆரம்பம்.
* ஒரு செயன்முறைப்பரீட்சையின் பின் தரமான சான்றிதழ் வழங்கப்படும், இலகு தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம்.
(104924) இயக்குநர்.

கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்
வீடு கட்டுதல், திருத்துதல், மாபிள் பதித்தல், குளியலறை கட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், வர்ணம் பூசுதல் போன்ற வேலைகள் குறித்த காலத்தில் தரமாகவும் நியாயவிலையிலும் செய்துகொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTION, JAFFNA
தொடர்புகளுக்கு : 0776679564, 0213207202, 0213218088

வீடு விற்பனைக்கு
கச்சேரி-நல்லூர் வீதி 39/11, மூத்தவினாயகர் வீதியில் அமைந்துள்ள 2 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு:-077 331 8104, 021 222 8273, 077 480 2985

A/L - வரலாறு
A/L வரலாறு பாடத்தில் மாவட்ட, தேசிய மட்டங்களில் உயர் பெறுபேற்றை பெறுவதற்கு வழிகாட்டும் உங்கள் ஆசான் M.பத்மன் அவர்களின் வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்
D.M.I. யாழ்ப்பாணம். | BITSMAN'S மானிப்பாய் | NEW A.A.C. மருதனார்மடம்.
உயர்கலைக் கல்லூரி, குளப்பிட்டி.
M.பத்மன் M.A

உயிரியல் பூங்கா
BIOLOGY
பிரத்தியேக புதிய வகுப்புக்கள்
ஆரம்பம் - 22/10/2010
2011, 2012 - DAY CLASS
A.சிறிகரன் சுதுமலை தெற்கு மானிப்பாய்.
By :- சு.பொன்திவாகரன் Tel-0779771945

ஆங்கிலம் தெரிந்தும் பேசமுடியாமல் இருக்கிறதா?
இலக்கண வசனங்களை உருவாக்கியோ, வசனங்களை மொழி மாற்றியோ ஆங்கிலம் பேச முடியாது
பேசுதலின்போது சிந்தையிலிருந்து ஆங்கில வசனங்கள் வர வேண்டும்
இலக்கணக்கற்றலோ, எழுத்துப்பயிற்சியோ, மனப்பாடமோ எதுவுமின்றி
தமிழ் தொடர்பில்லாத Channel ஒன்றினை உருவாக்குவதன் மூலமாக இலகுவாக முழுமையாக சரளமாக ஆங்கிலத்தினை பேச முடியும்
சனி, ஞாயிறு 3 மாத பயிற்சி - புதிய பிரிவுகள் ஆரம்பம்
அரச, தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள், உயர்கல்வி மாணவர்கள் பயிற்சியில் சேரலாம்
MyWay English 182, Stanley Road Jafna 077 33 63 456

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.